விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka.

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 32 செவ்வாய்க்கிழமை (14.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 178



## ஐ.நா தீர்மான அமுலாக்கத்துக்கு

# இலங்கையர்களினதும் பங்களிப்பு அவசியம்!

## ஜெனிவா அமர்வில் அல் ஹுசைன் ஆரம்ப உரை

(ஜெனிவா)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து இலங்கையர்களினதும் காத்திரமான பங்களிப்பு அவசியம் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## மத்திய வங்கி ஆளுநர் பதவியில் மாற்றமில்லை

### அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் ஆளுநர் பதவியில் எவ்வித மாற்றமும் இல்லை என பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர். மேலும் கூறுகையில்,

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அந்தக் குற்றச்சாட்டுக்கள் எவையும் நிரூபிக்கப்படவில்லை.

24ஆம் பக்கம் பார்க்க....


## சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் எச்.ஐ.வி பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு!

## இரகசியம் பேணலுடன் இலகுவாக பரிசோதிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தேசிய எச்.ஐ.வி பரிசோதனை தினமான எதிர்வரும் யூன் மாதம் 28ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் எச்.ஐ.வி பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக தேசிய பால்வினை மற்றும் எச்.ஐ.வி கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க....




## என்னை ஜனாதிபதியாக்க மக்கள் விரும்புகின்றனர்

### இப்படி கூறுகிறார் கோத்தா



(கொழும்பு)

நான் ஜனாதிபதியாக வந்தால், தற்போதைய சிக்கலை சரியான வழிக்கு கொண்டு வருவேன் என்று, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு பலரும் தன்னிடம்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா ஆணையாளரிடம் நீதிக்கான கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புதிய அரசின் ஆட்சியிலும் இராணுவத்தின் தலையீடுகள், புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கள், முன்னாள் போராளிகள் மீதான அடக்கு முறைகள் தொடர்வதாக சுட்டிக்காட்டிய வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு வடக்கு கிழக்கு தமிழர் சார்ந்து ஒரு பிரதிநிதித்துவ


24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் அடாத்தாக புத்தவிகாரைகள்

### அகில இலங்கை இந்துமாமன்றம் எதிர்ப்பு



கனகராயன்குளம் புத்தவிகாரை



மாங்குளம் புத்தவிகாரை

04ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் இராணுவம் வெளியேற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

இராணுவம் மக்களுடன் இயல்பான செயற்பாடுகளை தொடர விரும்புகின்ற போதிலும், தம்மைப் பொறுத்தவரையில் இராணுவம் வடக்கில் இருந்து வெளியேற வேணடும்.

அதற்கு பதிலாக பொலிஸார் அந்த பொறுப்புக்களை ஏற்க வேண்டும் என வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தாம் யாழ்ப்பாண் இராணுவ கட்டளைத் தளபதி மகேஷ் சேனநாய

24ஆம் பக்கம் பார்க்க....

## சிறுவர் விடயங்களில் பொறுப்பு வேண்டும்

(பொலநறுவை)

சிறுவர்கள் தொடர்பான செய்திகளை வெளியிடும் போது சில ஊடகங்கள் தமது இருப்பை மட்டுமே கவனத்திற்கொண்டு செயற்படுவதுடன், சிறுவர்களின் எதிர்காலம் தொடர்பாக கவனம் செலுத்துவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஊடகங்கள் சிறுவர்கள் தொடர்பான செய்திகளை வெளியிடும் போது சிறுவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாத்து மிகுந்த பொறுப்புடன்

24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச நீதிபதிகளுக்கு விசாரணையில் இடமில்லை

### இலங்கை அரசாங்கம் மீளவும் இறுக்கம்

(கொழும்பு)

இலங்கை மீதான போர்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான உள்ளக விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு இருக்காது என அரசாங்கம் மீண்டும் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகள் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் இந்த கருத்தும் நேற்றைய தினமே மீண்டும் வலியுறுத்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையில்

23ஆம் பக்கம் பார்க்க....

## அனர்த்தநிலை பிரதேசங்களாக 6 மாகாணங்கள் பிரகடனம்.

### ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு களை அடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஆறு மாகாணங்கள் அனர்த்த நிலைமைகள் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.



24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலையாள் தேவை

இணுவிலில் அமைந்துள்ள அரைக்கும் ஆலைக்கு அனுபவம் வாய்ந்த வேலையாள் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு:
077 648 2617, 077 472 3121

## ஏல விற்பனை

யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் பாடசாலை உபகரணங்கள் 2016.06.27 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளன.

– அதிபர்

(4939)

# வாகன விபத்தில் இருவர் படுகாயம்

(கரணவாய்)

வல்வெட்டித்துறை பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதி இருவர் படுகாயங்களுக்குள்ளாகக் காரணமான கார் சாரதியினை தாம் கைது செய்துள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காரில் மோதுண்டு படுகாயங்களிற்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் படுகாயமடையக் காரணமான மட்டக்களப்பு செங்கலடியைச் சேர்ந்த 25 வயதுடைய கார் சாரதியை தாம் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம் கேள்வி அறிவித்தல்

**கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.**

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி
: 14.06.2016 இலிருந்து 28.06.2016 மு.ப.10.00 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி
: 28.06.2016 ந.ப 12.00 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி : 28.06.2016 பி.ப 02. 00 மணி

| வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (Rs.) | இக்ராட் பதிவு தரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| மல்லியோடை வீதி திருத்தம் கட்டம் - II | 1,613,375.48 | C9 | 16,200.00 | 1000.00 |
| உந்துவத்தை 9ம் ஒழுங்கை அமைத்தல் | 1,010,763.50 | C9 | 10,200.00 | 1000.00 |
| காட்டுவளவு ஒழுங்கை கொங்கிறீற் வீதி அமைத்தல் | 1,970,952.30 | C9 | 19,800.00 | 1000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவத்தின் மூலப் பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து **“செயலாளர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை”** என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபால் மூலமும், 2வது பிரதியை **“உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரா/உ.உ.ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்”** என்ற முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இக் கேள்வி அறிவித்தல் தொடர்பாக வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற செயலாளரால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

**செயலாளர்**
**நகராட்சி மன்றம்,**
**வல்வெட்டித்துறை**
**13.06.2016**

(C-4879)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10/-ஐ செலுத்திப் பெற் றுக்கொள்ளலாம். பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பங்கள்யாவும் “தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்” என்ற முகவரிக்கு 28.06.2016 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலமாக அனுப்பிவைக்க வேண்டும்.

பதவி காவலாளி (நிரந்தரம்)
சம்பள குறி இல :- 315/16
வெற்றிட எண்ணிக்கை :- 01
சம்பள அளவுத்திட்டம் :- **(13/2015 சுற்றறிக்கை) 13160 - 105 x 10 - 115 x 10 - 15360**

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-**

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 17-ம் சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) 5-ம் வகுப்பு கல்விச் சான்றிதழும், நல்ல தேகாரோக்கியத்துடன் இருத்தலும்.

**பொதுவான நிபந்தனைகள் :-**

1. வயது 28.06.2016 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. நியமனத்தின் போது சுற்றுநிருபத்திற்கமைவாக றொக்கப்பிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.
4. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
5. சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
6. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புகளும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாக பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

**14.06.2016** (C-4878) **தலைவர்**

# மரண அறிவித்தல்கள்



## திருமதி சரோஜினிதேவி செல்வரத்தினம்


இலக்கம் 31, கொண்டலடி வீதி, நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி செல்வரத்தினம் கடந்த 10.06.2016 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வரத்தினத்தின் (தேசிய லொத்தர் சபை, முன்னாள் முகாமையாளர்) அன்பு மனைவியும், றூபன் கோபிநாத் (இந்தோனேசியா), கோபிநந்தா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr.சிவஞானம், அனிற்றா ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவபாக்கியம், சிறிலிங்கம், மகாலிங்கம், இராசமலர், இராசலிங்கம், நேசமலர்,சந்திரலிங்கம், அமரர் ரவிச்சந்திரன், சசீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வராணி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் அடிஷான், றெய்ஷா, ரிஷபா ஆகியோரின் அன்பு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2016) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.31, கொண்டலடி வீதி,** **தகவல்:**
**நல்லூர்.** **குடும்பத்தினர்.**
**தொ.பே : 021 222 1551** (4940)



## நீக்கிலாஸ் முத்துத்துரை (முத்தரப்பு)

பொற்பதி குடத்தனையைச் சேர்ந்த நீக்கிலாஸ் முத்துத்துரை (முத்தரப்பு) அவர்கள் நேற்று (13.06.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (14.06.2016) செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் பொற்பதி புனித இராயப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் பொற்பதி புனித இராயப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொற்பதி, குடத்தனை.** **தகவல்:**
**தொ.பே: 077 687 2813** (C-4881) **மணி குடும்பத்தினர்.**

# யுத்தம்;பொருளாதார மாற்றம் எச்.ஐ.வி.தொற்றை அதிகரிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது

## வடக்கு சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**நீண்டகால யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட பொருளாதார மாற்றமானது எமது சமூகத்தில் எச்.ஐ.வி தொற்றை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது என வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**

எச்.ஐ.வி தொற்றை தடுப்பதற்கான வேலைத்திட்டத்தில் அதுதொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றைய தினம் யாழ்.சுகாதார சேவைகள்பணிப்பாளர்பணிமனையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் எச்ஐவி தொற்று அதிகமாக இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் அதிகமாக இருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இத் தொற்று ஏற்படுவதற்கு பல காரணங்கள் காணப்படுகின்றன.

நீண்ட கால யுத்தத்துக்கு பிறகு எமது கலை.கலாசார. பண்பாடு குறிப்பாக பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றம் எச்ஐவி தொற்றை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நோய் தொற்று தொடர்பாக கூடிய கவனம் தேவைப்படுகிறவர்கள் குறிப்பாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் யாரோ ஒருவரில் தங்கிவாழும் நிலையில் உள்ளவர்களுமே அதிகமாக கவனிக்கப்பட வேண்டியவர்கள்.

எமது மாகாணத்தில் 45 ஆயிரம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் இருக்கின்றனர். இதில் பெரும்பான்மை யானவர்கள் ஏனையவர்களின் உதவி இல்லாமல் வாழ முடியாதவர்களாக இருக்கின்றார்கள். அதிலும் மிக முக்கியமான பிரச்சினை பெண் தலைமைத்துவ குடும்பங்களில் பெரும் பாலானவர்கள் மிகவும் இளமையானவர்கள். இது பல்வேறு பிரச்சினைகளை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கு காரணமாகவுள்ளது.

மேலும் மாற்றுத் திறனாளிகள்.பெற்றோரை இழந்து ஏனையவர்களில் தங்கியுள்ளவர்கள் மீதும் கூடிய கவனம்தேவையாகவுள்ளது.

எமது சமூகத்தில் பொருளாதார ரீதியில் பெருமளவு பாதிக்கப்பட்டும். ஏனையவர்களில் தங்கி வாழ்கிறவர்கள் அதிகமாக இருப்பதனால் மறைமுகமாகஎச்ஐவிதொற்றை கூட்டுவதற்கான சந்தர்ப்பமாகவும் அமையலாம்.

எமது மாகாணத்தில் பல இடங்களில் மறைமுகமாக இயங்கும் பாலியல் தொழிலாளர்கள் அதிகமாக உருவாகி வருகிறார்கள். எமது சமூகத்தை சீரழிப்பதற்காக இவ்வாறான விடயங்கள் கண்டும் காணாததும் போல ஊக்குவிக்கப்படுவதையும் எம்மால் அவதானிக்கப்படுகிறது.

நீண்ட கால யுத்தத்தின் பின்னர் சட்டம் ஒழுங்கு எமது மாகாணத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதும் இதற்கான காரணமாகவுள்ளது. அதை மீளகட்டியெழுப்ப கடினமாக உள்ள நிலையில் சமூக சீர்கேடுகள் நடைபெறுவதற்குரிய பலபுறச் சூழல்கள் நீண்ட காலயுத்தம் உருவாக்கியுள்ளது.

எனவே எமது சமூகத்தில் எச்.ஐ.வி தொற்று பரவுவதற்கு அதிகசந்தர்ப்பம் உள்ளபடியால் எச்ஐவி தொற்று ஏற்படாத வகையில் எம்மை பாதுகாக்க கூடிய விளிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு தொற்று பரம்பலை தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பது மிக அவசியமாகிறது.

அத்துடன் ஒவ்வொருவரும் தற்துணிவுடன் எமது எதிர்கால சந்ததியை பாதுகாக்கும் நோக்குடன் எச்.ஐ.வி தொற்று தொடர்பான விழிப்புணர்வுகளையும் மேற்கொண்டு எம்மை நாம் பாதுகாத்து கொள்வதற்கு எச்.ஐ.வி பரிசோதனைகளை மேற் கொள்வது பொருத்தமான தொன்றாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பேஸ்புக் மற்றும் கூகுள் நிறுவன பிரதானிகள் இலங்கை வருகை

பேஸ்புக் நிறுவுநர் மார்க் சக்கர்பெக் மற்றும் கூகுள் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி சுந்தர் பிச்சையும் இந்த வருடத்தின் இறுதியில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





டிஜிற்றல் தொழில்நுட்ப அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க ஆகியோரின் ஏற்பாட்டினால் இவர்கள் இலங்கை வரவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் தொழில் நுட்பத்துறைக்கு தேவையான அறிவை வளர்க்க நாட்டில் புதியதொழில் நுட்பங்களை கொண்டு அரசாங்கத்தின் கொள்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் நோக்குடனேயே இவர்கள் இங்கு வரவுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தகவல்.தெரிவித்துள்ளன.இதேவேளை, கடந்த மாதங்களில் உலகம் முழுவதும் கூகுள் பலூனானது பரீட்சித்து பார்க்கப்பட்டதோடு இலங்கையிலும் பலூன் திட்டம் முயற்சி மதிப்பாய்வு செய் யப்பட்டது.

பலூன்கள் மூலம் இலங்கையிலுள்ள தொலைபேசி நிறுவனங்களின் ஒலிபரப்பு அலைகளுக்கு வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் இலங்கை பூராகவும் குறைந்த செலவில் இணையங்களை பயன்படுத்துவதற்கான ஒரு பரீட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பேஸ்புக் மற்றும் கூகுள் நிறுவனங்களின் பிரதானிகள் இங்கு வருகை தருவதானாது இலங்கையின் தொழில்நுட்பத் துறையில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவர்என நம்பப்படுகின்றது. (இ-10)

## ரணிலின் பெயருக்காக அஞ்சுகிறார் ஜனாதிபதி



மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டு விடுமோ என தான் அஞ்சுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் மத்திய வங்கியின் ஆளுநர் விடயத்தில் சிறந்த முடிவு எடுக்கப்படாத பட்சத்தில் எதிர்வரும் அரசியல் நடவடிக்கைகளின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிபல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன். தனக்கும் இந்த விடயத்தில் பல சந்தேகங்கள் உள்ளன எனவும் கூறியுள்ளார். (இ-10)

## ஜனாதிபதியையும் என்னையும் அதிகமாக தாக்குகின்றனர்

### அர்ஜூன ஆதங்கம்

(கொழும்பு)

இணையத்தளங்கள் மூலம் ஜனாதிபதிக்கும் தனக்குமே அதிகமான தாக்குதல்கள் தொடுக்கப்படுவதாக அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அடுத்ததாக அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கு எதிராக தாக்குதல் தொடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## மாணவிக்கு புதுமையான தண்டனை வழங்கிய ஆசிரியரிடம் விசாரணை

(கொழும்பு)

தம்புள்ளை பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவிக்கு ஆசிரியையொருவர் புதுவிதமான தண்டனை வழங்கிய சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சக மாணவி மீது பேனையால் கீறியமைக்கு தண்டனையாக மற்ற மாணவர்களைக் கொண்டு "நான் முட்டாள்". என்று பேனையால் மாணவியின் உடலில் எழுதியதாக இந்த ஆசிரியை மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றமை தொடர்பில் தன்னுடைய அலைபேசிக்கு மேற்கொள்ளப்பட்ட அழைப்பொன்றில் தெரிவிக்கப்பட்டதாக தம்புள்ளை வலயக் கல்வி பணிப்பாளர் டபிள்யூ. எம்.ஐ.ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து. இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## நகத்தால் கீறிய குழந்தையை அடித்துக் கொன்ற நபர் கைது

துடைப்பத்தால் தாக்கி இரண்டரை வயது குழந்தையை கொலை செய்த சந்தேக நபரொருவரை மஹியங்கன பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த குழந்தையின் தாய் கைது செய்யப்பட்ட பின்னரே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

26 வயதான திருமணம் முடித்த சந்தேக நபரான பெண் கணவருடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக வீட்டை விட்டு வெளியில், வந்து தனது குழந்தையுடன் வாழ்ந்து வந்துள்ளார். இந்தக் காலப் பகுதியில் அந்தப் பெண்ணுக்கு குறித்த சந்தேக நபருடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது. அண்மையில் அந்தக் குழந்தை சந்தேக நபருடன் விளையாடிக் கொண்டிருந்த போது தனது நகத்தினால் அவரை கீறியுள்ளது.

இதனால் கோபமடைந்த அந்தச் சந்தேக நபர் குழந்தையை துடைப்பத்தால் தாக்கிக் கொலை செய்ததாக குறித்த பெண் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக 29 வயதான குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-10)

## நல்லாட்சியை வீழ்த்த முடியாது

தற்போது நாட்டில் காணப்படும் நல்லாட்சியை சில பிரிவினைவாதிகள் ஒழிக்க நினைக்கிறார்கள். ஆனால் யாராலும் ஒருபோதும் இந்த ஆட்சியை கவிழ்க்க முடியாது என அமைச்சர் பைசர் முஸ்தப்பா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய தேசியக் கட்சியை இரண்டாக உடைத்து அதிலிருந்து சில ஆட்சியாளர்களை எடுத்து ஆட்சி நடத்தி வந்துள்ளார் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-10)

## மகிந்த ராஜபக்ஷ சர்வதேச அளவில் பொய் சொல்லத் தொடங்கி விட்டார்

### அமைச்சர் ஹரிசன் சுட்டிக்காட்டு

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்க்ஷ உள்நாட்டில் பொய்கள் சொல்லி திருப்தியடையாததால் வெளிநாடுகளுக்கு சென்று பொய் சொல்லத் தொடங்கிவிட்டதாக அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



மத்தள விமான நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நெல் மூன்று மாதங்களுக்கு முன்பு அகற்றப்பட்டு விட்டதாகவும் ஆனால் அங்கு இன்னும் நெல் களஞ்சியப் படுத் தப்பட்டுள்ளதாக ஜப்பான் சென்றுள்ள மகிந்த தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை மத்தள விமான நிலையத்தில் 4000 மெட்ரிக் தொன் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததாக அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# நெல்லியடி வர்த்தக நிலையமொன்றில் திருட முற்பட்டவர் தப்பியோட்டம்!

(கரணவாய்)


நெல்லியடி பழைய சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பட்டப்பகல் வேளையில் பொருட்களை திருடிக் கொண்டு ஓட பட்டபோது, அப்பகுதிக்கு பிறிதொரு வர்த்தகர் வந்ததைக் கண்ட திருடன் பொருட்களை போட்டுவிட்டு ஓட்டம் பிடித்துள்ளான்.

இதுதொடர்பில் நெல்லியடிப்



முற்பட்டவர் சனநடமாட்டத்தை யடுத்து பொருட்களையும் போட்டு விட்டு தப்பியோடியுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மதியம் சந்தையின் உட்புற முள்ள பாதணியகம் ஒன்றை உடைத்து உள்நுழைந்த திருடன் அங்கிருந்த பொருட்களை பை ஒன்றில் போட்டு கட்டித்தூக்கிச் செல்ல முற் பொலிஸில் செய்யப்பட்ட முறைப் பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதுடன் திருடனை அடையாளம் கண்டுள்ளதாகவும் விரைவில் திருடன் கைது செய்யப் படுவார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (செ-12)




துணுக்காய், தென்னியன்குளம் பிரதான வீதியில் நேற்றுக்காலை மாடு ஒன்று வீதிக்கு குறுக்கே பாய்ந்ததில் அதனுடன் கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியது. இதில் மூன்று பேர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-281)

# வடக்கில் அடாத்...

வடக்கு மாகாணத்தில் இராணுவத்தால் தொடர்ந்தும் புத்த விகாரைகள் அடாத்தாக நிர்மாணிக்கப் பட்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ள



பரந்தன் புத்த விகாரை

அகில இலங்கை இந்து மாமன்றம் இந்நடவடிக்கைக்கு எதிர்ப்பும் வெளியிட்டுள்ளது.

வன்னி மாவட்டத்தில் கனகராயன்குளம், மாங்குளம், பரந்தன், இரணைமடு, வட்டுவாகல், கொக்கிளாய் ஆகிய பிரதேசங்களில் புத்த சிலைகள் மற்றும் விகாரைகள்



இரணைமடு புத்த விகாரை


என்பன இராணுவத்தினரால் நிர் மாணிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இதில் கொக்கிளாய் பகுதியில் தற் போது விகாரையொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

சிங்கள பௌத்தர்களின் குடிப் பரம்பல் இல்லாத இடத்தில்கூட எதற் காக பாதுகாப்பு படையினர் விகாரைகளை அமைத்து வருகின்றனர்.

இது சமயத்தை மாற்றும் நடவடிக்கை எனவும் ஐயம் கொள்ள வேண்டியுள்ளது.

இப்படியான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கோ அல்லது உறுதுணையாக இருந்து செயற்படுவதற்கோ அரசாங்கத்தின் தரப் பிலும் உதவி நடவடிக்கைகள் இருப் பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அகில இலங்கை இந்து



வட்டுவாகல் புத்த விகாரை

மாமன்றம் தெரிவித்துள்ளது.

இதைபோன்றே திருக்கேதீஸ்வரத்தில் புத்தர் ஆலயம் கட்டப்பட முயற்சிக்கப்பட்ட போதும் நாம் எதிர்ப்பு தெரிவித்தோம்.

எனவே வடக்கில் புத்தர் சிலைகள், விகாரைகள் என்பவற்றை அடாத்தாக அமைப்பதை தடுக்குமாறு மாண்புமிகு ஜனாதிபதி மைத்



கொக்கிளாய் புத்த விகாரை

திரிபால சிறிசேனவை அகில இலங்கை இந்து மாமன்றம் கேட்டுக் கொள்கிறது என இந்து மாமன்றம் தனது அறிக்கையில் கோரியுள்ளது. (செ-7)

# தொடரை வென்றது இளம் இந்தியா

சிம்பாப்வேக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியிலும் அசத்திய இளம் இந்திய அணி, 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரையும் இந்தியா 2:0 என கைப்பற்றியது.

சிம்பாப்வே சென்றுள்ள இந்திய அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் இந்தியா வென்றது. நேற்று, ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் 2ஆவது போட்டி நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத் தடுப்பை தேர்வு செய்தது.

**சிபாண்டா அரைச்சதம்**

சிம்பாப்வே அணிக்கு பரிந்தர் ஸ்ரண் தொல்லை தந்தார். இவரது 'வேகத்தில்' ஹமில்டன் மசகட்சா (9), பீட்டர் மூர் (1) வெளியேறினர். சிபாபா (21), குல்கர்னியிடம் சரணடைந்தார்.

சாகல் வீசிய 26ஆவது ஓவரில் சிக்கந்தர் ராசா (16), எல்டன் சிகும்புரா (0) அடுத்தடுத்து அவுட்டாகினர். பொறுப்பாக ஆடிய சிபாண்டா 53 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்தவர்கள் ஏமாற்ற,

சிம்பாப்வே அணி 34.3 ஓவர்களில் 126 ஓட்டங்களுக்கு சுருண்டது.

**நல்ல ஆரம்பம்**

சுலப இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு லோகேஷ் ராகுல் (33), கருண் நாயர்(39) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. பின் அம்பதி ராயுடு நம்பிக்கை தந்தார். சிக்கந்தர் ராசா பந்தை பவுண்டரிக்கு விரட்டிய மணிஷ் பாண்டே வெற்றியை உறுதி செய்தார்.

இந்திய அணி 26.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை (129) 8 விக்கெட்டுக்களால் அடைந்தது.

அம்பதி ராயுடு (41), மணிஷ் பாண்டே (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்டநாயகன் விருதை இந்தியாவின் சாகல் வென்றார்.

மூன்றாவது போட்டி ஹராரே நகரில் நாளை நடக்கிறது.

**வைட் வோஷ்**

இந்திய அணி 3ஆவது போட்டியிலும் வெற்றி பெறும் பட்சத்தில், சிம்பாப்வே அணியை அதன் சொந்த மண்ணில் தொடர்ந்து 3ஆவது முறையாக வைட்வோஸ் செய்து தொடரை கைப்பற்றலாம். ஏற்கெனவே கடந்த 2013 (5:0), 2015இல் (3:0) சிம்பாப்வே மண்ணில் நடந்த ஒருநாள் தொடர்களை இந்திய அணி முழுமையாக கைப்பற்றியிருந்தது.

**சொதப்பல் துடுப்பாட்டம**

சிம்பாப்வே அணி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் இருந்தது. அதன்பின் சிம்பாப்வே துடுப்பாட்ட வீரர்கள் துடுப்பாட்டத்தில் சொதப்ப, அடுத்த 20 ஓட்டங்கள் எடுப்பதற்குள் மீதமுள்ள விக்கெட்டுக் களை பறிகொடுத்து 126 ஓட்டங்களுக்கு சுருண்டது.

**மெய்டன் ஓவர்**

சுழலில் அசத்திய யுவேந்திரா சாகல், தனது முதல் 4 ஓவர்களில் ஒரு விக்கெட் கூட வீழ்த்தாமல் 25 ஓட்டங்களை வழங்கினார். அதன்பின் தனது 5, 6வது ஓவரை மெய்டன்களாக வீசிய இவர் 3 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினார். மொத்தம் 6 ஓவர்களில் 25 ஓட்டங்கள் வழங்கி 3 விககெட்டுக்களை கைப்பற்றிய இவர், ஆட்டநாயகன் விருதை வென்றார்.

**தோனி பாராட்டு**

இந்திய அணித் தலைவர் தோனி கூறுகையில், "முதலிரண்டு போட்டியிலும் முன்வரிசையில் உள்ள 3 துடுப்பாட்ட வீரர்களுக்கு மட்டுமே துடுப்பாட்டம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. கடைசி போட்டியில் துடுப்பாட்ட வரிசையில் மாற்றம் செய்து மற்றையவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். இப்போட்டியில் பவுலர்கள் சிறப்பாக செயல்பட்டனர். ஒரு கட்டத்தில் 200 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துவிடுவார்கள் என்ற நிலை இருந்தது. 'மிடில் ஓவரில்' அசத்திய சுழற்பந்துவீச்சாளர்கள் சிம்பாப்வேயின் ஓட்ட குவிப்பை கட்டுப்படுத்தினர் என்றார். (க)



மழை, நோ போல் சர்ச்சைக்கு மத்தியில் நடைபெற்ற

# லோட்ஸ் டெஸ்ட் சமனிலையானது
# தொடரை வென்றது இங்கிலாந்து

நடுவரின் தவறான 'நோபோல்' தீர்ப்பு, சீரற்ற வானிலை என்பவற்றுக்கு மத்தியில் நடைபெற்ற லண்டன் லோட்ஸ் டெஸ்ட் சமனிலையில் முடிவுற்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள இலங்கை அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

முதல் இரு டெஸ்டில் வென்ற இங்கிலாந்து, 2:0 என, ஏலவே தொடரை வென்றது.

இந்நிலையில் இரு அணிகளும் மோதிய 3ஆவது மற்றும் டெஸ்ட் லண்டன், லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்தது.


முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 416, இலங்கை 288 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணி 233/7 ('டிக்ளேர்') ஓட்டங்கள் எடுத்தது.

நேற்று முன்தினம் நான்காவது நாள் ஆட்டநேர முடிவில், இலங்கை அணி 2ஆவது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 32 ஓட்டங்கள் எடுத்து, 330 ஓட்டங்களை வெற்றிக்காக பெற வேண்டியிருந்தது.



**கொடி சர்ச்சை**

இதன் 4வது நாளில் ஹேல்ஸ் 58 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, பிரதீப்



பந்தில் போல்டானார். இந்த பந்தை நடுவர் ராட் டக்கர் (ஆஸி.,) 'நோ போல்' என்றார். 'ரீப்ளேயில்' லைனில் கால்வைத்து பிரதீப் பந்துவீசியது தெரிய வந்தது. இது சரியானதாக தெரிந்தாலும், களத்தடுப்பு செய்யும் அணி மூன்றாவது நடுவரிடம் முறையிட முடியாது.

இதனை பயன்படுத்திய ஹேல்ஸ் 94 ஓட்டங்கள் எடுக்க, இலங்கை அணிக்கு சிக்கலானது. நடுவரின் தவறான தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்த இலங்கை வீரர்கள், லோர்ட்ஸ் அரங்கின் 'பல்கனியில்', தேசிய கொடியை பறக்கவிட்டனர்.

விதிகளின் படி இப்படிச் செய்வது தவறு என்பதால், இலங்கை கொடியை அகற்ற வேண்டும் என, மெரில் போன் கிரிக்கெட் நிர்வாகம் கூறியது. 45 நிமிடங்களுக்குப் பின் கொடி அகற்றப்பட்டது.

**நேற்று இல்லை**


நேற்று ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. மழை, மைதான ஈரப்பதம் காரணமாக உணவு இடைவேளைக்கு பிறகு தான் போட்டி ஆரமபமானது. இலங்கை வீரர்கள் மீண்டும் கொடியை பறக்கவிடுவர் என எதிர்பார்க்கப் பட்டது.

எனினும் அப்படி எதுவும் நடக்கவில்லை. கருணாரட்ன 37 ஓட்டங்கள் எடுத்தார். இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சில் ஒரு விக்கெட்டை இழந்து 78 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, மீண்டும் மழை வர போட்டி தடைப்பட்டது.

இறுதியில் முடிவில் போட்டி 'சமனிலையானதாக அறிவிக்கப் பட்டது. இதனால் இங்கிலாந்து அணி 2:0 எனற கணக்கில் தொடரை கைப்பற்றியது. (க)








வலிந்த மீள்சுழற்சி இயற்கையின் புத்தெழுச்சி எனும் கருப்பொருளில் தேசிய பாவனைக்கு பின்னரான பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் காக்கைதீவில் நிர்மாணிக்கப்பட்ட பிளாஸ்ரிக், பொலித்தீன் மீள் சுழற்சி நிலையம் நேற்றைய தினம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. யாழ். மாநகர சபை ஆணையாளர் பொன்னம்பலம் வாகீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தலைவர் லால் மார்வின் தர்மசிரி ,மத்திய சுற்றாடல் பணிப்பாளர் கே.எச். முத்துக்குடாராச்சி மற்றும் யாழ்ப்பாண மாநகர சபை உத்தியோகத்தர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

(படங்கள்:- கு.கஜரூபன்)

# துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் மீண்டும் ஆரம்பமாகும்

## அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு



துறைமுக நகர அபிவிருத்தி திட்டமானது மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

குறித்த திட்டத்தினால் கடற் பிரதேசங்களை அண்டி வாழும் மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ராகம -தேவத்த தேவாலயம் ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கம் விசேட வர்த்தமானி மூலம் புனித இடமாக இந்த தேவாலயத்தை அறிவித்துள்ளதுடன். போர்ட் சிட்டியை நிர்மாணிக்கவுள்ள பொறியியலாளர்கள் குழுவினால் 4 கோடிக்கு அதிகமான பண செலவில் குறித்த தேவாலயத்தின் கூரை புனரமைக் கப்பட்டுள்ளதாகவும். அதன் ஆரம்ப நிகழ்வின் விசேட விருந்தினராக தான்கலந்து கொண்டுள்ளதாகவும்அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார்.

- மேலும் பல வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட கால நிலை சீர்கேட்டினால் இந்த தேவாலயம் சேதம் அடைந்ததாகவும். இதன்போது இதனை புனரமைக்க அதிக நிதி தேவைப்படுவதால் நாம் அதை சீன அரசாங்கத்திடம் உதவி கோரினோம்.

அதனடிப்படையில் சீன அரசாங்கம் தமது பொறியியலாளர்களைக் கொண்டு இந்த தேவாலயத்தின் கூரையை கொன்கிறீட்டுகளால், அனைவரையும் கவரும் வகையில் புனரமைக்க ஒத்துக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே சீன அரசுக்கு நாம் நன்றி உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதோடு சீன அரசாங்கத்தின் குறித்த பணியானது இலங்கையின் கத்தோலிக்க மக்களை கௌவரப்படுத்துவதாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புகளை செய்ய வேண்டும்

## அமைச்சர் விஜயமுனி சொய்சா வேண்டுகோள்

நாட்டில்காணப்படும்பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை கட்டியெழுப்ப அனைவரும்அர்ப்பணிப்புகளை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் விஜித் விஜய முனி சொய்சா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அமைச்சர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்யும் தீர்மானத்தை கூட நிறுத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனை தெரிவித்தார்.பேருந்து அல்லது நடந்து சென்றாவது மக்களுக்குசேவை யாற்ற முடியும். இலங்கையின் கடைசி பகுதியில் இருக்கும் அமைச்சர் என்ற வகையில் எனக்கு சிறந்த நிலைமையில் உள்ள வாகனம் அவசியம்.

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் என்ற வகையில் நான் நாடு முழுவதும் செல்கிறேன்.

நாடு முழுவதும் பயணிப்பதால், கழுத்து மற்றும் இடுப்பு பகுதிகளில்எலும்பு தேய்ந்துள்ளது உறுதியாகியுள்ளது.

எனக்கு வழங்கப்பட்ட இரண்டு வாகனங்கள் பழுதடைந்துள்ளதால், அவை வாகன திருத்தகங்களில் போடப்பட்டுள்ளன.

இதனால், பின்னராவது எனது பணிகளுக்கு சிறந்த வாகனம் ஒன்று தேவை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# திலின கமகேயின் பிணையை இரத்துச் செய்யக் கோரிக்கை

முன்னாள் கொழும்பு மேலதிக நீதவான் திலின கமகேவின் பிணை அனுமதியை இரத்துச் செய்து, அவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு சட்டமா அதிபர் கோரியுள்ளார்.

யானைக் குட்டியொன்றை சட்டவிரோதமாக தன்னகத்தே வைத்திருந்ததாக குற்றம்சாட்டப்பட்ட திலின கமகே, அண்மையில் கங்கொடவில நீதிமன்றத்தில் சரணடைந்ததோடு, பின்னர் பிணையிலும் விடுவிக்கப்பட்டார். இது தொடர்பில் பல்வேறு தரப்புக்களிலிருந்து எதிர்ப்புக்கள் வெளியாகின.

இந்நிலையிலேயே திலின கமகேவின் பிணை அனுமதியை இரத்துச் செய்யுமாறு, சட்டமா அதிபர் கோரியுள்ளார்.

மேலும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் மீளாய்வு மனுவொன்று நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-10)

# இராசி பலன்

14.06.2016
(வைகாசி 32, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
நவமி காலை 7.17 மணிவரை
அத்தம் முன்னிரவு 7.24 மணிவரை
சுபநேரம் 10.23-11.53 மணிவரை
இராகுகாலம் 2.53-4.23 மணிவரை
பாபஹரச தசமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சூரி புத | சுக் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரட்டாதி, உத்தரட்டாதி | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | சந் |

**மீனம்** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், கௌரவமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மேடம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**இடபம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, கடன் பாக்கிகள் வராமல் இழுத்தடிக்கும்.

**கடகம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

**மகரம்** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தேகநலனில் முன்னேற்றம் ஏற்படும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வருங்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, உங்கள் திறமைகளை பலரும் பாராட்டுவார்கள்.

**விருச்சிகம்** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், சகோதர வழி ஒற்றுமை மேலோங்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்** புண்ணிய காரியங்களுக்காக செலவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஒருசில வேலைகளுக்காக சில மணி நேரம் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கன்னி** குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

# காக்கைதீவு காட்சித் தீவாகும்

## வெகு விரைவில் இது நடக்குமென வடமாகாண முதலமைச்சர் நம்பிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மாநகர சபை பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவு மீள் சுழற்சி நிலையம் ஒன்றை நிறுவி இருப்பது எமக்கு நன்மையளிப்பதாய் அமைந்துள்ளது. வெகு விரைவில் காக்கைதீவு ஒரு காட்சித்தீவாக மாறும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாணம் மாநகர சபையினால் பிளாஸ்ரிக், பொலித்தீன்கழிவு மீள்சுழற்சி நிலையம் ஒன்று காக்கை தீவுப் பகுதியில் அமைக்கப்பட்டு நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) காக்கை தீவுப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவு மீள்சுழற்சி நிலையத்தை திறந்து வைத்து உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

சுமார் 11 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த நிலையத்திற்கான அடிக்கல் கடந்த வருடம் விவசாய அமைச்சரால் நாட்டப்பட்டு ஒருவருட காலத்தினுள் மத்திய அரசினால் வழங்கப்பட்ட 6 மில்லியன் ரூபா மற்றும் யாழ். மாநகரசபையின் நிதியில் இருந்து வழங்கப்பட்ட 5 மில்லியன் ரூபா ஆக மொத்தம் 11 மில்லியன் ரூபாவில் இக்கட்டடமும் இதற்கான இயந்திர உபகரணங்களும் அமைக்கப்பெற்று இந்த நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த பூகோளத்தில் வாழும் அனைத்து உயிரினங்களுக்குமான ஒரு பெருங்கொடையாக சுத்தமான காற்று, சுத்தமான குடிநீர் ஆகிய வளங்களை எமக்கு இயற்கை நல்கியிருக்கின்றது. இந்த வளங்களை மாசுபடுத்தும் செயற்பாடுகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னராகவே ஆரம்பிக்கப்பட்டு விட்டபோதிலும் அதன் தாக்கங்கள் உயிரினங்களுக்கிடையே உணரப்படவில்லை.

எனினும் 19 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் கூடுதல் எரிபொருள் பாவனை மற்றும் வாகனங்களின் புகைபோக்கிகளினால் வெளிவிடக்கூடிய நச்சுப் புகைகள் ஆகியவற்றின் தாக்கங்களினால் பூமியைச் சுற்றி பந்து போன்று காவலிடப்பட்டுள்ள ஓசோன் படலத்தில் உருவாக்கப்பட்ட துவாரங்கள் சூரியனில் இருந்து வரக்கூடிய அல்பா, பீற்றா, காமா கதிர்களை பூமிக்குள்ளே அனுப்புவதன்மூலம்உயிரினங்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய பல்வேறு தாக்கங்கள் கடந்த இருநூறு வருடங்களுக்குள்வெகுவாகஉணரப்பட்டுள்ளதுடன் இம் மாசுபடுத்தல்களை இதன்போக்கிலேயே போகவிடுவோமாயின் இதன்தாக்கம் அளவிடமுடியாததாகிவிடும்என உணரப்பட்டு வருகின்றது.

எனவேதான் இதனை அறிந்த அறிவியலாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் சூழல் மாசடைவதை எவ்விதத்திலேனும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் என்பதில் குறியாகவுள்ளனர்.

இதன் ஓர் அங்கமாக சுற்றுப்புறச் சூழல் மாசடைவதைத் தடுக்க இன்று பல விழிப்புணர்வு நிகழ்வுகளும் வேலைத்திட்டங்களும் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் இந் நிலையில் யாழ். மாநகரசபை இந்த பிளாஸ்ரிக்/பொலித்தீன் கழிவு மீள்சுழற்சி நிலையம் ஒன்றை நிறுவி இருப்பது எமக்கு நன்மை பயப்பதாய் அமைந்துள்ளது.

வெகுவிரைவில் காக்கை தீவு ஒரு காட்சித் தீவாகமாறும் என்று நான் எதிர்பார்க் கின்றேன். I am expecting the Crow's Island to be the cynosure of all very soon.

வளரும் மற்றும் வளர்ச்சியுற்ற நாடுகள் எதிர்நோக்கக் கூடிய சூழல் மாசடைதல் என்பது சனத்தொகைப் பரம்பல், நகரமயமாக்கல், அதிகரித்ததேவை ஆகியவற்றின் காரணமாக எழுந்துள்ளது.

மிதமிஞ்சிய உற்பத்திகள் மற்றும் போட்டி உற்பத்திகள், போட்டி வர்த்தகம் ஆகியவற்றின் விளைவாக குறைந்த செலவில் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்யப் பல கம்பனிகள் போட்டிபோட்டுக்கொண்டு பொருட்களை உற்பத்திசெய்யவும் விநியோகிக்கவும் தொடங்கியதன் விளைவே இந்தப் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் பாவனையாகும். இற்றைக்கு சுமார் 30 அல்லது 35 வருடங்களுக்கு முன்னர் பொலித்தீன் பாவனை எம்மிடையே அறிமுகப்படுத்தப் பட்டிருக்கவில்லை என்று நம்புகின்றேன்.

கடைகளில் பொருட்களை வாங்குவதாகவிருந்தால் அல்லது சந்தைகளில் மரக்கறி போன்ற பொருட்களை வாங்குவதற்கும் பத்திரிகைக் கடதாசிகளும் சீமெந்துப்பைக் கடதாசிகளினால் ஆக்கப்பட்ட பைகளும் பன்புற்களால் ஆக்கப்பட்ட பைகளுமே பயன்படுத்தப்பட்டன.

இவை இலகுவில் உக்கி அழிந்துவிடக் கூடியனவாக இருந்தன. இதனால் சூழலுக்கு அதிக பாதிப்பு ஏற்படவில்லை. மாறாக பொலித்தீன் பாவனை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தேவையான அளவு பொலித்தீன் பைகள் பெருவாரியாகத் தயாரிக்கப்பட்டு வழங்கப்படத் தொடங்கியது.

எம்மவர்களும் வகை-தொகையின்றி அவற்றைக் கொள்வனவு செய்து பயன்படுத்துவது மட்டுமல்லாது கண்டபடி வீசி எறிந்துவிட்டுச் சென்றார்கள். இந்தவகையான பொலித்தீன் பைகள் இலகுவில் உக்குகின்றதன்மையற்றவை. நீண்டகாலம் நிலத்துக்கடியில் கிடந்து நிலத்தடி நீரை பழுதாக்குவது மட்டுமன்றி மண்வளத்தையும் சீரழிக்கின்றன.

இவற்றை எரியூட்டி அழிக்க முற்பட்டாலும் டைஒக்சீன் என்ற நச்சு வாயு வெளியேறி காற்றுடன் கலந்து எமது சுவாசத்திற்கு ஊறுவிளைவிக்கக் கூடியதாயிருப்பதை நாம் காண்கின்றோம். இதனால் தான் இந்தப் பொலித்தீன் பாவனையை முடிந்தளவு குறைக்குமாறு நாடு முழுவதிலும் சுற்றாடல் பாதுகாப்பு மையங்களினாலும் வேறு பல அமைப்புக்களினாலும் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகள் பொலித்தீன் பைகள் பாவனைக்குப்பதிலாக தரமான கடதாசிப்பைகளையும் நூற்பைகளையும் பாவிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

ஆனால் நாம் இன்னமும் பொலித்தீன் பைகளையும் பொலித்தீன் கடதாசிகள் என பொலித்தீன்தயாரிப்புக்களையே தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றோம்.

இது பாவனைக்கு இலகுவானது போல இருப்பினும் இக் கழிவுகளின் தாக்கங்கள் மிகப்பெரியவை. ஆகவேதான் தேசிய மட்டத்தில் பாவனைக்குப் பின்னரான பிளாஸ் ரிக் கழிவு முகாமைத்துவம் முன்னிலைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவம் எம்மால் முதன்மைப்படுத்தப் படும்போது பிளாஸ்டிக்குக்குப் பதிலாக பொருட்களைத் தாங்கக் கூடிய, கொண்டு செல்லக் கூடிய மாற்றீடுகளை நாம் அடையாளம் காண வேண்டும். வாழை நார்களில் கெட்டியான பைகளை உற்பத்தி செய்துள்ளதை நான் கண்டிருக்கின்றேன். அவற்றின் உற்பத்தி பெருக்கப்பட வேண்டும்.

தொழில் ரீதியாக நன்மை தரும் அளவிற்கு அவை எம்மால் உற்பத்தி செய்யப்பட்டால் பொலித்தீன் பாவனையை நாங்கள் முற்றாகத் தடை செய்யலாம் என்று எண்ணுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வடிகான் சேதம்



ஓட்டுமடம் -அராலி வீதியில் உள்ள வடிகான் சேதமடைந்து இருப்பதனால் கழிவுநீர் தேங்கி இருப்பதுடன் குடிநீர் விநியோக குழாயும் சேதமடையும் நிலையில் காணப்படுகிறது. இதனால் வீதிப் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் சிரமத்தினை எதிர்கொள்கின்றனர். (இ-91)

# திருமறைக் கலாமன்ற கூத்துக் கலைக்கடல் எதிர்வரும் 18,19ம் திகதிகளில் நடைபெறும்

ஈழத்தமிழர்களின் மரபு வழிக் கலைவடிவமான நாட்டுக் கூத்துக் கலையை அழிய விடாது பேணும் முயற்சியின் ஒரு அங்கமாக திருமறைக் கலாமன்றம் நடத்தும் கூத்து விழா இம்முறை 'கூத்துக் கலைக் கூடல்' என்னும் பெயரில் எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) இல,238 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட மரபு வழிக் களரியில் நடைபெற வுள்ளது.

அரங்க அளிக்கைகள், கருத்தமர்வு, கண்காட்சி, நூல்வெளியீடு என பல்வேறு நிகழ்வுகளுடன் இடம்பெறவுள்ள **கூத்துக்கலைக் கூடல்** நாட்டுக்கூத்து ரசிகர்களுக்கும், நாடக ஆர்வலர்களுக்கும், மாணவர்களுக்கும்பெருவிருந்தாக அமையவுள்ளது.

கூத்துக்கலைக் கூடலின் முதல் நாள் நிகழ்வுகள் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். முதல்நாள் நிகழ்வுகளின் அரங்க அளிக்கைகளாக முல்லைத்தீவு, முள்ளியவளை காட்டா விநாயகர் கலாமன்றம் வழங்கும் **கோவலன்கூத்து** (முல்லைமோடி), சுழிபுரம், அண்ணா முத்தமிழ் கலைக் கலா நாடக மன்றம் வழங்கும் **தர்ம புத்திரன்** (வடமோடி நாட்டுக்கூத்து), கட்டுவன், சிவப்பிரகாசம் குழுவினர் வழங்கும் **வசந்தன் கூத்து** ஆகியன இடம் பெறவுள்ளன.

கூத்துக் கலைக்கூடலின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் 19ஆம் .திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இல.286, பிரதான வீதியாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் ஆரம்பமாகும். இதன் போது கூத்து தொடர்பான **கருத்தமர்வும், கண்காட்சியும்** இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 6 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகும் நிகழ்வுகளில் முதல் நிகழ்வாக **அற்றைத்திங்கள்** கூத்துருவ நாடக நூல்வெளியீடும் அதனைத்தொடர்ந்து அரங்க அளிக்கைகளும் இடம்பெறும். இதன்போது மட்டக்களப்பு, கன்னங்குடா பருத்திச்சேனை, கலைமகள் கலைக் கழகம் வழங்கும் **அலங்காரரூபன்** (தென் மோடி நாட்டுக்கூத்து), மன்னார், பேசாலை விழிகள் கலாமுற்றம் வழங்கும் **இராம பாணம்** (மாதோட்ட பாங்கு), திருமறைக் கலாமன்றம் வழங்கும் **எஸ்தாக்கியார்** (தென் மோடி நாட்டுக்கூத்து) ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (இ-10)



ஜே/78 கிராம சேவையாளராக பணிபுரிந்த நாகலிங்கம் சுந்தரராசாவின் பணி நயப்பு விழாவும் மணி விழாவும் நேற்று முன்தினம் அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தீவகம் தெற்கு பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரமும் யாழ்.பிரதேச செயலர் பொ.தயானந்தாவும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்: அரவிந் ஸ்ரூடியோ)

## பசில் ராஜபக்ஷ வளர்த்த

# நாய்களை பராமரித்த இராணுவ சிப்பாய்கள்

பசில் ராஜபக்ஷ பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்த கடந்த கால ஆட்சியின் போது, அவரது விலை மதிப் ஈன நாய்கள் இரண்டை பராமரிக்கும் பொறுப்பானது 6 இராணுவ சிப்பாய்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த இராணுவ சிப்பாய்கள் பசிலின் நாய்களை பராமரித்தல், உணவுகளை வழங்குதல், மருந்து கொடுத்தல்,சொல்லும் கட்டளைகளுக்கு கீழ்ப்பணிய வைத்தல் போன்ற பயிற்சிகளை வழங்கி வந்துள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

குறித்த இராணுவ சிப்பாய்கள் "நாய் அணி" என்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பசில் ராஜபக்ஷ கோல்டன் ரிட்ரிவர் எனும் இனத்திலான நாயை அமெரிக்காவில் இருந்து கொண்டு வந்ததாகவும் இதன் பெறுமதி 7 இலட்சம் ரூபா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் மற்றுமொரு நாய் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளதோடு, இதன் பெறுமதி 2 இலட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரண்டு நாய்களை பராமரிப்பதற்கே குறித்த இராணுவ அணியினர் பயன்படுத்தப்பட்டதாகவும், இந்த நாய்கள் குளிருக்கு மாத்திரமே பழக்கப் பட்டதால் பசிலின் வீட்டில் ஏசி அறையிலேயே நாய்கள் வளர்க்கப்பட்டு வந்ததாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

இதேவேளை, இலங்கையில் அதிக விலையுடனான நாய்கள் இருப்பது பொலிஸ் திணைக்களத்திடமும், இராணுவத்தினரிடமும் மட்டுமேயாகும்.

எனினும் அவற்றைவிட பெறுமதியான நாய்களையே பசில் ராஜபக்ஷ வளர்க்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)




**Assemble Of God Emmaanuvel**

**தெய்வீக சுகம் அளிக்கும் ஜெய ஊழியம்**

நோய் வாய்ப்பட்டோர், பில்லி சூனியம், மாந்திரிகை கட்டுகள், குழந்தை இன்மை, குடும்பப் பிரச்சினைகள், திருமணம் அமையாதவர்கள் சகலவற்றுக்கும் ஏற்ற வல்லமையான ஊழியம் செய்வதற்கு (U.K) இல் இருந்து போதகர் டேவிட்டை 14.06.2016 இல் இருந்து ஒரு மாதத்திற்குள் 14.07.2016 வரை சந்திக்கலாம்.

தம்புவத்தை,
ஏழாலை மேற்கு, ஏழாலை.
டேவிட் U.K.:- 076 983 9038,
077 852 0121

USAID
"Civil Society Initiatives to Promote the Rule of Law in Sri Lanka"

**உரிய தருணத்தில் இலவச சட்ட ஆலோசனை, சட்ட சேவை மற்றும் வழிகாட்டல்கள்**

வாரத்தில் 5 நாட்கள் (திங்கள் - வெள்ளி ) காலை 9.00 - மாலை 5.00 மணிவரை

எம்மிடம் கீழ்வரும் விடயம் சம்பந்தமாக நீங்கள் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்

*சிறுவர் துஷ்பிரயோகம்*
*பாலியல் வன்முறைகள்*
*குடும்ப வன்முறைகள்*
*ஏனைய நெருக்கீட்டு நிலைமைகள்*

இலவச சட்ட சேவை பிரிவு
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல.07, இரட்ணம் லேன்,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:- 021 222 4398, 021 321 5144

மேலதிக இலவச சட்ட சேவை பிரிவுகள் - வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில்.

**நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை**

**கலைமாமணி**

**Dr.S.S. சர்மா குருஜீ**

**076 725 6024** (C-4662)

**நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்**

**G.V.L-PVT LTD இன் முகாமைத்துவத்துடன் கூடிய வேலை வாய்ப்பு கற்கைநெறி**

G.V.L. PVT LTD ஆகிய எமது கம்பனியினர் BUSINESS STUDIES (வியாபார கற்கை நெறியினை ஆரம்பிக்க இருப்பதால் தகுதி உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. O/L, A/L முடித்த ஆண், பெண் இருபாலாரும் பதிவுகளை மேற்கொள்ளலாம். இதற்கான கட்டண அறவீடுகள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். வகுப்புக்கள் வெள்ளி- ஞாயிறு வரைக்கும் நடைபெறும்.

வகுப்புக்கள் நடைபெறும் இடம்:- கிறீன் விஷன் லங்கா பிறைவேற் லிமிற்றட்
வியாபாரக் கிளை
கரந்தாய், பளை

குறிப்பு:- கற்கைநெறி முடிந்த பின் 6 மாத காலப் பயிற்சியின் பின் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. (4934)

**தொடர்புகளுக்கு:- 076 826 8927, 076 826 8926, 021 492 7605**

**இணுவில் கந்த சுவாமி கோவில்**



**இன்று ஐந்தாம் திருவிழா (14.06.2016)**

*இணுவைப் பதியிற் கோவில் கொண்டு*
*எல்லோருக்கும் அருள்பவனே*
*கனிவை முகத்திற் தேக்கி வைத்துக்*
*காட்சி கொடுக்கும் சிவன் மகனே*
*அடியார் குறைகள் தீர்ப்பாய் நீ*
*அவலம் நீக்கிக் காப்பாய் நீ*
*மிடியும் பிணியும் அணுகாமல்*
*மேன்மை தந்து வாழ்வளிப்பாய்*
*உந்தன் கோவில் விழாக்காண*
*ஓடி வருவார் பக்தரெல்லாம்*
*சிந்தை மகிழ்ந்தே சிரித்திடுவாய்*
*தீமை யாவும் எரிந்திடுவாய்*

இணுவை செந்தூரன்

**அனுசரணை: ஐந்தாம் திருவிழா உபயகாரர்கள்**

**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா:27<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/ கனடா PR<br>தொ.இ: B/5924 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 31சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/5971 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 50 செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: B/5925 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 43<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5973 |
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 13<br>தகைமை/தொழில்:BSc,MSc/ விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/5927 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 9<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5975 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5929 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 13சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5976 |

**கல்யாண மாலை**


(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில்
## ஆசிரியர்கள், மாணவர்கள் வைத்தியசாலையில்
## பாடசாலை மூடப்பட்டது

(பரந்தன்)

**கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிளி/கண்டாவளை மகாவித்தியாலயத்திற்கு வெளியே காணப்பட்ட குளவிக்கூடு ஒன்று கலைந்ததையடுத்து குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் அப்பாடசாலையைச் சேர்ந்த 17 மாணவர்கள், 4 ஆசிரியர்கள், சமையல் வேலை செய்யும் ஒருவர் ஆகியோர் கிளிநொச்சி தர்மபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.**



இச்சம்பவம் நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த பகுதியில் திடீரென வீசிய சுழல் காற்றையடுத்து குளவி கூடு ஒன்று கலைந்து குளவிகள் பாடசாலை வளாகத்தினுள் நுழைந்ததையடுத்து ஆசிரியர்கள், மாணவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகினர்.

இருப்பினும் குறித்த பாடசாலையில் இருந்த மாணவர்களை வெளியேற்றுவதற்காக ஆசிரியர்கள் முயன்ற போதிலும் அது கைகூடவில்லை.

இதனால் அப்பாடசாலையைச் சேர்ந்த 4 ஆசிரியர்கள் பலத்த குளவி கொட்டுக்கு இலக்காகியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பாடசாலையில் கல்வி செயற்பாடுகள் நேற்றைய தினம் நிறுத்தப்பட்டு பாடசாலை மூடப்பட்டது.

குறித்த குளவிகள் அப்பகுதியில் பரவலாக தொடர்ந்தும் காணப்படுவதனால், பிரதேச மக்களும் அச்சத்துடன் காணப்படுகின்றனர். குளவி கொட்டுக்கிலக்கானவர்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த வைத்தியசாலை பொறுப்பதிகாரி, பாரதூரமான நிலை காணப்படவில்லை என்வும், குளவி கொட்டுக்கிலக் கானவர்களில் பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குவர் என குறிப்பிட்டார்.

அவர்களின் நிலை தொடர்பில் தாம் தொடர்ந்தும் அவதானம் செலுத்தி வருவதாகவும், பாரதூரமான நிலை ஏற்படின் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (2-312-15)

# பள்ளிமுனை 25 வீட்டுத்திட்ட காணியில் இருந்து கடற்படையினர் வெளியேற மறுப்பு
## மீட்டுத்தருமாறு மக்கள் கோரிக்கை

(மன்னார்)

மன்னார்; பள்ளிமுனை 25 வீட்டுத்திட்டத்திலுள்ள பொது மக்களின் காணிகளில் தற்போது நிலை கொண்டுள்ள கடற்படையினரை வெளியேற்றி இடம்பெயர்ந்த மக்களை அக்காணிகளில் மீளக்குடியேற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள போதும், குறித்த காணிகளில் இருந்து வெளியேற கடற்படையினர் எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லையென இடம்பெயர்ந்துள்ள பள்ளிமுனை 25 வீட்டுத் திட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார், பள்ளிமுனை கிராமத்தில் கடற்கரையை அண்டிய பகுதியில், பொது மக்களுக்குச் சொந்தமான 25 வீட்டுத்திட்ட கிராமத்திலுள்ள காணிகள் மற்றும் வீடுகளில் கடற்படையினர் முகாம்களை அமைத்துள்ளனர்.

கடந்த 1990ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி இராணுவத்தினர் இந்த வீட்டுத்திட்டத்தினுள் உட்புகுந்த நிலையில் குறித்த வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்து வந்த மக்கள் வெளியேறினர்.

பின்னர், நிர்வாக வசதியாக பொலிஸார் அங்கு இணைந்து கொண்டனர்.

1995ஆம்ஆண்டுமுதல்2000ஆம்ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இராணுவம் குறித்த வீட்டுத்திட்டத்தில் இருந்து வெளியேறிய நிலையில் பொலிஸாருடன் இணைந்து கடற்படையினர் செயற்பட்டனர்.

இந்நிலையில், குறித்த காணிகளிலுள்ள படையினரை வெளியேற்ற அக்கிராம மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். ஆனால், இதுவரை பயனளிக்கவில்லை என அம் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இம்மக்களின் சொந்த வீடுகள் மற்றும் காணிகள் கடற்படையினரினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில், 1990ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலான சுமார் 26 வருடங்களுக்கு மேலாக பள்ளிமுனை 25 வீட்டுத்திட்ட மக்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியிருக்க வேண்டியுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமது காணிகளை மீட்டுத்தருமாறு வலியுறுத்தி, பள்ளிமுனை 25 வீட்டுத்திட்ட மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்த போதும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, நல்லாட்சி அரசாங்கம், படையினர் வசம் இருக்கின்ற மக்களின் காணிகளை மீட்டுக்கொடுக்கும் இச்சந்தர்ப்பத்தில் மன்னார் பள்ளிமுனை கடற்கரையோரமாக உள்ள 25 வீட்டுத்திட்ட காணிகளையும் மீட்டுக்கொடுக்க உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)




# பேருந்து சாரதிகளின் வாய்த்தர்க்கத்தினால் பயணிகளின் பயணத்தில் தாமதம்
## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரை கவனத்தில் கொள்ளுமாறு கோரிக்கை





விசுவமடு பகுதியில் இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்துக்கு குறுக்காக தனியார் பேருந்து நிறுத்தப்பட்டமையையடுத்து இரு சாரதிகளுக்கிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டதாக தெரிவிக்கின்றனர்.

தொடரும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் இ.போ.ச. பேருந்தினருக்கும் இடையில் ஏற்படும் பிரச்சினைகள் வாய்த்தர்க்கங்கள் எப்போது தீரும் என அவர்கள் கேள்விஎழுப்புகின்றனர். இந்நிலையில் அண்மையில் போட்டி போட்டு ஓடி ஒட்டுசுட் டானில் விபத்து ஒன்று இடம்பெற்றமையும் இவ்வாறு போட்டி காரணமாக அடிபட்டு பல வழக்குகள் நீதிமன் றத்தில் இடம்பெற்றுநீதிமன்றம் எச்சரித்தும் வடக்கு மாகாண போக்குவ ரத்து அமைச்சர் பலதடவை இணைந்த நேர அட்டவணை நடைமுறைப்படுத்துகிறது என்று கூறியும் இவ்வாறான சண்டைகள் இன்னும் குறையவில்லை.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரே மக்களின் மகிழ்ச்சியான பயணத்திற்கு வழி செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

# ஆற்றுக்குக் குறுக்காக பாலம் அமைக்க மதிப்பீடுகளை மேற்கொள்க
## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்பு



(பனிக்கன்குளம்)

முறிகண்டி - ஜெயபுரம் வீதியில் அமைந்துள்ள அக்கராயன் சந்தியில் காணப்படும் ஆற்றுக்கு குறுக்கான பாலம் தாழ்வான நிலையில் காணப்படுகின்றது.

இதனால் மழை காலங்களில் குறித்த பாலத்தின் மேலாக 5 அடிக்கு மேல் வெள்ள நீர் பாய்வதனாலும் ஒரு வாரத்திற்கு மேலாக அப்பாதை தடைப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக அதனூடாக நாளாந்தம் பாடசாலைகள், வைத்தியசாலை, நகரபகுதிக்கு பயணம் செய்யும் அப்பகுதியை சேர்ந்த 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திப்பதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த இடத்திற்கு சென்ற வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் மேற்படி பாலம் வீதி அபிவிருத்தி திணை க்கஎம், நீர்ப்பாசன திணைக்களம் என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ளமையினால் அத்திணைக்கள அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடினர்.

இதன்போது குறித்த பகுதியில் தரமான போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத பாலம் ஒன்றை அமைப்பதற்கு மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்தார்.

இதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# ‘நீந்திக்கடந்த நெருப்பாறு’ நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

நா.யோகேந்திரநாதன் எழுதிய ‘‘நீந்திக்கடந்த நெருப்பாறு’’ எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கலாநிதி க.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் , சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நூலின் ஆய்வுரையை கிளி/திருவையாறு மகாவித்தியாலய ஆசிரியர் சு.லோகேஸ்வரன் மற்றும் கிளி/மத்திய ம.வி ஆசிரியர் அ.சத்தியானந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

எமது மண்ணில் இடம்பெற்ற பெரும் போரையும் அந்தப்போரில் நடந்த உண்மைகள், அவலங்களை சித்தரிக்கும் நூலாக இந்நூல் வெளிவருவது குறிப்பிடத்தக்கது. (2-254)



வவுனியா மாவட்டத்தில் பெரும்பான்மையின மக்கள் வாழும் பிரதேசமான போகஸ்வெளவவில் சிறுநீரக நோய்த்தடுப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்ட போது... (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# 48 ஆயிரத்து 838 பேருக்கு 2015இல் மலேரியா பரிசோதனை

## கிளிநொச்சி பிராந்திய மலேரியா கட்டுப்பாட்டு இயக்க பொறுப்பு மருத்துவ அதிகாரி சுட்டிக்காட்டு

**கிளிநொச்சி மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு 49 ஆயிரத்து 838 பேருக்கு மலேரியா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என கிளிநொச்சி பிராந்திய மலேரியா கட்டுப்பாட்டு இயக்கத்தின் பொறுப்பு மருத்துவ அதிகாரி வைத்திய கலாநிதி ம.ஜெயராசா தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் அண்மையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டிற்கு பின்னர் மலேரியா நோய் முற்றாக ஒழிக்கப்பட்டிருக்கின்ற போதும் அது தொடர்பான தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.வைத்தியசாலைக்கு காய்ச்சல், சாதாரண சிகிச்சைகளுக்காக வருகின்ற நோயாளிகளிடமிருந்து குருதிப் படலங்கள் பெறப்பட்டு பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கடந்த 2015 ஆம் ஆண்டு 49 ஆயிரத்து 838 பேரிடம் இவ்வாறு இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் எவரிடமும் நோய் தொற்று காணப்படவில்லை. எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக மலேரியா தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெவித்தார்.

2013 ஆம் ஆண்டுக்கு பின்னர் மலேரியா நோயாளர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் இல்லாத போதும் குருதி பரிசோதனை நடவடிக்கைகளை நாம் கைவிடவில்லை. 2013 இல் 50952 பேருக்கும்,2014 இல் 50202 பேருக்கும் குருதிப் படலங்கள் பரிசோதனை மேற்கொளப்பட்டுள்ளது.

தங்களின் இந்த நடவடிக்கைகளுக்கு மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் மருத்துவர் ஜெயராசா தெரிவித்தார். (2-312)

### யுவதியை காணவில்லை

(மல்லாவி)

நெடுங்கேணி ஒலுமடு பகுதியில் 17 வயது யுவதி ஒருவரைக் காணவில்லையென நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒலுமடுவேலடியைச் சேர்ந்த பிரஸ்தாப யுவதி கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியாவுக்கு தையல் பயிற்சிக்கான பொருட்கள் வாங்குவதற்காக சென்ற போது காணாமற்போயுள்ளார் என நெடுங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போது எந்தவித தகவலும் கிடைக்கப்படவில்லை என பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

யுவதி தொடர்பாக யாராவது கண்டால் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறு உறவினர்கள் கேட்டுள்ளனர். (2-15-250-281)

# சமுதாயம் சார்ந்த சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்ட 32பேர் குடும்பங்களுடன் இணைவு

## வவுனியா மாவட்ட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் தெரிவிப்பு

கடந்த 5 மாதங்களில் வவுனியா நீதிமன்ற சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களத்தில் இருந்து 32 பேர் குடும்பங்களுடன் இணைந்து கொண்டுள்ளனர் என மாவட்ட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் கே.எம். நஜீம் தெரிவித்துள்ளார்.

சமுதாய சீர்திருத்த நடவடிக்கை குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் நீதிமன்றங்களில் சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களம்




உயரிய நோக்குடன் குற்றமிழைத்தவர்களை சமூகத்தில் கௌரவமாகவும், நற்பிரஜையாகவும் வாழ வைக்கும் நோக்கில் பல்வேறு சமுதாயம் சார் சீர்திருத்த அடிப்படையிலான வேலைகளை செய்து வருகின்றது.

அந்த வகையில் வவுனியா நீதிமன்ற வளாகத்தில் சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களம் கடந்த ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையிலான காலப் பகுதியில் நீதிமன்றத்தினால் சமுதாயம் சார் சீர்திருத்த பணிகளில் ஈடுபடுமாறு கட்டளையிடப்பட்ட 198 பேரில் 32 பேர் சமுதாயம் சார் சீர்திருத்த செயற்பாட்டை மேற்கொண்டு கட்டளைகளை நிறைவேற்றியமையால் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சிலர் குற்றம் புரிந்து நீதிமன்றுக்கு வரும்பட்சத்தில் அவர்களுக்கான தண்டப்பணம் அல்லது தண்டப்பணத்துடன் சிறை என வருகின்ற போது தண்டப்பணம் அல்லது சிறைத் தண்டனைக்கு பதிலாக சமுதாய சீர்திருத்த கட்டளை என நீதிமன்ற கட்டளையின் படி அவர்களை பொறுப்பேற்கும் சமுதாயம்சார்சீர்திருத்த திணைக்களம் அவர்களுக்கான நேர் வழிகாட்டல்கள், சீர்திருத்தப் பணிகள், நிகழ்வுகள், விழிப்புணர்வுகள், தொழில் வழிகாட்டல்கள், வைத்திய ஆலோசனைகள், சிகிச்சைகள், தனியாள் அபிவிருத்திக் கருத்தரங்குகள், ஆற்றுப்படுத்தல்கள், சமய கருத்துக்கள் என்பவற்றை வழங்கி வருகின்றது. இதனை பூர்த்தி செய்த 32 பேரே விடுவிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# வடபகுதி மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு விசேட கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன

## ஜனாதிபதி தெரிவிப்பு



வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரம், கல்வி தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு, அரசாங்கம் விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், வவுனியாவில் நேற்று முன்தினம் ஜனாதிபதியின் தலைமையில் பல நிகழ்வுகள் இடம்பெற்றன. இதனையடுத்து, வவுனியா போகஸ்வெளவ மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதி தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

"நட்டின் பல்வேறு பிரதேசங்களில் வாழும் வெவ்வேறு வகையான மக்கள் குழுவினர்கள் மீது, வெவ்வேறு விதமாக கவனம் செலுத்தப்படுவதாக ஒருசிலர் குறிப்பிட்டு வருகின்றனர். எனினும், நாட்டின் அனைத்து மக்களது கருத்துக்களுக்கும் செவிசாய்த்து, அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதே எமது அரசாங்கத்தின் கொள்கை.

அதுபோன்றே, வடக்கு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் அரசு பாடுபடுகிறது. குறிப்பாக வடபகுதி மக்கள் எதிர்நோக்கியுள்ள கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கான விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அதேபோன்று வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன" என்றார்.

இதேவேளை, போகஸ்வெளவ மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் 40 கிலோ மீற்றர்தூரம்கொண்டபாதையை புனரமைத்து தருமாறு மக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, தாம் இதுகுறித்து தனிப்பட்ட ரீதியில் கண்டறிந்து துரிதமாக வீதியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார். (2-250)



சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு வாரமான மே31 முதல் ஜூன் 12 ஐ முன்னிட்டு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தால் நேற்று கவனயீர்ப்பு பேரணி ஒன்று முல்லைத்தீவு நகரில் இடம்பெற்றது.இதில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் எஸ். குணபாலன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் மக்கள் என பலர் கலந்து கொண்டு புகைத்தல் மற்றும் மதுவுக்கெதிரான கண்டனங்களை முன்வைத்திருந்தனர். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# சிறிய சம்பவங்களால் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லை

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

**நாட்டில் ஏற்படும் சிறிய சம்பவங்களால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.**



அத்துடன் சாலாவை முகாம் வெடிப்பை மையப்படுத்தி அரசியல் லாபம் தேட பலர் முனைவதாகவும், தேசிய பாதுகாப்பிற்கு இடர் ஏற்படுவதற்கு அரசாங்கம் இடமளிக்காது என்றும் அவர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் குறித்த வெடிப்பு சம்பவத்தினால் 8000 தொன் ஆயு தங்கள் அழிவடைந்துள்ளதோடு, 75 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், அதில் 35 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் ஊடகங்கள் 300 வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவித்திருப்பதானது பொய்யான தகவல் என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# கிழக்கு மாகாணத்துக்கென தனியான நிதியம் வேண்டும்

கிழக்கு மாகாணத்துக்கென தனியான நிதியம் உருவாக்கப்பட வேண்டும் என அம்மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதாரப் பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மட்டக்களப்பு, திராய்மடுப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், "கிழக்கு மாகாணத்துக்கென தனியான நிதியம் உருவாக்கப்பட வேண்டும். எமது மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக புலம்பெயர் அமைப்புகள் மற்றும் புலம்பெயர்ந்த மக்கள் அந்த நிதியத்தின் ஊடாக உதவத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால், அந்தப் பணம் மத்திய அரசாங்கத்தின் ஊடாக வருவதை விரும்பவில்லை என்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைய வேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாடுபட்டுக்கொண்டிருந்தாலும், இருக்கின்ற மாகாணத்துக்கு சகல அதிகாரங்களும் பெறப்பட்டு சுயாட்சி அதிகாரம் மாகாணத்தில் இருக்க வேண்டும்என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் மிகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார் எனவும் அவர் மேலும் கூறினார்.

# ஐ.தே.கவின் ஜப்பான் கிளைத்தலைவரால் மகிந்தவுக்கு நினைவுச்சின்னம் அன்பளிப்பு



ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜப்பானிலுள்ள இலங்கையர்களை சந்தித்தார். இந்த சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் பெரும் எண்ணிகையிலான மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது ஐக்கிய தேசிய கட்சியின் ஜப்பான் கிளைத் தலைவரினால் மகிந்த ராஜபக்ஷவுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. குறித்த சம்பவம் தற்பொழுது பேசும் பொருளாக மாறியுள்ளது.

இந்த மக்கள் சந்திப்பில் விமல் வீரவன்ச, ரோஹித அபேகுணவர்தான உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றினர். (இ-10)

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு ஒன்பதாம் திருவிழா



### காசினி போற்றும் நாகபூஷணி

தேசு புகழ் தெய்வநாயகி தீந்தமிழ் யாழ்.அரசி
வீசுதென்றால் கடல்நடுவில் விழிப்புடனே வீற்றிருந்து
மாசுநிறை மக்கள் தம் மனக்கவலை போக்கிடவே
பாசமலர் தான் சொரிந்து பக்குவமாய் காப்பவளே
நேசமுடன் நெஞ்சினிலே நினைந்துருகி அழுகின்றோம்
ஆசீர்வதித்திடம்மா ஐந்துதலை நாகநந்தினிய நாயகியே
காசினியில் எமையென்றும் காத்துநிதம் வரமருளும்
காமாட்சி, மீனாட்சி கருநாக பூஷணியே தாயாரே!

ஏ.வீரசிங்கம், அரியாலை

### அலைகடல் ஓரத்திலே



அலைகடல் ஓரத்திலே
அமைந்த நயினையிலே
கலைவடிவாய் திகழும்
உன்திருக் கோயிலிலே
சிலை வடிவாய் இருந்து
உலகேழும் காப்பவளே
வருகின்ற அடியவரின்
குறைகளை தீர்ப்பவளே
அம்மையப்பனாய் இருந்து
அகிலத்தைக் காப்பவளே
எங்கள் நாகபூஷணியே

மு.பிறிந்தன்
யா/விக்றோரியாக்கல்லூரி
சுழிபுரம்.

### நாடிய வரங்களை தாருமம்மா



பார்த்தனுக்கு கீதை சொன்ன
பரந்தாமன் சோதரி
பாகமாய் பாதியுடன் ஈந்த
பரமேஸ்வரன் பத்தினி–அவள்
பார் புகழும் நயினையிலே நாகபூஷணி
பாவலரும் பாமரரும் பாடி தொழும் பார்வதி
நாளும் உன் நாமம் சொன்னேன்
நாடிய வரங்களை தாருமம்மா

செ.சுகன்யா,புத்தூர்

### நாகபூஷணி தாயே ...

அற்புதங்களும் அனுக்கிரகங்களும்
புரிந்தாய் நாகபூஷணி தாயே
ஆதியிலே சோதி வடிவாய் சக்திபீடம்
மானாய் நீயே நாகபூஷணி தாயே
மணிபல்லவதீவிலே மாட்சிமையால்
நீ நிறைந்தாய் நாகபூஷணி தாயே
அனுதினம் உன்னை நினைந்துருகி
கனவு நினையில் மனதில் உறைந்தாய்
நாகபூஷணி தாயே
உன் திருவருளாலே மங்கள கருமங்கள்
அருசரனை செய்து திருவருள் புரிந்தாய்
நாகபூஷணி தாயே

அ.இராசேந்திரம், வட்டுக்கோட்டை

உயிருக்கு உயிராக



# உதிரத்தால் உதவிட



இன்றைய தினம் உலக குருதிக் கொடையாளர் தினமாகும். இரத்ததானம் அல்லது குருதிக்கொடை (Blood Donation) என்பது ஒருவர் தனது இரத்தத்தின் சிறுபகுதியை பிறர் பயன்படுத்திக் கொள்ளும் மனப்பான்மையுடன் தானமாக வழங்குவதாகும்.

ஓர் ஆரோக்கியமான மனிதனின் உடலில் 5 முதல் 6 லீற்றர் இரத்தம் உள்ளது. இரத்ததானம் செய்பவர் ஒரு தடவை 200, 300 மில்லிலீற்றர் இரத்தம் வரை கொடுக்கலாம். அவ்வாறு கொடுத்த இரத்தத்தின் அளவு இரண்டே வாரங்களில் நாம் உண்ணும் சாதாரண உணவிலேயே உற்பத்தியாகிவிடும்.


நான்கு மாதங்களுக்கு ஒருமுறை எந்தவித பாதிப்புமின்றி இரத்ததானம் செய்யலாம். இரத்த தானம் செய்வதற்கு 5 முதல் 10 நிமிடங்கள் போதும்.

உடலில் உள்ள ஒவ்வொரு இரத்த அணுவும் (செல்கள்) மூன்றுமாத காலத்தில் தானாகவே அழிந்து மீண்டும் உற்பத்தியாகின்றது. இரத்த அணுஉற்பத்தி என்பது உடலில் எப்போதும் நடந்து கொண்டிருக்கும் பணியாகும். எனவே இரத்ததானம் செய்வதால் உடலுக்குப் பாதிப்போ, பலவீனமோ ஏற்பட வாய்ப்பில்லை.

உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் 4 கோடி யூனிட் (1 யூனிட்-350 ml) இரத்தம் தேவைப்படுகின்ற போதிலும் கிடைக்கப் பெறுவதோ வெறும் 40 இலட்சம் யூனிட்டுக்களே ஆகும்.

B-

இரத்ததான முகாம்களை நடத்த விரும்புவோர் யாழ்ப்பாணத்தில்- 021 222 3063, பருத்தித்துறையில்-021 226 3262, தெல்லிப்பழையில்-021 205 9227 என்ற இலக்கத்திற்கு அழைத்தும் அல்லது சுகாதார பரிசோதகர் அ.ரவினதாஸ்-077 210 5375 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்தும் நடத்த முடியும்.



### • தெல்லிப்பழை வைத்தியசாலை அத்தியட்சகர்



பொதுவாக எமது வைத்தியசாலையில் அதிகளவில் இரத்தம் தேவைப்படுவோரில் 4 பிரிவினர் உள்ளனர்

சத்திரசிகிச்சை, மகப்பேற்று, புற்றுநோய், இரத்தச்சோகை இந்த நான்கு பிரிவினருக்குமே அதிகரித்த இரத்தம் தேவைப்படுகின்றது.இதில் புற்று நோயாளர்களுக்கே பெருமளவிலான இரத்தம் தேவைப்படுகின்றது.புற்று நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்து வில்லைகள் இரத்தத்தின் அளவை குறைவடைய செய்கின்றது.ஆகையால் புற்று நோயாளர்களுக்கு அடிக்கடி குருதி தேவைப்படுகின்றது. இந்நோயாளர்கள் கவனமாக கையாளப்பட வேண்டியவர்கள்.

ஆகையினால் குருதியின் தேவை எப்போதுமே இருந்து கொண்டு இருக்கும். இந்தத் தேவையை நிவர்த்தி செய்வதற்கு குருதிக் கொடையாளர்கள் முன்வர வேண்டும் என தெரிவித்த அத்தியட்சகர்,தெல்லிப்பழை வைத்தியசாலையில் இயங்குகின்ற இரத்த வங்கி மிகச் சிறிய இடத்திலேயே இயங்கி வருகின்றது.மேலும் சன நடமாட்டமற்ற இடத்திலும் குறித்த இரத்த வங்கி அமைந்துள்ளது.

ஏனைய வைத்தியசாலைகளை விட தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கே அதிகரித்த இரத்தம் தேவைப்படுகின்றது.ஆகையால் குறித்த இரத்த வங்கி பொருத்தமான இடத்தில் விசாலமாக அமைக்கப்படுவதன் மூலமே இரத்த தானத்தை ஊக்குவித்து நோயாளர்களுக்கான குருதித் தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்றார் தெல்லிப்பழை வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி கே.இளங்கோஞானியார்.

A+

### • கனகரட்ணம் ஓங்காரரூபன்



குருதியின் பெறுமதி தெரியாமல் யாழ். மாவட்டத்தில் தற்போது இடம் பெறும் வாள் வெட்டுக்களையும் விபத்துக்களையும் பார்க்கும் போது மிகுந்த கவலையளிக்கின்றது.

உங்கள் உறவுகளுக்கும் ஒரு நாள் இரத்தம் தேவைப்படலாம். வாருங்கள் இரத்த தானம் செய்யலாம் என 54 தடவைகள் இரத்ததானம் வழங்கிய 36 வயதுடைய ஓங்காரரூபன் தெரிவித்துள்ளார்.

நான் இரத்ததானம் செய்வதற்கு என்னை ஒருத்தரும் வலுக்கட்டாயப்படுத்தவில்லை. நானாக முன் வந்தே இரத்த தானம் செய்தேன்.2003 ஆம் ஆண்டு நான் முதற் தடவையாக இரத்ததானம் வழங்கிருந்தேன்.ஒவ்வொரு முறையும் இரத்ததானம் வழங்கும் போதும் எனது நண்பர்களை உதவிக்கு அழைத்து செல்லவது வழமை.இவ்வாறு அழைத்து செல்லும் போது அவர்களும் இரத்ததானம் வழங்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

முதல் தடவை இரத்ததானம் வழங்கும் போது எனது அம்மாவிற்கு அது பற்றி தெரியப்படுத்தவில்லை.ஆனால் வழங்கிவிட்டு தெளிவுபடுத்தினேன். எனது அம்மா என்னை ஊக்கப்படுத்தினார்.இதேபோல் தான் திருமணத்திற்கு பின்னரும் எனது மனைவியும் இரத்ததானம் செய்வதற்கு ஊக்கப்படுத்தினார். படித்தவர்கள் இரத்ததானத்தின் பெறுமதியை உணர்ந்து கொண்டு பாமரமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

யாழில் தற்போது இடம்பெறும் வாள்வெட்டுக்கள், விபத்துக்கள் கவலையை ஏற்படுத்துகின்றன. இவர்களுக்கு இரத்தத்தின் பெறுமதி தெரியவில்லை என தெரிவித்தார் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோத்தராக கடமையாற்றும் ஓங்காரரூபன்.

B+

### • விஜயரட்ணம் ஜதுசன்



கோவில் வீதி கொக்குவிலை சேர்ந்த நான் 2001 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 58 தடவைகள் இரத்ததானம் செய்துள்ளேன்.

எனது பாடசாலைக்கால நண்பரொருவர் 1999 ஆம் ஆண்டு இரத்தப் புற்று நோயினால் உயிரிழந்திருந்தார்.

இந்த நண்பருடைய உயிரிழப்பும் நோயின் தாக்கமுமே முதன்முதலில் இரத்ததானம் செய்வதற்கு என்னை தூண்டியது.

யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப விரிவுரையாளராக கடமையாற்றும் நான் பல இரத்ததான முகாம்களையும் நடத்தியுள்ளேன். மனித நேயமும் பிற உயிர்களிடத்தில் அன்பு மட்டுமிருந்தால் போதும். யாரும் இரத்ததானம் செய்யலாம் என ஜதுஷன் தெரிவித்தார்.

AB+

### • தெல்லிப்பழை வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பதிகாரி



உலக சுகாதார நிறுவனத்தினரால் 2004 ஆம் ஆண்டு முதல் குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பு தினம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

A,B,O குருதி வகையை கண்டு பிடித்த கார்ல் லாண்ட்ஸ் ரெய்னரின் பிறந்த தினமான ஜூன் 14 ஆம் திகதியை உலக குருதிக் கொடையாளர் தினமாக பிரகனப்படுத்தி உலக சுகாதார ஸ்தாபனம் அவரை கௌரவப்படுத்தி வருகின்றது.

இலங்கையில் 2005 ஆம் ஆண்டு முதன் முதலாக குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த வருடமும் இலங்கை முழுவதிலும் ஆயிரத்து 400 குருதிக்கொடையாளர்கள் இன்றையதினம் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர். இரத்ததானம் என்பது ஒருவர் மனமுவந்து செய்யவேண்டிய உன்னத பணியாகும். இதனை செய்தால் தான் உலகில் மனிதநேயம் என்றும் நிலைத்திருக்கும்.

18 வயது முடிந்த 50 கிலோகிராம் நிறையுடைய ஆண், பெண் இருபாலாரும் நோய்களுக்காக தொடர்ச்சியாக மருந்து வில்லைகள் பாவிக்காத எவரும் இரத்ததானம் செய்ய முடியும் என தெரிவித்தார் தெல்லிப்பழை வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பதிகாரி வைத்தியர் எம்.பிரதீபன்.

AB

### • திருமதி வக்சலா துரைசிங்கம்



இந்த உலகில் இரத்த இழப்பு ஏற்பட்டு அதிகம் இரத்தம் தேவைப் படுவோர் பெண்களாகவே உள்ளனர்.

ஆகையால் பெண்களுக்கு பெண்கள் உதவி செய்ய முன்வரல் வேண்டுமென 34 தடவைகள் இரத்ததானம் வழங்கிய ஆள்வான் கிணற்றடி பன்னாலையைச் சேர்ந்த வக்சலா துரைசிங்கம் தெரிவித்தார்.எனக்கு தற்போது 48 வயது. நான் 21 வயதிலிருந்து இரத்ததானம் செய்து வருகின்றேன்.ஆரம்ப காலத்திலிருந்து நிலவிய போர்க்கால உயிரிழப்புக்களும் இரத்த இழப்புக்களும் தான் இரத்ததானம் செய்வதற்கு என்னை தூண்டின.

இந்த நவீன உலகில் பணத்திற்கு எதனையும் வாங்கும் நிலை காணப்படுகின்ற போதிலும் இரத்தத்தை வாங்க முடியாத நிலையே உள்ளது.

ஆகையால் நாம் அனைவருமே உயிர்காக்கும் உன்னத பணிக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். வாழ்வில் ஆண், பெண் சமத்துவம் கோரும் நாம் இரத்ததானத்திலும் எமது சமத்துவத்தை கோர வேண்டும்.

திருமணத்தின் முன்பும் பின்பும் இரத்ததானம் வழங்கி வருகின்ற போதிலும் கடின உழைப்பாளியான எனக்கு எந்தச் சோர்வும் நோயுமில்லை. உலக சனத்தொகையில் பெண்களே அதிகம் குருதி தேவைப்படுபவர்களாக உள்ளனர்.

ஆகையால் பெண்களே அதிகளவில் இரத்த தானம் செய்வதற்கு முன்வரல் வேண்டுமென மனிதவுரிமை பாதுகாவலரும் சிவில் சமூக பிரதிநிதியுமான அந்த பெண்மணி தெரிவித்தார்.

O

### • துரைமணி ரமணன்



பாடசாலை மட்டத்திலிருந்தே விளையாட்டு போட்டிகளில் ஈடுபட்டு வரும் நான் இரத்ததானமும் செய்து வருகின்றேன். ஆனால் எந்தவித பின்னடைவையும் நான் எதிர்நோக்கவில்லை என தெரிவித்துள்ளார் நயினாதீவை சொந்த இடமாக கொண்ட ரமணன்.

1999 ஆம் ஆண்டு கொக்குவில் இந்து கல்லூரியில் படிக்கும் போது பாடசாலை மாணவ முதல்வராக இருந்த கல்கேசன் என்பவர் இரத்தப்புற்று நோயினால் உயிரிழந்திருந்தார். இவரது நினைவாகவே கொக்குவில் இன்ரறக்ட் கழக உறுப்பினர்கள் 7 பேர் இணைந்து இரத்ததானம் செய்தோம்.

கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.கமலநாதன் மற்றும் எமது கழக பொறுப்பாசிரியர் திருமதி கலா சந்திரேசன் ஆகியோர் எமக்கு ஊக்கமளித்திருந்தனர்.நீங்கள் செய்யும் எந்தப் பெரிய உதவியும் ஒரு நாள் வீண்போகலாம். ஆனால் இரத்ததானம் செய்தால் ஒரு உயிர் காப்பாற்றப்படலாம் என 60 தடவைகள் இரத்ததானம் செய்த ரமணன் கூறினார்.

O-

### • துரைசாமி சக்திவேல்



நான் இரத்ததானம் செய்வது பெரிதல்ல. மற்றவர்களையும் இரத்ததானம் செய்வதற்கு தூண்ட வேண்டும் என தனது 64 ஆவது வயதிலும் இரத்ததானம் செய்து வருகின்ற சக்திவேல் தெரிவித்தார்.

இந்த உன்னத தானத்தில் தனது பிள்ளைகள் இருவரையும் இணைத்துள்ளதாகவும் அவர் பெருமையுடன் கூறினார்.1971 ஆம் ஆண்டு முதல் 50 தடவைகள் இரத்ததானம் செய்துள்ளேன்.

நான் சாரதியாக கடமையாற்றுகின்ற போதிலும் எனது உடலில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. மாறாக உற்சாகமே அதிகரித்துச் செல்கின்றது.

இரத்ததானம் செய்வதற்கு பலர் தயங்குவதற்கு காரணம் போதிய விழிப்புணர்வு இன்மையே. ஆகையால் பாடசாலை மட்டத்திலிருந்தே விழிப்புணர்வு நடவடிக்கைகள் வழங்கப்பட வேண்டுமென அவர் கூறினார்.

A

## 24 மணித்தியாலங்களும் இராணுவத்தின் கண்காணிப்பில்

# திறந்த வெளிச் சிறையில்தான் ஈழத்தமிழர்கள் வாழ்கின்றனர்

(டில்லி)

**24 மணி நேரமும் கண்காணிக்கப்படுவதாலும், எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்தினாலும் தமிழர்களால் நிம்மதியாக வாழ முடிவதில்லை. மொத்தத்தில் ஈழத் தமிழர்கள் திறந்தவெளி இராணுவச் சிறைகளில் அடைக்கப்பட்டது போன்ற உணர்வில் தான் வாழ்கின்றனர். இந்த நிலையில் இந்தியா என்ன செய்யப்போகிறது என்பது தான் உலகத் தமிழர்களின் வினா என்று பாமக நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள படையினரைத் திரும்பப் பெற முடியாது என்று இலங்கை அரசு திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு கண்டிக்கத்தக்கது.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற போரில் ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். உலகின் மிகப்பெரிய இனப்படுகொலையாக கருதப்படும் இப்படுகொலை தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையம் விசாரணை நடத்திய போதிலும், குறிப்பிடத்தக்க வகையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

தமிழர்கள் நிம்மதியாக வாழும் வகையில் வடமாகாணத்தில் இருந்து இலங்கை இராணுவம் திரும்பப்பெறப்பட வேண்டும் என கடந்த வாரம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசும் போது வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்தியிருந்தார்.

இலங்கை, வடக்குமாகாண அரசின் இந்த் கோரிக்கையை நிராகரித்துள்ள இலங்கை இராணுவத்தின் வடபிராந்தியத் தளபதி,

" வடக்கு மாகாணத்தில் தனிநாடு கோரிக்கை எழாமல் தடுப்பது தான் இராணுவத்தின் நோக்கம். வட மாகாணத்திலிருந்து படைகள் திரும்பப் பெறப்பட்டால், தமிழர்கள் தனி ஈழ கோரிக்கையை கையில் எடுத்து விடுவார்கள். எனவே, வட மாகாணத்திலிருந்து படைகளை திரும்பப்பெறும் பேச்சுக்கே இடமில்லை" என்று கூறியிருக்கிறார்.


ஈழத்தமிழர்களை தொடர்ந்து இரண்டாம் தர குடிமக்களாக வைத்திருக்கவே இலங்கை அரசு விரும்புகிறது. தமிழர்களுக்கு எந்தவித உரிமையையும் வழங்க அரசு தயாராக இல்லை என்பதையே இது வெளிப்படுத்துகிறது.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணப் பகுதிகளில் 6 தமிழர்களுக்கு ஒரு வீரர் என்ற விகிதத்தில் இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது. 24 மணி நேரமும் கண்காணிக்கப்படுவதாலும், எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்தினாலும் தமிழர்களால் நிம்மதியாக வாழ முடிவதில்லை.

மொத்தத்தில் ஈழத் தமிழர்கள் திறந்தவெளி இராணுவச் சிறைகளில் அடைக்கப்பட்டது போன்ற உணர்வில் தான் வாழ்கின்றனர்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இது உதவாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## இந்திய போர் விமானம் விழுந்து நொறுங்கியது




இந்திய விமான படைக்கு சொந்தமான மிக் 27 ரக போர் விமானம் நேற்று விபத்துக்குள்ளானது. ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் அருகே உள்ள குடிபகட்சானி பகுதியில் அந்த விமானம் விழுந்து நொறுங்கியது. இதில் 2 வீடுகள் சேதம் அடைந்தன. யாருக்கும் காயம் ஏற்படவில்லை. விமானம் விபத்துக்குள்ளாவதற்கு முன்பு விமானிகள் பரசூட்டில் இருந்து குதித்து உயிர் தப்பினர். (இ-10)

## பாடசாலை வாகனம் பயங்கர விபத்து!




தாய்லாந்தில் ஆரம்ப பாடசாலைக்கு சொந்தமான வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் பாடசாலை ஆசிரியர்கள் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

தாய்லாந்தின் சவோன் புரிஸ் மியாங் மாவட்ட வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்த விபத்து நிகழ்ந்தது.

தனியார் ஆரம்ப பாடசாலைக்கு சொந்தமான வான் வேகமாகச் சென்று கொண்டிருந்த போது அதன் டயர் எதிர்பாராதவிதமாக திடீரென வெடித்தது. இதனால், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த அந்த வாகனம் கவிழ்ந்து தீ பற்றியுள்ளது.

இச்சம்பவத்தில், வானில் பயணம் செய்த பாடசாலை ஆசிரியர்கள் 11 பேர் தீயில் கருகி உயிரிழந்தனர். வான் சாரதி உட்படட 4 பேர் தீக் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகத்தின் பேரிடர் தடுப்புத் துறை அதிகாரி கள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## மின்குமிழில் ஜெயலலிதா ஓவியம்

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின்உருவத்தை கோவை ஓவியர் ஒருவர் மின்குமிழில் வரைந்து அவருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழகமுதலமைச்சர்ஜெயலலிதா 100 யுனிட் வரை மின்சாரம் பயன்படுத்தினால் இலவசம் என்று தேர்தல் அறிக்கையில் தெரிவித்து இருந்தார்.

அதன்படி ஆட்சிக்கு வந்த பின்னர் 100 யுனிட் வரை உபயோகித்தால் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

ஜெயலலிதாவின் இந்த அறிவிப்பிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கோவை ஓவியர் மின்குமிழில் ஜெயலலிதாவின் ஓவியத்தை வரைந்து நன்றி தெரிவித்துள்ளார்.(இ-10)



## ஜெயலலிதா இன்று டில்லிக்குப் பயணம்



தமிழகத்தில் நடைபெற்று முடிந்த 15 ஆவது சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று, 6 ஆவது முறையாக ஜெயலலிதா முதலமைச்சராக பதவி ஏற்றுள்ளார்.

புதிய சட்டசபையின் முதல் கூட்டம் ஆளுநர் உரையுடன் 16 ஆம் திகதி தொடங்கவுள்ளது.

அதற்கு முன்னதாக, முதலமைச்சர் ஜெயலலிதா இன்று செவ்வாய்க்கிழமை பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசுவதற்காக டில்லி செல்கிறார். தான் ஒவ்வொரு முறையும் முதலமைச்சராக பொறுப்பேற்றதும், பிரதமரை சந்தித்து தமிழகத்தின் வளர்ச்சி திட்டங்கள் தொடர்பாக பேசுவதை ஜெயலலிதா வழக்கமாக கொண்டிருக்கிறார். அந்த வகையில், தற்போதும் பிரதமரை சந்திக்க உள்ளார்.

இன்று முற்பகல் 11 மணிக்கு சென்னை போயஸ் கார்டன் இல்லத்தில் இருந்து முதலமைச்சர் ஜெயலலிதா புறப்படுகிறார். சென்னை விமான நிலையத்திற்கு முற்பகல் 11.30 மணிக்கு காரில் வரும் அவர், அங்கிருந்து தனி விமானத்தில் டில்லி புறப்படுகிறார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவுடன், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் ராம மோகன் ராவ், முதலமைச்சரின் செயலாளர்கள் வெங்கட் ரமணன், சிவ்தாஸ் மீனா, விஜயகுமார், ராமலிங்கம், கூடுதல் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் டில்லி செல்கின்றனர்.

**பிரதமருடன் சந்திப்பு**

பிற்பகல் 2 மணிக்கு டில்லி சென்றடையும் முதலமைச்சர் ஜெயலலிதா அங்குள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு செல்கிறார். முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு முதல்முறையாக டில்லி செல்வதால், தமிழ்நாடு இல்லத்தில் ஜெயலலிதாவுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட இருக்கிறது.

**கோரிக்கை மனு**

அப்போது, தமிழக வளர்ச்சி திட்டங்கள் குறித்து பிரதமர் நரேந்திர மோடியிடம் பேசும் முதலமைச்சர் ஜெயலலிதா, 32 பக்கங்கள் அடங்கிய கோரிக்கை மனு ஒன்றையும் அளிக்க இருக்கிறார்.

அந்த மனுவில், "தமிழக வளர்ச்சி திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும். காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின்படி, காவிரி மேலாண்மை சபையை உடனடியாக அமைக்க வேண்டும். உணவு தானிய ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும். இலங்கை தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும். இலங்கை வசம் உள்ள கச்சதீவை மீட்க வேண்டும். புதிய மின் உற்பத்தி திட்டங்களுக்கு அனுமதி தரவேண்டும்" என்பது உட்பட பல்வேறு முக்கிய அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன. (இ-10)

# விடுதலை; ஐ.எஸ்ஸின் ஆடையை அகற்றும் பெண்கள்





சிரியாவின் அலெப்போ மாகாணத்தின் மன்பிஜ் நகரத்தின் புறநகர் பகுதியொன்று ஐ.எஸ் அமைப்பிடமிருந்து விடுவிக்கப்பட்டதையடுத்து, ஐ.எஸ்ஸினால் பெண்கள் கட்டாயமாக அணிய நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த முகத்தை மறைக்கும் "நிகாப்" ஆடையை பெண்கள் சிலர் அகற்றிக்கொள்வதை படங்களில்காணலாம். கடந்த வியாழக்கிழமை ரோய்ட்டர்ஸினால் இப்படங்கள் எடுக்கப்பட்டன. அமெரிக்க ஆதரவு கொண்ட சிரிய ஜனநாயகப் படையினர் மன்பிஜ் நகரை கடந்த வாரம் ஐ.எஸ்ஸிடமிருந்து கைப்பற்றினர். (இ-10)

### போர்க்களத்திலிருந்து தப்பியோட முயற்சித்த

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் 19பேருக்கு மரண தண்டனை

**பலூஜா நகரில் ஈராக்கிய படையினருடன் இடம்பெற்ற மோதலின் போது போர்க்களங்களில் இருந்து தப்பியோட முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தம் அமைப்பின் உறுப்பினர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

இது தொடர்பில் ஈராக்கின் அல்-சுமைரா இணையத்தள செய்திச் சேவை வெளியிட்டுள்ள செய்தியில், " பலூஜாவின் al-Shuhada மற்றும் al-Nasaf சுற்றுவட்டாரங்களில் இடம்பெற்ற மோதலின்போது புறமுதுகிட்டு தப்பியோட முயற்சித்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் உறுப்பினர்கள் 19 பேருக்கு அந்த அவ்வமைப்பினர் மரண தண்டனை நிறைவேற்றியுள்ள னர்.

மேலும், மத்திய பலூஜாவில் உள்ள பிரதான சதுக்கமொன்றில் வைத்தே குறித்த 19 பேருக்கும், தலையில் துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மே மாதம் 22 ஆம் திகதி ஈராக்கின் பலூஜா நகரை மீளக் கைப்பற்றும் படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹைதல் அல்-அபாடி அறிவித்தமையை அடுத்து, பலூஜாவை பல திசைகளில் இருந்து ஈராக்கிய துருப்பினர் தாக்கி வருகின்றனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மேற்கில் இருந்து சுமார் 70 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பலூஜா நகர், கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வருவதுடன், ஈராக்கில் உள்ள ஐ.எஸ் தீவிரவாதிகளின் மூலோபாயக் கோட்டையாகவும் விளங்கி வரு கின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-10)

# நிதி நெருக்கடியால் நகரத்தையே சீனாவுக்கு விற்க முயன்ற மேயர்

கடுமையான நிதி நெருக்கடியால் விழி பிதுங்கிய இத்தாலிய மேயர் ஒருவர், நகரையே சீனாவுக்கு விற்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாலியின் தென் பகுதியில் அமைந்துள்ள நகரம் சோசியோ பரனோயா. இந்த நகரில் கடந்த 7 ஆண்டுகளாக மேயராக இருந்து வருபவர் பிரான்செஸ்கோ கரபொலொ.

இங்கு நகர வளர்ச்சிக்காக போதிய நிதி ஒதுக்கப்படுவதில்லை என இவர் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருவதுடன், இது தொடர்பாக கோரிக்கை மனுவும் நிதி ஆணையத்திடம் அளித்து வந்துள்ளார்.

ஆனால் நிதி ஆணையம் இவரது கோரிக்கைக்கு செவிசாய்க்காமல் தொடர்ந்து அலைக்கழித்து வந்துள்ளது.

இந்நிலையில், தனது பேஸ்புக் பக்கத்தில் பிரான்செஸ்கோ, மிகவும் பணபலம் வாய்ந்த சீன முதலீட்டாளர் வந்து மொத்த நகரத்தையும் அவரது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ள வேண்டும் என பதிவிட்டுள்ளார்.

இதுமட்டுமின்றி, இந்த கோரிக்கை குறிப்பிட்ட நகரத்திற்கு தேவையான வளர்ச்சிப் பணிகளுக்கான போதிய நிதி ஆதாரம் இல்லை என்பதால் மட்டுமே எனவும் அவர் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

புதிய உரிமையாளரின் கீழ் நகரத்தின் மேயராக சேவையை தொடரவும் தாம் தயார் எனவும் அவர் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல காற்பந்து அமைப்புகளின் மொத்த மதிப்பை விடவும் தமது நகருக்கு தாம் குறித்துள்ள விலை குறைவே என தெரிவித்துள்ள அவர்,


ஒரு நகரத்தின் மீது முதலீடு செய்வது கண்டிப்பாக அதிக லாபம் தரும் முதலீடுதான் என்பதையும் அவர் உறுதியாக தெரிவித்துள்ளார். (இ-10)

# கோடீஸ்வரர் வாரன் பப்பெட்டுடன் உணவருந்துவதற்கு ரூ.23 கோடி

அமெரிக்காவில் கோடீஸ்வரர் வாரன் பப்பெட்டுடன் உணவருந்துவதற்காக ஒருவர் ரூ.23 கோடியை கொடுத்துள்ளார். கோடீஸ்வரர் மற்றும் பங்குச்சந்தை முதலீட்டாளர் என்று அழைக்கப்படும் வாரன் பப்பெட்டுடன் மதிய உணவு சாப்பிட ஒவ்வொரு ஆண்டும் ஏலம் நடத்தப்பட்டு வருகிறது.

கிளைட் அறக்கட்டளை இந்த ஏலத்தை நடத்தி வருகிறது. இதில் கிடைக்கும் தொகையானது சமூக நலத்திட்டங்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டு வருகிறது.


ஏலம் எடுப்பவர்கள் வாரன் பப்பெட்டுடன் ஒரு வேளை உணவருந்தலாம். அப்போது அவருடன் எதைப்பற்றி வேண்டுமானாலும் விவாதிக்கலாம்.



ஆனால் அடுத்து அவர் எந்த துறையில் முதலீடு செய்யப் போகிறார் உள்ளிட்டவை குறித்து கேள்வி எழுப்பக் கூடாது. சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள தொண்டு நிறுவனத்துக்காக நிதி வழங்கும் பொருட்டு இந்த ஆண்டும் வாரன் பப்பெட்டுடன் உணவருந்துவதற்கான ஏலம் நடைபெற்றது.

இந்தஏலம்கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முடிவுக்கு வந்தது. இறுதியாக வாரன் பப்பெட்டுடன் உணவருந்த ஒருவர் ரூ.23 கோடி கொடுக்க முன்வந்திருந்தார். (இ-10)

# 50 பேர் படுகொலை; ஐ.எஸ்.பொறுப்பேற்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவிலுள்ள இரவு விடுதி ஒன்றிற்குள் புகுந்த மர்ம நபர், அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக சுட்டதில், 50 பேர் பலியாகினர்.53இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, இந்தியப் பிரதமர் மோடி உள்ளிட்டோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்த தாக்குதல் சம்பவத்திற்கு ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

### ஐ.எஸ். பயங்கரவாதி

அமெரிக்காவின் ஒரலாண்டாவில் இரவு விடுதிக்குள் புகுந்த மர்ம நபர் கண்மூடித்தனமாக சுட்டதில், 50 பேர் பலியாகினர்.53இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலுக்கு ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தாக்குதல் நடத்திய மர்மநபரின் பெயர் ஒமர் மேட்டின் எனவும், ஐ.எஸ்., பயங்கரவாத அமைப்பை சேர்ந்த அவன், 911 என ஐ.எஸ்., இயக்கத்தால் அழைக்கப்பட்டான் எனவும் தெரிய வருகிறது.

### முத்தமிட்டதால் ஆத்திரம்

புளோரிடா மாகாணத்தில், போர்ட் செயின்ட் லுயிஸ் பகுதியில் வசித்து வந்த அவன், ஆப்கானிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்தவன் எனவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் ஒமர் மேட்டினின் தந்தையிடம் நடத்திய விசாரணையில், தன் குடும்பத்தார் முன்னிலையில் ஆண்கள் இருவர் முத்தமிடுவதை கண்டு ஒமர் கடுங்கோபம் அடைந்ததாகவும், அது அவனை அதிகம் பாதித்தது எனவும் தெரிவித்தார்.

### வெறுப்புதான் காரணம்



ஒரலாண்டா தாக்குதல்குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியதாவது, அமெரிக்க வரலாற்றில் கொடூரமான சம்பவம் நடந்திருக்கிறது. ஒரலாண்டா நகர மேயரிடம் பேசினேன். அரசு சார்பில் தேவையான உதவிகள் வழங்கப்படும் என்று உறுதி அளித்துள்ளேன்.

மக்கள், ஆடவும், பாடவும், பொழுது போக்கவும் வந்த இடத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் வெறுப்பு ஒன்று தான். இவ்வாறு ஒபாமா தெரிவித்தார்.

### மோடி கண்டனம்

ஒரலாண்டா படுகொலை குறித்து பிரதமர் மோடி டுவிட்டரில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளதாவது, அமெரிக்க துப்பாக்கி சூட்டு சம்பவத்தை அறிந்து கடும் அதிர்ச்சி அடைந்தேன்.

துப்பாக்கி சூட்டில் காயமடைந்தவர்கள் நலம் பெற ஆண்டவனை பிராத்திக்கிறேன். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### பலத்த பாதுகாப்பு


இந்த தாக்குதல் சம்பவத்திற்கு ஐ.எஸ் அமைப்பு பொறுப்பேற்றுள்ள நிலையில், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஆயுதங்களுடன் சுற்றித் திரிந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன் காரணமாக நியூயோர்க் நகரில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய ஒமர் மேட்டின் தனது மனைவியை கொடூரமான முறையில் துன்புறுத்தி வந்ததாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. (இ-10)




# ரகசியத்தைச் சொல்லுங்க!



முன்னொரு காலத்தில் கொட்டாரப்பட்டி என்ற ஊரில் அமுத வள்ளியின் குடும்பம் வசித்து வந்தது. அழகான மாப்பிள்ளை வேணும் என தேடிப்பிடித்து ஒரு ஆண் அழகனை வெளியூரில் கண்டுபிடித்து தன் மகளை கட்டிவைத்தாள். வெகு தூரம் என்பதால் அவன், பெண் வீட்டுக்கு போனதில்லை. திடீரென்று ஒருநாள் தன் அத்தையின் வீட்டிற்கு விருந்தினராக வந்தான். "வராத அழகு மருமகன் வந்து விட்டானே' என்ற எண்ணத்தில் பலவிதமான பலகாரங்கள் செய்யத் தொடங்கினாள் அவள். அப்போது தான் வீட்டில் முந்திரிப் பருப்பு இல்லை என்பது அவளுக்குத் தெரிந்தது. மருமகனிடம் பணத்தைக் கொடுத்தாள் அவள்.

மளிகைக் கடைக்குச் சென்று முந்திரி பருப்பு வாங்கி வாருங்கள்!" என்றாள். அவனும் மளிகைக் கடைக்குச் சென்றான்.

அவன் கொண்டு வந்திருக்கும் பணத்திற்கு தன்னிடம் சில்லறை இல்லை என்றான் கடைக்காரன் . "நாளை வந்து மீதிச் சில்லறையை வாங்கிக் கொள்கிறேன்!" என்று முந்திரிப் பருப்பை வாங்கினான் அவன். கடையை மறந்து விடாமல் எப்படி நினைவு வைத்துக் கொள்வது என்று சிந்தித்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். எதிரே எருமை மாடு ஒன்று மேய்ந்து கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. கடைக்கு எருமை மாடுதான் அடையாளம் என்ற எண்ணத்தில் வீடு திரும்பினான்.

மறுநாள் பொழுது விடிந்தது. சில்லறை வாங்குவதற்கு அடையாளமாக வைத்திருந்த எருமை மாட்டைத் தேடிப் புறப்பட்டான் அவன். அந்த எருமைமாடு இப்போது ஒரு தையல் கடையின் முன்னால் மேய்ந்து கொண்டு இருந்தது. நேராக தையல் கடைக்குள் நுழைந்தான் அவன். அங்கு தைத்துக் கொண்டிருந்த முதியவரிடம், "மீதிச் சில்லறை தாங்க!" என்றான்.

"எதற்குச் சில்லறை தர வேண்டும்?" என்று கேட்டார் அவர்.

"நேற்று உங்களிடம் முந்திரி பருப்பு வாங்கினேன். சில்லறை இல்லை நாளை தருகிறேன் என்று நீங்கள் சொல்லவில்லையா?" என்று கேட்டான் அவன்.

அதற்கு அவர், "நான் தையல் கடைதான் வைத்து இருக்கிறேன். மளிகைக் கடை இல்லை. உன்னை இதற்கு முன் பார்த்ததே இல்லை. சில்லறை தர முடியாது போ!" என்று கோபமாகச் சொன்னார்.

"நீங்கள் மீதிச் சில்லறை தரவில்லை என்றாலும் பரவாயில்லை, உங்களால் எப்படி ஒரே நாளில் ஒரு அடி நீள தாடி வளர்த்துக் கொண்டு கிழவனாக முடிந்தது. அதை மட்டும் சொல்லி விடுங்கள்!" என்று கேட்டான் அழகு மருமகன். தையல்காரன் ஏற்கனவே சட்டை சரியாகத் தைக்காமல் போராடிக் கொண்டிருந்தான். ஆத்திரத்தில் அவனை நன்றாக திட்டி அனுப்பினான். வீட்டிற்கு வந்த மருமகன் அத்தையிடம் நடந்த விடயத்தை கூறினான்.

அதிர்ச்சியில் உறைந்து போனாள் அமுதவள்ளி. "இப்படிப்பட்ட முட்டாளா நம் மாப்பிள்ளை. இவரோட அழகை பார்த்து மயங்கினோமோ இவருடன் எப்படி நம் மகள் குப்பை கொட்டுகிறாள்' என்று நினைத்து மிகவும் வேதனை அடைந்தாள்.




- 1846 - கலிபோர்னியாவின் சொனோமா என்ற இடத்தில் குடியேறிய ஆங்கிலேயர்கள் மெக்சிக்கோ மீது போரை ஆரம்பித்து கலிபோர்னியாவைக் குடியரசாக அறிவித்தனர்.
- 1872 - கனடாவில் தொழிற் சங்கங்கள் அதிகாரபூர்வமாக்கப்பட்டன.
- 1900 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- 1931 - பிரான்சில் சென் ஃபிலிபேர்ட் என்ற படகு மூழ்கியதில் 500 பேர் இறந்தனர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பாரிசை ஜெர்மனி கைப்பற்றியது.
- 1940 - போலந்தின் 728 போர்க் கைதிகள் நாசிகளின் அவுஷ்விட்ஸ் வதை முகாமின் முதலாவது சிறைக்கைதிகளாக சேர்க்கப்பட்டனர்.
- 1941 - அனைத்து ஜெர்மனிய மற்றும் இத்தாலிய சொத்துக்களையும் ஐக்கிய அமெரிக்கா முடக்கியது.
- 1941 - எஸ்தோனியர்கள், லாத்வியர்கள் மற்றும் லித்துவேனிய மக்கள் பலரை சோவியத் ஒன்றியம் நாட்டை விட்டு அவர்கள் பகுதிகளை விட்டு வெளியேற்றி வதை முகாம்களுக்கு அனுப்பியது.
- 1962 - ஐரோப்பிய வான் ஆராய்ச்சி மையம் பாரிசில் அமைக்கப்பட்டது.
- 1967 - சீனா தனது முதலாவது ஐதரசன் குண்டைச் சோதித்தது.
- 1967 - மரைன்ர் 5 விண்கலம் வீனஸ் கோளை நோக்கி ஏவப்பட்டது.
- 1982 - போக்லாந்து தீவுகளின் தலைநகர் ஸ்டான்லியில் நிலைகொண்டிருந்த ஆர்ஜெண்டீனப் படைகள் பிரித்தானியப் படைகளிடம் சரணடைந்ததை அடுத்து போக்லாந்து போர் முடிவுக்கு வந்தது.
- 1985 - வுறுயு 847 விமானம் கிறீசில் இருந்து ரோம் செல்லுகையில் ஹெஸ்புல்லா இயக்கத்தினரால் கடத்தப்பட்டது.
- 1999 - தென்னாபிரிக்காவின் அதிபராக தாபோ உம்பெக்கி பதவியேற்றார்.
- 2002 - கராச்சியில் அமெரிக்க தூதராலயத்துக்கு முன்னர் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டு 50 பேர் காயமடைந்தனர்.
- 2003 - விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல் ஒன்று இலங்கைக் கடற்படையினரால தாக்கி அழிக்கப்பட்டதில் 11 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.
- 2007 - காசாப் பகுதி தமது முழுக்கட்டுப்பாட்டில் வந்திருப்பதாக ஹமாஸ் இயக்கம் அறிவித்தது.

### பிறப்புகள

- 1899 - யசுனாரி கவபட்டா, நோபல் பரிசு பெற்ற யப்பானிய எழுத்தாளர். (இ. 1972)
- 1928 - அ. வின்சென்ட், திரைப்பட ஒளிப்பதிவாளர், இயக்குநர். (இ. 2015)
- 1929 - சே குவேரா, சோசலிசப் புரட்சியாளர். (இ. 1967)
- 1969 - ஸ்ரெஃபி கிராஃப், ஜெர்மனிய டென்னிஸ் வீராங்கனை.

### இறப்புகள்

- 1965 - கந்தமுருகேசனார், ஈழத்துப்பெரியார், மூதறிஞர். (பி. 1902)
- 2012 - காகா ராதாகிருஷ்ணன், திரைப்பட நடிகர்.

## சே குவேரா

சே குவேரா அல்லது எல் சே என பொதுவாக அறியப்பட்ட எர்னெஸ்டோ குவேரா டி லா செர்னா அர்ஜென்டீனாவை பிறப்பிடமாகக் கொண்ட ஒரு சோசலிசப் புரட்சியாளர், மருத்துவர், மார்க்சியவாதி, அரசியல்வாதி, sivakasi மற்றும் பல நாடுகளின் (கொங்கோ உட்பட) புரட்சிகளில் பங்குபெற்ற போராளி எனப் பல முகங்களைக்கொண்டவர்.

சே என்பது வியப்புச்சொல் ஆகும். இச்சொல்லை அர்செண்டீனர்கள், குவேரனி இந்தியர்களிடமிருந்து பழகினர் என்று கருதப்படுகிறது. சே குவேரா 1928 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் நாள் அர்கெந்தீனாவில் உள்ள ரொசாரியோ என்னும் இடத்தில் பிறந்தார்.

இசுபானிய, பாஸ்க்கு, ஐரிசிய மரபுவழிகளைக் கொண்ட ஒரு குடும்பத்தில் ஐந்து பிள்ளைகளில் இவர் மூத்தவர். இவரது குடும்பம் இடதுசாரி சார்பான குடும்பமாக இருந்ததால் மிக இளம் வயதிலேயே அரசியல் தொடர்பான பரந்த நோக்கு இவருக்குக் கிடைத்தது. இது சோசலிசம் பற்றிய இவரது கருத்துக்களுக்கு வழிகாட்டியது. வாழ்க்கை முழுவதும் இவரைப் பாதித்த ஆஸ்மா நோய் இவருக்கு இருந்தும் இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரராக விளங்கினார்.

இவர் ஒரு சிறந்த "ரக்பி" விளையாட்டு வீரர். இவரது தாக்குதல் பாணி விளையாட்டு காரணமாக இவரை "பூசெர்" என்னும் பட்டப் பெயர் இட்டு அழைத்தனர். அவரது வயது அதிகரித்த போது, அவருக்கு இலத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களான குயிரோகா, அலெக்ரியா, இக்காசா, டாரியோ, ஆஸ்டூரியாஸ் போன்றோருடைய ஆக்கங்களின் பால் ஈடுபாடு ஏற்பட்டது. செல்வாக்கு மிக்க தனி நபர்களின் கருத்துருக்கள், வரைவிலக்கணங்கள், மெய்யியற் கருத்துக்கள் போன்றவற்றை எழுதிவந்த குறிப்புப் புத்தகத்தில் இவர்களுடைய கருத்துக்களையும் அவர் குறித்து வந்தார். இவற்றுள், புத்தர், அரிஸ்ட்டாட்டில் என்போர் பற்றிய ஆய்வுக் குறிப்புக்கள், பேட்ரண்ட் ரஸ்ஸலின் அன்பு, தேசபக்தி என்பன குறித்த ஆய்வு, ஜாக் லண்டனின் சமூகம் பற்றிய கருத்துக்கள், நீட்சேயின் இறப்பு பற்றிய எண்ணங்கள் என்பனவும் அடங்கியிருந்தன.

சிக்மண்ட் பிராய்டின் ஆக்கங்களாலும் கவரப்பட்ட சே குவேரா, அவரைப் பல வேளைகளில் மேற்கோள்காட்டியுள்ளார்.

# காணாமற்போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு கலைக்கப்படவுள்ளது

## அதன் தலைவர் பரணகம தெரிவிப்பு

(கொழும்பு)

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பரணகம ஆணைக்குழு எதிர் வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதி கலைக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.



இதேவேளை, காணாமற் போனோர் குறித்து பணியகம் ஒன்றையும் அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையை குறித்த பணியகத்திடம் முன்வைக்குமாறு கூறப்பட்டுள்ளது.

காணாமற் போனோர் விசாரணைகளை நிறைவு செய்ய எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரையில் காலத்தை நீடிக்குமாறு ஆணைக்குழு கோரியிருந்தது.

எனினும் அதனை ஜூலை மாதத்துடன், கலைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், தங்களின் விசாரணை அறிக்கையை காணாமற் போனோர் பணியகத்தில் கையளிக்க இருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

இதேவேளைஇந்தஆணைக்குழு கலைக்கப்படவுள்ளமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி கிடைக்காமல்போய்விடுமோ என மக்ஸ்வெல் பரணகம கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் மக்களுக்கான நீதி கிடைக்காமல் போவதற்கு அரசியல் காரணிகளும் காரணம் என சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை பரணகம ஆணைக்குழுவின் மூன்றாவது அறிக்கை கையளிக்கப்படவுள்ளதுடன், குறித்த அறிக்கை இலங்கை அரசாங்கம் மற்றும் படையினர் மீதும் அதிகமான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-10)

# நான் கூறியதைக் கேட்டிருந்தால் ராணுவ முகாம் அழிந்திருக்காது

## தினேஷ் எம்.பி.விசனம்

அன்று நான் கூறியதை கேட்டிருந்தால் இன்று கொஸ்கம இராணுவ முகாம் அழிந்திருக்காது என பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறித்த இடத்தில் இராணுவ முகாமுக்கு பதிலாக மாணவர்களுக்காக தொழிற் பயிற்சி கூடத்தை நிறுவ சொல்லி அன்றைய ஆட்சியாளர்களிடம் பலமுறை எடுத்துக் கூறியும் அதை அவர்கள் காதில் வாங்கவில்லை.

அதன் விளைவை இன்று அப்பாவி மக்கள் அனுபவிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொஸ்கம-சாலாவ பகுதிக்கு விஜயம் செய்து அங்கு பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் நான் எதிர்ப்பை வெளியிட்டது போலவே அன்று இந்தப் பிரதேச மக்களும் இங்கு முகாம் அமைப்பதற்கு பாரிய எதிர்ப்பினை வெளியிட்டனர்.

ஆனால் எதுவும் பலனற்று போய் இன்று மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் துரித கதியில் மக்களை இங்கு குடியமர்த்தி அவர்களுக்கு தேவையானவற்றை உடனடியாக செய்து கொடுக்குமாறும் நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அத்துடன் குறித்த வெடிப்பினால் சேதமடைந்த வீடுகள், கட்டடங்கள் என்பவற்றை மீளமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள படையினருக்கு தனது விசேட நன்றிகளை தெரிவிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் இதன் போது தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-10)

# சில நாடுகளை இலக்கு வைத்துத்தான் வாகன வரியை அரசு விதித்துள்ளது

## தன்னைப் பழிவாங்குவதாக நினைத்து மக்களைப் பழிவாங்குவதாக மகிந்த விசனம்

சில நாடுகளை இலக்கு வைத்து அரசாங்கம் வாகன வரியை விதித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜப்பான் வாகனங்களின் மீது வரி அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் இந்திய வாகனங்களுக்கான வரிகள் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி அந்த நாட்டில் வாழும் இலங்கையர்களை சந்தித்த போது நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் சுகுபா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அந்நாட்டில் வாழும் இலங்கை மக்களுடன் நேற்று முன்தினம் சந்திப்பு நடைபெற்றது.



அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏதாவது சொன்னால் அது கடந்த அரசாங்கத்தின் குற்றம் எனக் கூறுகின்றார்கள். எமது ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு சென்றும் மகிந்த ராஜபக்ஷ பற்றி பேசுகின்றார்.

நாம் நாட்டின் பெறுமதியை அதிகரித்தோம். மத்தள விமான நிலையத்தை ஒப்படைத்த போது 24 விமானங்கள் வந்திருந்தன.

எனினும் இவர்கள் அங்கு சென்று நெல்லை களஞ்சியப்படுத்தினர். இன்னமும் இந்த நெல் அகற்றப்படவில்லை.

இந்த நடவடிக்கைகளினால் எம்மை அல்ல அவர்கள் மக்களையே பழிவாங்குகின்றனர். நாம் கடன் வாங்கினோம் என விளம்பரம் செய்கின்றார்கள். எமது காலத்தில் நாம் 5000 மில்லியன் செலவிட்டிருந்தோம். எனினும் இந்த அரசாங்கம் ஒரு ஆண்டு காலப்பகுதியில் 7000 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது.

இவற்றை மக்களிடமிருந்து மறைக்க முடியாது. என்ன நடக்கின்றது என்பதனை தெரிந்துகொள்ள மக்களுக்கு உரிமையுண்டு.

நாட்டின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து செல்கின்றது என மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார். (இ-10)

## இன்று ஒரு தகவல்

### தயக்கம் ஏன்?

எதையும் சொல்லத் தயக்கம்.

உதவி ஒன்றைக் கேட்கத் தயக்கம்.

ஒன்றை மறுப்பதற்குத் தயக்கம்.

இப்படி எதற்கெடுத்தாலும் தயக்கம்.

தயங்கித் தயங்கியே காலச்சக்கரத்தை வீணாய்ச் சுற்றிவிட்டு ஐயையோ! அந்த வண்டியைத் தவற விட்டோமே! என்று பின்னால் வருத்தப்படுகிறவர்கள் எண்ணற்றவர்கள்.

பெரும்பாலானவர்களின் தயக்கத்திற்குக் காரணமே இருக்காது.

இல்லை,எப்படிப் போய்க் கேக்குறதுன்னு தான் யோசனையா இருக்கு.

அதெப்படிங்க இதைச் சட்டுனு சொல்லிட முடியும்?

என்றெல்லாம் விளக்கமில்லாமல் மேலோட்டமாய்ப் பேசிக் கொண்டிருந்தால் அப்படியே இருக்க வேண்டியதுதான். மேற்கூறிய வாசகங்களை நாம் சொல்லக்காரணம் என்ன என்று மெல்ல யோசிக்க வேண்டும். வேறு வகையில் சொல்ல வேண்டுமானால் நம்மீது நாமே போர்த்திக் கொண்டுவிட்ட தயக்கப் போர்வையை எடுத் துப் பார்க்க வேண்டும்.

நம்முடைய தயக்கத்தின் முனை எங்கேயிருந்து ஆரம்பிக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும்.அது பயத்தின் காரணமாக ஏற்பட்ட தயக்கமாயிருந்தால் இப்படிச் சிந்திக்க வேண்டும். என்றைக்கு இருந்தாலும் கேட்டுத்தானே ஆகவேண்டும். அந்த ஆள் மாறப் போவதில்லை. நாம்தான் நம் பயணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

மரியாதை காரணமாகத் தயக்கமாயிருந்தால் மரியாதையை வெளிப்படுத்தியபடியே கேட்கலாமே?கேட்பதால் மரியாதை குறைந்துவிடுமோ என்ன?

பாதகமாக முடிவு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற அக்கறை காரணமாகத் தயக்கமாயிருந்தால் கேட்காமலிருப்பது நியாயம்.ஆனால் சாதகமான முடிவு ஏற்பட என்னென்ன செய்ய வேண்டுமா அதையெல்லாம் ஆரம்பித்து விட வேண்டும். இதைச் செய்யத்தயங்கிக் கொண்டிருக்கக் கூடாது.

எப்படிப் பிரதிபலிப்பார்கள் என்று அனுமானிக்க இயலாததன் காரணமாகத் தயக்கமாயிருந்தால் அவர்களது சுயநலத்தன்மையை மெல்ல அசைபோட வேண்டும்.ஓரளவுதான் அனுமானிக்க முடியும்.எனவே இரண்டு முடிவையும் நாம் ஏற்கத் தயாராகிவிட்டால் தயக்கம் பறந்துவிடும்.

நாம் தயங்குவதை வெளிப்படையாக மற்றவர்கள் உணரும் வகையில் நாம் நடந்து கொண்டால் சும்மா சொல்லுங்க! ஏன் தயங்குறீங்க? என்பார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலை சாதகமான சூழ்நிலையாகும். பலர் உள்ளுக்குள் தயங்கி விட்டு வெளியில் தயக்கமில்லாமல் கேட்பது போல் அல்லது சொல்வது போல் நடந்து கொள் வார்கள். இது கூடாது.

மாறாக,

தயக்கம் என்பது வெளியில்தான் காண்பிக்கப்பட வேண்டும்.உள்ளுக்குள் இருக்கக்கூடாது.

ரொம்பவும் தயக்கமாயிருந்தால் காலம் கனியும் வரை காத்திருக்கலாம்.மாறாக தயக்கத்துடனும் தவிப்புடனும் காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கக்கூடாது.

லேனா தமிழ்வாணன்

# பரீட்சைக்கு முகம் கொடுக்கவுள்ள மாணவர்களை பற்றி சிந்திக்கவும்

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் மற்றும் சாலாவ வெடிப்பு சம்பவத்தினால் பாதிக்கப்பட்டு இந்த முறை உயர்தர பரீட்சைக்கு முகங்கொடுக்கவுள்ள மாணவர்களின் நிலையைப் பற்றி சிந்திக்குமாறு ஒன்றிணைந்த கல்வி நிர்வாக உதவி அதிகாரிகள் சீங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரிவசத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளதாக இந்த சங்கத்தின் தலைவர் அஜித்.கே. திலகரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் உயர்தர பரீட்சையை நடத்துவதற்கு முதல் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணங்களை வழங்குமாறும், முக்கியமாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் மனநிலை பற்றி ஆராய்ந்து பார்க்குமாறும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த சம்பவங்களால் வீடுகள் மற்றும் பாடசாலை புத்தகங்கள் உள்ளிட்ட முக்கிய மானவற்றை இழந்துள்ள குறித்த மாணவர்கள் பரீட்சையை எதிர்கொள்ளக் கூடிய மன நிலையில் இருப்பார்களா? என்பது சந்தேகமே என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. எனவே குறித்த மாணவர் களுக்கு ஏதாவது சலுகைத் திட்டங்களை ஏற்படுத்துமாறு சங்கம் கல்வி அமைச்சருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-13.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 142.75 | 146.51 |
| பிரிட்டன் | பவுண்ட் | 201.75 | 209.10 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 159.51 | 165.93 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.97 | 153.15 |
| கனடா | டொலர் | 110.80 | 115.45 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 104.34 | 109.28 |
| சிங்கப்பூர் | டொலர் | 104.46 | 108.54 |
| இந்தியா | ரூபா | 2.1655 | ------- |
| சீனா | யுவான் | 22.0229 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.6246 |
| குவைத் | டினார் | 481.1716 |
| ஓமான் | ரியால் | 376.6329 |
| கட்டார் | ரியால் | 39.8388 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.6676 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.4798 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 160 | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 75 | 90 | 100 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 600 | 1000 | 350 | 600 | 600 | 600 | 800 |
| தக்காளி | 230 | 200 | 180 | 220 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 70 | 100 | 100 |
| கோவா | 230 | 200 | 130 | 200 | 180 | 200 | 180 |
| கரட் | 280 | 400 | 150 | 320 | 260 | 300 | 200 |
| பூசணி | 60 | 100 | 70 | 80 | 70 | 100 | 70 |
| புடோல் | 100 | 200 | 100 | 100 | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 60 | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 140 | 160 | 140 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 180 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 240 | 400 | 200 | 300 | 220 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 200 | 100 | 160 | 160 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 200 | 100 | 120 | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 180 | 220 | 160 | 200 |
| லீக்ஸ் | 230 | 200 | 180 | 180-240 | 200 | 240 | 200 |
| பீற்றூட் | 120 | 200 | 180 | — | 200 | 200 | — |
| கறிமிளகாய் | 280 | 400 | 260 | 320 | 260 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 300 | 400 | 250 | 400 | 500 |
| போஞ்சி | 250 | 400 | 180 | 200 | 200 | 240 | 200 |
| கத்தரிதம்பள்ள | 140 | 200 | 140 | 150 | 180 | 180 | — |
| கீரை - 1பிடி | 40 | 50 | 25 | 50 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 260 | 300 | 200 | 250 | 300 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 30 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 150 | 300 | 120 | 200 | 160 | 240 | 160 |
| வெங்காயப்பூ | 200 | 200 | — | 280 | 400 | — | 300 |
| முள்ளங்கி | 80 | 200 | — | 100 | — | 160 | 160 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 20 | 30 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 10 | 50 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 100 | — | 80 | 100 | 80 | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## பிரபாகரனுடன் ரணில் விக்கிரமசிங்க புதிய ஒப்பந்தம் 205

அங்கு இருந்த கார் மூலம் விடுதலை புலிகளின் தளம் இருக்கும் ஓமந்தை பகுதிக்கு சென்றனர். கடந்த 7 ஆண்டு களில் பிரதமர் ஒருவர் அந்தப் பகுதிக்கு செல்வது இதுவே முதல் முறை ஆகும்

**முக்கிய அம்சம்**

அரசுக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள முக்கிய அம்சங்ள் வருமாறு,

இரு தரப்பும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட கூடாது. நேரடியாக துப்பாக்கி சண்டை மோதல்கள், பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல், தற்கொலை படை, தாக்குதல் கடற்படை தாக்குதல், வான் வெளி தாக்குதல், போன்றவற்றில் ஈடுபட கூடாது.

விடுதலை புலிகளுடன் போரிடாமல் அதே நேரம் நாட்டின் ஒருமைபாட்டு, ஒற்றுமையை காக்கும் பணியில் இராணுவம் தொடர்ந்து ஈடுபடும்.

போர் நிறுத்தத்தை கண்காணிக்க அமைக்கப்படும் சர்வதேச குழு ஏதாவது விதிமுறை மீறல் நடந்தால் விசாரணை நடத்தும்.

சர்வதேச கண்காணிப்பு குழுவின் அலுவலகம் கொழும்பு வன்னி ஆகிய இரு இடங்களில் செயற்படும் .

இந்த குழுவில் அரசு மற்றும் விடுதலை புலிகள் தரப்பில் தலா 2 பேரும் சர்வதேச கண்காணிப்புகுழு சார்பில் ஒருவரும் இடம் பெறுவார்கள்.

இருதரப்பு சம்மதத்தின் பேரில் உடன்பாட்டை மாற்றி அமைத்து கொள்ளலாம் . உடன்பாட்டை முறித்து கொள்ளவும் இருதரப்புக்கும் உரிமை உண்டு. ஆனால் 14 நாட்களுக்கு முன்பு நோர்வே அரசுக்கும் நோட்டீஸ் அளிக்க வேண்டும். இவ்வாறு அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது.

**இந்தியா வரவேற்பு**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டு இருக்கும் காலவரை அற்ற போர் நிறுத்த ஒப்பந்தத்தை இந்தியா வரவேற்றது.

நாட்டில் நிலவி வரும் இனப் பிரச்சனையைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பதற்கு இந்த உடன்படிக்கை வாய்ப்பு அளிக்கும் என்று மத்திய வெளியுறவுத்துறைச் செய்தி தொடர்பாளர் நிருபமாராவ் கூறினார்.

நாட்டில் அமைதி திரும்பவும் அங்கு பொருளாதார வளர்ச்சி ஏற்படவும் இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று அவர் உறுதியளித்தார்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா இந்த சமரச ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசியல் சட்ட விதிமுறைகளுக்கு முரணாகவும் பாராளுமன்றத்தை புறக்கணித்து விட்டும் விடுதலைப் புலிகளுடன் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டு உள்ளார்,என்று கூறினார். போர் நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள சில அம்சங்கள் குறித்து அவர் கவலையும் தெரிவித்தார்.

ராஜீவ்காந்தி கொலை ஒரு துண்பியல் சம்பவம் என்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறினார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகன் 12 ஆண்டுகளுக்குப்பிறகு 10.04.2002 அன்று முதன் முறையாக நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். எனவே இது மிகவும் பரபரப்பான எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. பேட்டிச் செய்தியைச் சேகரிப்பதற்காக பல்வேறு நாடுகளிலும் இருந்து 500 இற்கு அதிகமான நிருபர்களும் புகைப்படக் காரர்களும் நாட்டிற்கு வந்தனர்.

**இரகசிய இடத்தில்**

பிரபாகரனின் பாதுகாப்பைக் கருதி இந்தப் பேட்டி நடைபெறும் இடம் மிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. ஏராளமான நிருபர்கள் சென்றிருந்த போதிலும் அவர்களில் குறிப்பிட்ட சிலரை மட்டுமே விடுதலைப்புலிகள் தேர்ந்து எடுத்து பேட்டி நடைபெற்ற இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

கிளிநொச்சியில் இருந்து 10 கிலோமீற்றர் தூரத்தில் நடைபெற்ற இந்தப் பேட்டியில் பிரபாகரனிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு பிரபாகரன் அளித்த பதில்களும் பின்வருமாறு,

**தனி ஈழம்**

கேள்வி:- தமிழீழத்திற்கு மாற்றான ஒரு திட்டத்தை ஏற்றுக் கொள்வீர்களா?

பிரபாகரன் பதில்:- அதற்கான அவசியம் ஏற்படவில்லை. ஏனென்றால் தமிழீழக் கோரிக்கையை பொறுத்தவரை அது மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை. 1977 ஆம் ஆண்டு தேர்தலின்போது எமது மக்கள் இதற்கான ஆதரவைக் கொடுத்தனர் இதை ஏற்றுத்தான் தமிழீழத்திற்காக போராடுகிறோம்.

**சமாதானம்**

கேள்வி:- சமாதான முயற்சியில் நேர்மையாக, உண்மையாக இருக்கிறீர்களா? உங்கள் மீது சந்தேகம் உள்ளதே.

பதில்:- நாங்கள் உண்மையாகவே சமாதானத்தை விரும்புகிறோம். அதனால் தான் தன்னிச்சையாகவே யுத்த நிறுத்தம் செய்தோம். 4 மாதத்திற்கு அது நீடித்தது. இதன் மூலம் தொடர்ந்து சமாதானத்திற்கு முயன்று வருவதை உணரலாம்.

கேள்வி:- சமரச முயற்சியில் இறுதியான தீர்வு எட்டப்பட்டு இருக்கிறதா?

பதில்:- இதில் முடிவான தீர்வு எட்டப்படவில்லை. இடைக்கால முடிவிற்காகத் தான் தாய்லாந்து செல்ல இருக்கின்றோம்.





(தொடரும்)

# போதைப்பொருளுடன் தொடர்புடைய 89,996 குற்றச் செயல்கள் பதிவு

(கொழும்பு)

**போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச் செயல்கள், கடந்த 2015ஆம் ஆண்டு 89 ஆயிரத்து 996 ஆக பதிவாகியுள்ளதாக, போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்புடைய அறிககையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

2014 ஆம் ஆண்டு இந்தத் தொகை 74 ஆயிரத்து 366 ஆக காணப்பட்டதாகவும் கடந்த வருடம் இந்தத் தொகை அதிகரித்து காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு, இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 87 ஆயிரத்து 846 முறைப்பாடுகள் இதுவரை விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும்,

2014 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 71 ஆயிரத்து 712 முறைப்பாடுகளின் விசாரணைகள் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, 2015 ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 944 மதுபானம் தொடர்புடைய முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள அதேவேளை, அவற்றுள் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 256 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் பெறப்பட்டுள்ளதாகவும், 2014ஆம் ஆண்டைவிட இந்தத் தொகை குறைவாக காணப்படுவதாகவும் அறியமுடிகின்றது.

2014ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுள் ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 790 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மேலும், சிறுவர்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் 2015ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 911ஆக காணப்பட்டதாகவும் இந்தத் தொகை 2014 ஆம் ஆண்டு 5 இலட்சத்து 868ஆக இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு பெணகளுக்கு எதிராக 8 ஆயிரத்து 288 குற்றச்செயல்களும் 2014ஆம் ஆண்டு 8 ஆயிரத்து 434 குற்றச் செயல்களும் இடம்பெற்றுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(இ-10)

# வடக்கிலிருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்படாது

## மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கிலிருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்படாது என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டி அஸ்கிரி மகாநாயக்கரை சந்தித்து நேற்று முன்தினம் ஆசி பெற்றுக் கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை மாவட்டச் செயலாளர் மேற்கொண்டு வருகின்றார்.

இராணுவ முகாம்கள் தொடர்ச்சியாக பேணப்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முன்னதாக வடக்கில் சிங்கள, முஸ்லிம்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த மக்களை விரட்டியடித்தனர். தற்போது வடக்கில் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஜேர்மன் உதவியுடன் வடக்கில் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனமொன்று நிறுவப்படவுள்ளது, மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இந்த உதவிக்கான அனுமதி கிடைத்தது.

சாலாவ ஆயுதக் களஞ்சிய வெடிப்புச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் சர்வதேச ரீதியில் நன்மதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பாவிற்கு மீன்களை ஏற்றுமதி செய்வது குறித்து விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதுடன், ஜீஎஸ்.பி பிளஸ் சலுகைத் திட்டம் மீளவும் கிடைக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## நிதிக்குற்றப்பிரிவு கலைக்கப்படாது

நிதிக்குற்ற புலனாய்வுப்பிரிவை கலைக்க எவ்வித முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை என பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.


நிதிக் குற்ற புலனாய்வுப் பிரிவை கலைக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தியினால் தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பில், பதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (செ-12)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 751

ரூபன் லிங்கா

மனைவி:- டிபன் வேணுமா?
கணவன்:-சொய்ஸ் இருக்கா?
மனைவி:-இரண்டு இருக்கு!
கணவன்:-என்னென்ன?
மனைவி:-வேணுமா?
வேண்டாமா?

நிஷாந்தன்




ராதை




மது




டினோ




அபி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தரம் 10-11 வகுப்புக்களில் 2015 முதல் அறிமுகமான தமிழ் இலக்கியத் தொகுப்பு நூல் பற்றிய ஒரு பார்வையும் பகுப்பாய்வும்

2015ஆம் ஆண்டுமுதல் இலங்கைப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட தரம் 10-11 வகுப்புகளிற்கான தமிழ்ப்பாடம் தழுவிய நான்கு நூல்கள் வெளிவந்துள்ளன. இவை புதிய பாடத் திட்டத்திற்கு அமைவாகத் தேசிய கல்வி நிறுவகத்தினால் உருவாக்கம் பெற்று பாடசாலைகள் தோறும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் தமிழ்மொழியும் இலக்கியமும் தரம் 10, தரம்11 ஆகியவற்றுக்கான நூல்களும் தமிழ் இலக்கியத் தொகுப்பு என்ற மேற்படி இரு வகுப்புகளிற்குமான நூலும் தமிழ் இலக்கிய நயம் என்ற நூலும் இவற்றுள் அடங்குகின்றன. தமிழ் இலக்கிய நயம் நூலானது மாணவர்களின் விருப்பத்திற்குரிய தெரிவுப் பாடமாகவும் ஏனைய மூன்றும் கட்டாயப் பாடமாகவும் காணப்படுகிறது.

இவற்றினுள் செய்யுள் இலக்கியம், உரைநடை இலக்கியம், இலக்கணம், பயிற்சிகள் போன்ற பலவும் இடம் பெற்றுள்ளன. செய்யுள் இலக்கியத்தில் மரபுக் கவிதைகள், புதுக்கவிதைகள், நாட்டார் பாடல்கள் போன்றவையும் உரைநடை இலக்கியத்தில் கட்டுரைகள் சிறுகதைகள் நாடகங்கள் ஆகியனவும் உள்ளடங்குகின்றன.

மேலும் ஈழத்து இலக்கியம், தமிழ்நாட்டு இலக்கியம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் இஸ்லாமிய இலக்கியங்கள், கிறிஸ்தவ இலக்கியங்கள், இந்து சமயம் சார்பான இலக்கியங்கள் என்றவாறும் அவை இனங்காணத்தக்க வகையில் அலகுகளாக அமைக்கப்பட்டுள்ளன. குறித்த வகுப்புகளிற்குரிய மாணவர்களின் உள வயதுகளிற்கு ஏற்ற முறையில் பாடத்திட்டமும் அதனை ஒட்டிய பாட அலகுகளும் உருவாக்கம் பெற்றுள்ளன. இவை தொடர்பாக விமர்சனங்களும் காணப்படுகின்றன. இவற்றுள் தரம் 10-11 வகுப்புகளிற்குரிய இலக்கியத் தொகுப்பு நூல் பற்றிய கருத்தோட்டத்தினை இக்கட்டுரை முன்னெடுக்கிறது.

இந்நூலில் 18 அலகுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தரம் 10,11 வகுப்புகளில் தலா ஒன்பது அலகுகள் காணப்படுகின்றன. இவ் அலகுகளை செய்யுள், உரைநடைப் பகுதி என்று நோக்கமுடியும். செய்யுட் பகுதியாக நீதிப்பாடல்கள், பாரதியார் சுயசரிதை, தனிப் பாடல்கள், திருக்குற்றாலக் குறவஞ்சி, நாட்டார் பாடல்கள், கம்பராமாயணம் (குகப் படலம்), திருக்குறள், சங்கப் பாடல்கள், தற்காலக் கவிதைகள், மகாபாரதம் (கிருஷ்ண தூதுச் சருக்கம்) தத்தை விடு தூது ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

உரைநடைப் பகுதியினுள் நாவலர் எழுந்தார் (கட்டுரை) கம்பியூட்டர் (சிறுகதை) எது நல்ல சினிமா? (கட்டுரை) இலட்சியமும் சமநோக்கும் (கட்டுரை) மூத்தம்மா (சிறுகதை) அற்றைத்திங்கள் (நாடகம்) தமிழ்ப்பண்பாடு (கட்டுரை) ஆகியன அடங்குகின்றன.

சங்ககாலம் தொடக்கம் தற்காலம் வரை தமிழில் இடம் பெற்ற இலக்கியங்களில் முக்கியமானவற்றை மேலோட்டமாகப் 18 பாடப்பரப்பினூடாக அறிமுகம் செய்ய முனைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றுக்கால கட்டங்களாகிய சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர்காலம்,தற்காலம் என்பவற்றை மையப்படுத்தி இந்நூலில் உள்ள பாடப்பரப்புக்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள. அதற்கேற்றவாறு பாட அலகுகளும் விளங்குகின்றன.

ஒரு மனிதன் வானுறையும் தெய்வத்துள் வைத்து எண்ணப்பட வேண்டுமாயின் வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும். வையத்துள் வாழ்வாங்கு வாழ நீதிநூல்கள் வழிகாட்டுகின்றன. எமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர அடிப்படையாக மட்டுமன்றி இலக்கயத் தொகுப்பினையும் கற்று முடிப்பதற்கான உடல் உள வலுவையும் ஊட்டும் சக்தியாய் முதற் பாட அலகாக நீதிப்பாடல்கள் இடம்பெற்றுள்ளமை சிறந்த வைப்பு முறையை உணர்த்துகின்றது. பல நீதிநூல்களில் செய்யுள்கள் இருப்பினும் ஏழு நூல்களில் இருந்து தலா ஒரு பாடல் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்தம் ஏழுபாடல்கள் இங்கு இடம்பெற்றுள்ளன. விவேகசிந்தாமணிஎன்ற நூலில் இடம்பெற்ற "தண்டாமரையின் உடன் பிறந்தும்..." என்ற பாடலில் புல்லரின் இயல்பு கூறப்பட்டுள்ளது. வெற்றி வேட்கை எனும் நூலில் உருவத்தைக் கண்டு நாம் எடை போடக்கூடாது. அதன்பயன்பாட்டிலேயே தங்கியுள்ளது என்பதற்குத் "தேம்படு பனையின் திரள் பழத்து..." என்ற பாடல் தெளிந்த உதாரணமாக அமைகின்றது. வாக்குண்டாம் என்ற நூலில் "அடக்குமுடையார் அறிவிலார் என்றெண்ணி..." எனும் பாடலில் பொறுமையுடன் காத்திருந்தால் பெரு வெற்றி பெறலாம் என்ற உண்மை கூறப்பட்டுள்ளது. திரிகடுகத்தில் "கணக்காயர் இல்லாத ஊரும்...." என்ற பாடலில் ஒருவருக்கு நன்மை தரும் விடயங்களில் மூன்று நன்மைகள் வைக்கப்பட்டுள்ளன. முதுமொழி வெண்பாவில் மனம் கொண்டதே மாளிகை என்ற முதுமொழி வெளிபட்டு நிற்கிறது. நாலடியார் செய்யுளில் "யானை அனையவர்...." என்ற பாடலில் நட்பினைத் தேர்வு செய்யும் முறை கூறப்பட்டுள்ளது. இறுதியாக இனியவை நாற்பது என்னும் செய்யுளில் செய்யத்தக்க இனிய விடயங்களில் மூன்று விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அதாவது மாணவப் பருவத்தில் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டிய நீதிகளில் சில இப் பாடத் திட்டத்தில் இணைக்கப் பட்டுள்ளது.

அடுத்து இடம்பெற்றுள்ள செய்யுள் பகுதி "பாரதியார் சுயசரிதை" ஆகும். இதில் இடம்பெற்றுள்ள 'பிள்ளைக் காதல்' பகுதியிலிருந்து 5 பாடல்கள் பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. முதல் இரு பாடல்களிலும் பெண்ணின் அழகு, பாரதியின் காத்திருப்பு, காதலில் சிக்கித் தவிக்கும் உணர்வு உவமை மூலம் காட்டப்பட்டுள்ளது. மிகுதி மூன்று பாடல்களிலும் உலகியல் விருப்பங்களை அடையத் தடையாக இருக்கும் காரணிகளும் அதற்கு நாம் சொல்லும் சாட்டுதல்களும் கூறப்பட்டுள்ளதுடன் ஆசைகளை அடைவதற்கான வழிவகைகளும் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. அடுத்து இடம்பெற்ற பாட அலகு "தனிப்பாடல்கள்" ஆகும். இதில் புகழேந்திப் புலவரது "பங்கப்பழனத்து உழும் உழவர்...", படிக்காசுப் புலவரது "ஓர் தட்டிலே பொன்னும்....", காளமேகப் புலவரது "கழியும் பிழை பொருட் தள்ளி...." என்ற கவியும் "ஆடிக்குடத்தடையும் ஆடும் போது..." என்ற சிலேடைப் பாடலும் பொருட் சிறப்பும் அழகியல் உணர்வும் தனித்துவமும் கவித்துவமும் நிறைந்தவையாக இருப்பதனை அவதானிக்க முடிகிறது.

அடுத்து 18ஆம் நூற்றாண்டில் திரிகூட ராசப்ப கவிராயரால் எழுதப்பட்ட "திருக்குற்றாலக் குறவஞ்சி" எனும் நூலில் பாட்டுடைத்தலைவி வசந்த வல்லி கேட்டதற்கு இணங்க குறத்திப்பெண், மலை வளமும் நாட்டு வளமும் கூறும் 5 பாடல்கள் பாடத் திட்டத்தில் ஓர் அலகாக இணைக்கப்பட்டுள்ளன. இவை சந்தம் (ஓசைநயம்) எளிமையான சொல், பொருத்தமான உவமைகள், வர்ணனைகள் கொண்டு இசையுடன் பாடக் கூடியதாகவும் மாணவர்கள் விரும்பிக் கற்கும் அலகாகவும் காணப்படுகிறது.

அடுத்த அலகாக விளங்கும் நாட்டார் பாடல்கள் எனும் விடயமானது தேர்ந் தெடுக்கப்பட்ட 4 பாடல்களை உள்ளடக்கியுள்ளது. இதில் கிராமிய மணம், சொற்கள் திரும்பத் திரும்ப வரும் உத்தி, ஓசை நயம் எளிமையான சொல்லாட்சி இடம்பெற்றுள்ளன. நடைமுறை வாழ்வில் வழக்கொழிந்து செல்லும் நாட்டார் பாடல்களைப் பாடத்தினூடாகக் கற்று அதன் ரசனையை மாணவர்கள் அறிய இவ் அலகு வழிகோலியுள்ளது.

கம்பராமாயண குகப் படலத்திலிருந்து 8பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கங்கையை கடக்கும் வேளை நாவாய் ஒட்டும் குகனுக்கும் தசரதன் மகன் பரதனுக்குமிடையே நடைபெற்ற சம்பாசனையை காணமுடிகிறது. மாணவர்கள் மத்தியில் இராமாயணத்தைக் கற்கும் ஆவல் இதனூடாக உந்தப்படுவதற்கு இது வழிவகுக்கும் எனலாம்.

அடுத்து இடம்பெறும் பகுதி "திருக்குறள்" ஆகும். 84 ஆவது அதிகாரமாகிய பேதைமை இங்கு இடம்பெற்றுள்ளது. பேதைமை என்றால் என்ன? பேதைமையாளரின் இயல்புகள், பேதைமையாளரின் செயல்களினால் ஏற்படும் விளைவுகள், பேதைமையாளரை மதிப்பீடு செய்தல் போன்ற விடயங்களை இக் குறட்பாக்களில் அவதானிக்க முடிகிறது.

அடுத்து கவிநயம் மிகுந்த "சங்கப்பாடல்கள்" இரண்டு இடம்பெற்றுள்ளன. அதில் காதல் பேசும் குறுந்தொகை, வீரம் தழுவிய புறநானூறு ஆகிய நூல்களில் இருந்து தலா ஒவ்வொரு பாடல் தரப்பட்டுள்ளது. புறநானூற்றுப் பாடல் "இனி நினைந்து இரக்கமாகின்று....." என்ற பாடலில் கழிந்த இளமையும் தொடர்ந்த முதுமையும் வித்துவத்துடன் அவைப்படக் கூறப்பட்டுள்ளது. மாணவர்கள் சங்கப் பாடல்களை ஆர்வமாகக் கற்பதற்கான திறவு கோலாய் அமைவதனை அனுபவ ரீதியாகக் காணமுடிகின்றது.

அடுத்து "தற்காலக் கவிதைகள்" என்ற பாட அலகில் தேர்ந்தெடுக்கப்பட்ட சி.வி. வேலுப்பிள்ளையின் தேயிலைத் தோட்டத்திலே அகளங்கனது குழந்தையென எனது மனம் குதூகலிக்கும் சோலைக் கிளியின் சீறி ஓடாத வருங்கால மனித நதி ஆகியன இடம்பெற்றுள்ளன. கவிஞர்களது உள்ளக் குமுறல்கள், எளிய மொழி நடையில் வாசிப்போன் மனதில் தாக் குறவு ஏற்பட எழுதப்பட்டுள்ளன.

அடுத்து "மகாபாரதம்-கிருஸ்ணன் தூதுச்சருக் கம்" ஆகும். தர்மன், துரியோதனனிடம் கண்ணனை தூது விடும் காட்சி இடம்பெற்றுள்ளது. தர்மனது பொறுமைக் குணமூடாக மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய அம்சங்கள் இதில் பொதிந்துள்ளன.

செய்யுள் பகுதியில் இறுதியாகத் "தத்தை விடுதூது" இடம்பெற்றுள்ளது. பெண் விடுதலை பற்றித் தூது இலக்கிய செய்யுள்களூடாக பல இலக்கியங்களை மாணவர்கள் விரும்பி கற்பதற்கு தமிழ் இலக்கியத்தொகுப்பு தரம் 10-11 நூல் திறவு கோலாக அமைவதனைக் காண முடிகின்றது.

செய்யுள்களிற்கு அடுத்த படியாக உரைநடையை நோக்கின் நாவலர் எழுந்தார் என்ற கட்டுரை உரைநடைகளினுள் முதலாவதாக அமைகின்றது. சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய நாவலர் இலங்கைச் சட்டசபைக்குப் பொருத்தமான பிரதிநிதியாக சேர். பொன். இராமநாதனை தெரிவு செய்யத் தனது நோயினையும் பொருட்படுத்தாது பாடுபட்டுள்ளார். இலக்கிய வழி எனும் நூலில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையால் இக்கட்டுரை பதிவு செய்யப்பட்டுள்ளது. தேடல் உள்ள மாணவர்கள் காலத்தின் தேவை கருதி வரலாறுகளைப் புரிவதற்கு இவ் அலகு அத்திபாரமாக அமைந்து கொள்ளும்.

அடுத்து இடம்பெறும் அலகு "எது நல்ல சினிமா" சினிமா மோகம் தழுவிய இத் தலைமுறைக்குப் பொருத்தப்பாடுடைய கட்டுரையாக அமைகின்றது. சினிமா என்ற பெயரில் வருபவை எல்லாம் சினிமா அல்ல அவற்றுள் அடங்க வேண்டிய விடயங்கள் எவை என்பது விளக்கப்பட்டுள்ளது. இது காலத்தின் தேவையும் கூட.

அடுத்த உரைநடைப் பகுதி இலட்சியமும் சமநோக்கும் ஆகும். புராண இதிகாச வரலாற்று இலக்கியப் பாத்திரங்களினூடாக இலட்சியமும் சமநோக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிறு சிறு வாக்கியங்கள் தேவையான இடத்து பொருத்தமான செய்யுள்களைக் கையாண்டு காரண காரிய விளக்கத்துடன் மாணவர்களது மனவெழுச்சிக்குப் பொருத்தமாக இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளன. இலக்கியத் தொகுப்பு தரம் 10-11 நூலின் இறுதி அலகாக வண. தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பண்பாடு இணைக்கப்பட்டுள்ளது. தமிழ் பண்பாட்டின் குறிக்கோள்கள், பண்பாட்டின் உயர்வுக்கு வழிசமைத்தோர், பிறநாடுகளில் தமிழ்ப் பண்பாடு என்ற வகையில் இக் கட்டுரை அமைந்துள்ளது. தமிழர் வாழ்வில் இறுதிவரை தொடர வேண்டிய பண்பாடு, உறுதியாக இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

அடுத்து உரைநடைப் பகுதியில் சிறுகதைகளாக கம்பியூட்டர் முத்தம்மா ஆகியன இடம்பெற்றுள்ளன. மாணவர்கள் மத்தியில் வாசிப்புப்பழக்கம் அருகிவரும் இக்காலத்தில் சிறுகதைகளை வாசிக்கத்தூண்டும் வகையில் இவை இடம் பெற்றுள்ளன.

புறநானூறில் பாரி மகளிர் பாடிய "அற்றைத் திங்கள் அவ் வெண்நிலவில்..." என்ற பாடலை மையமாகக் கொண்டு கவிஞர் இன்குலாப் என்பவரால் எழுதப்பட்ட "அற்றைத் திங்கள் நாடகம்" இப்புதிய பாடத் திட்டத்தில் ஓர் அலகாக இணைக்கப்பட்டுள்ளது. எல்லாக்காலங்களிலும் மண்ணின் மக்கள் துயரம் பேசுபொருளாக நாடகத்தில் இடம்பெற்றுள்ளது.

எனவே 2015 ஆம் ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தரம் 10-11 வகுப்புகளின் தமிழ் இலக்கியத் தொகுப்பு நூலானது குறித்த வகுப்பினருக்கும் பொருத்தமான பாடவிடயங்களை உள்ளடக்கியிருப்பதனை அவதானிக்க முடிகிறது. ஆயினும் இந்நூலின் உருவாக்கம் பற்றிய விமர்சனங்கள் பல்வேறு தரப்பினாலும் எழுப்பப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். பாடநூலில் வெளி வந்துள்ள எழுத்துப் பிழைகள் பொருத்தமற்ற பாடப்பரப்புக்கள், பாரபட்சமான விடய உள்ளடக்கங்கள் என்றவாறு பலவிதமான குறைபாடுகள் தமிழறிஞர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றன. தமிழ் மாணவர்களின் நலன்கருதி இத்தகைய தமிழ்நூல்கள் உருவாக்கப்படும்போது தகுதி வாய்ந்த குழுவினரின் மேற்பார்வையும் செயற்பாடும் அவசியமானதாகும். வருங்காலத்தில் குறைபாடுகள் இன்றி தமிழ் மாணவர்களின் இலக்கியக் கல்வியை வளப்படுத்தக்கூடிய நூல்கள் தோன்றும் என நம்புவோமாக!

திருமதி. கு.ரகுநாதன்

### மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற

# பாரிய மோசடிகளை விசாரிக்க விசேட நீதிமன்றம் அவசியம்

## அமைச்சர் சம்பிக்க பரிந்துரை



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரிய மோசடிகளை விசாரிக்க விசேட நீதிமன்றம் அவசியம் என்று மாநகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மோசடிகளில் ஈடுபட்ட முன்னாள் அரசாங்கத்தின் அங்கத்தவர்கள் தற்போது நீதிமன்றங்களுக்கு செல்வதும் பிணையில் வருவதுமான நிகழ்வே இடம்பெறுகிறது.

கைது செய்யப்படுவதையும் அவர்கள் தடுத்து வருகின்றனர். இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தின் மோசடிகளை விசாரிப்பதற்காக தனியான விசேட நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

மகிந்த ஆட்சிக் காலத்தில் சம்பிக்க முக்கிய அமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவசர நிதியுதவி வழங்கப்படவேண்டும்

## ஆனந்தசங்கரி ஜனாதிபதியிடம் கோரிக்கை

எதிர்பாராதவிதமாக சொற்ப நேரத்தில் கொஸ்கம, சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட சம்பவத்தால் தமது சகல சொத்துக்களையும் இழந்தவர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்களது வீடுகளுக்கும் ஏனைய சொத்துக்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இழந்தவற்றை மீளப்பெறுவது என்பது சுலபமான காரியமல்ல. இந்த சம்பவத்தின் தாக்கம் அங்கு அந்த இடத்தில் உள்ளவர்களுக்கே தெரியுமாகையால் வழங்கப்பட்ட புனர்வாழ்வு பற்றி பாதகமாகவோ சாதகமாகவோ நான் கருத்துக்கூறுவது சரியல்ல.

ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறிப்பிட்ட சில காலத்துக்கு மாதாமாதம் 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டுமென்ற அரசாங்கத்தின் முடிவை நான் பாராட்டுகின்றேன்.

இன்று சாலாவ கிராமத்தில் காணும் அதே காட்சியைத் தான் யுத்தம் முடிந்தவுடன் மட்டுமல்ல ஏழு ஆண்டுகள் கடந்த பின்பும் சில இடங்களில் இன்றும் வன்னியில் காணக் கூடியதாக உள்ளது. ஒரேயொரு வித்தியாசம் யாதெனில் அவர்களின் சிறிய, பெரிய வீடுகள் இருந்த இடத்தில் சிறு குடிசைகள் தோன்றுவதோடு இடிபாடுகள் அகற்றப்பட்டுள் ளன.

சிறு குடிசைகளில் அவர்களின் வாழ்க்கை மிகமோசமாகவும் மனித வாழ்விடங்களுக்கு உதவாததாகவும் முறையான வருமானம் பெற முடியாமலும், போதிய உணவின்றியும் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள்.

ஜனாதிபதியே!, ஒரு வருடத்துக்கோ அல்லது அதற்கு மேலாகவோ ஒரு திட்டத்தை உருவாக்கி அவசியமாக தேவையானவர்களுக்கு கூப்பன் மூலமாக இலவச உணவு அல்லது குறைந்த விலையில் உணவுப்பொருட்கள் அத்துடன் மாதாமாதம் 25 ஆயிரம் ரூபா சேர்த்துக் கொடுத்தால், பூர்த்தியாகாது இருக்கும் தங்கள் வீடுகளை பூர்த்தி செய்து தமக்கு வேண்டிய வருமானத்தையும் தேடிக் கொள்வார்கள்.

மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் பற்றி தாங்களின்கவனத்திற்கு கொண்டு வராமல் இருப்பதால் அவர்கள் வசதியாக இருக்கின்றார்கள் என்ற அர்த்தமல்ல.

புலம் பெயர்ந்தவர்களால் வழங்கப்படும் நிதி உதவிகள் உரியவர்களுக்கு சென்றடைவதில்லை. ஆகவே 1975 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட கூப்பனுக்கு உணவு வகைகள் வழங்கிவந்த முறைமையை, வருமானம் குறைந்தவர்களுக்கு வழங்கி வைப்பீர்களேயானால் வசதிகுறைந்தவர்கள் எவரும் பட்டினிகிடக்க வேண்டிய நிலைமை ஏற்படாது.

வன்னியிலும் வேறு பிரதேசங்களிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கும் நிதியுதவி கோரிக்கையை புறந்தள்ளாமல் ஒரு சாதகமான முடிவை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இத்திட்டத்திற்கு போதிய நிதி குறைபாடு இருப்பின் வன்னியில் கைப்பற்றப்பட்ட தங்கத்தை இதற்கு பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

# அதிகாரத்தைப் பெறவே இனவாதிகள் குழப்பம்

## கிழக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு

இந்த நாட்டில் இனவாதத்தை தூண்டி ஆட்சி அதிகாரங்களை பிடிக்க நினைப்பவர்களே, தற்போது அரசியலில் குழப்ப நிலைகளை ஏற்படுத்தி வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மட்டக்களப்பு, திராய்மடுப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், 13 ஆவது திருத்தச் சட்டத்தில் அதிகாரப் பகிர்வு எனும் விடயத்தை வழங்கி விட்டு, அதை அமுல்படுத்துவதில் பல சிக்கல் நிலைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளமையை அனைவரும் அறிவார்கள். இந்த அதிகாரப் பகிர்வுக்கு சமாந்தரமாக நிதி ஒதுக்கீடு வழங்கப்படாத நிலையும் உள்ளது என்றார்.

மேலும், ஆயிரம் மில்லியன்களைத் தாண்டியதாக இதுவரை கிழக்கு மாகாண சபைக்கு நிதி ஒதுக்கீடுகள் வந்ததில்லை. ஆனால், இந்த ஆண்டு 4 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டது மட்டுமன்றி, கிழக்கு மாகாண அமைச்சுகள் ஊடாக பாதைகளைப் புனரமைப்பதற்கு 900 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபையின் கல்வி வளர்ச்சிக்காக 5ஆயிரத்து 471 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாகாணங்களுக் கான நிதி ஒதுக்கீடுகளில் மாற்றம் வேண்டும் என்பதை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அறிவுறுத்தி ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடுகளையும் பெற்றுக் கொள்ளும் அனைத்து வழிவகைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

கிழக்கு மாகாண சபையில் இடம்பெறும் நிதி ஒதுக் கீடுகளில் எந்தவிதப் பிரச்சினையும் எழுவதற்கு நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

அதைச் சரியாக பங்கிடப்பட வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது.

அதைச் செயற்படுத்த வேண்டிய பொறுப்பு முதலமைச்சர் என்ற வகையில் எனக்குள்ளது என்றார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதில் ஜனாதிபதியும் பிரதமரும் இனவாதச் சக்திகளுக்கு அடிபணியாமல், இழுத்தடிப்புச் செய்யாமல் தேவையை உணர்ந்து செயற்படவேண்டும்.

அதற்காகவே, சிறுபான்மை மக்கள் இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வாக் களித்தார்கள். இந்த நாட்டில் இருந்த இனவாதச் சக்திகளை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த அரசாங்கத்துக்கு அவர்கள் வாக்களித்தனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# செய்தித்துளிகள்

## தேயிலை ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி

தேயிலை ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களுக்கான தேயிலை ஏற்றுமதி வருமானம் சுமார் பத்து வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி இந்த புள்ளிவிபரத் தகவல்களை வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டு முதல் இரண்டு மாத காலப்பகுதியில் தேயிலை ஏற்றுமதி மூலம் 221.9 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டது. (இ-10)

## களிமண் குழியினுள் விழுந்து மாணவன் பலி

வஸ்கடுவ-கொபோதுவ பிரதேசத்தில் வெட்டி வைத்திருந்த களிமண் குழியொன்றினுள் 15 வயது பாடசாலை மாணவனொருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். குறித்த மாணவனின் வீட்டில் நேற்று நிகழவிருந்த பைரவ பூஜைக்காக குங்கிலிய பூக்களை தேடி சென்ற வேளையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. (இ-10)

## இராஜினாமாவுக்கு யானையே காரணம்

வனப் பாதுகாப்புத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுமித் பிலபிடியவின் இராஜினாமா கடிதத்துக்கான காரணத்தை வனத்துறை அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெளிவுபடுத்தியுள்ளார். பறிமுதல் செய்யப்பட்ட 140 யானைகளில் 15 யானைகள் பெரஹரா நடத்துவதற்குப் பயன்படுத்தும் யானைகள் எனவும் இதனால், அதனை மீண்டும் ஒப்படைக்குமாறு பிரேரணைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதற்கு பணிப்பாளர் நாயகம் முரண்பட்டுள்ளார். இதனால் ஏற்பட்ட கருத்து முரண்பாடே இவரது இராஜினாமாவுக்குக் காரணம் என அமைச்சர் தெரிவித்தார். (இ-10)

## தேரரின் திருட்டுத்தனம் அம்பலம்

விகாரை ஒன்றுக்கு நன்கொடை சேகரிப்பதாக கூறி. டிக்கெட்டுக்களை விற்பனை செய்து பணத்தினை சேகரித்து வந்த தேரர் உட்பட மூன்று பேரை சிலாபம் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

தான் சேவை புரியும் விகாரையில் கட்டுமான நடவடிக்கைக்காக பணம் தேவைப்படுகிறது எனக் கோரி டிக்கெட் புத்தகங்களை அச்சு பிரதி செய்து விற்பனை செய்துள்ளதால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். எனினும் இவ்வாறான கட்டுமான நடவடிக்கை இடம் பெறவில்லை என விகாரையின் பங்களிப்பு சபை, பொலிஸாருக்கு அறிவித்துள்ளது. (இ-10)

## தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தம்

தபால் ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் வெளியிடங்களுக்கு செல்லக்கூடிய 90 வீதமான கடிதங்கள் தேங்கி இருப்பதாக, ஒன்றிணைந்த தபால் கூட்டுத்தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தபால் திணைக்களத்தின் ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய நியமனங்கள் மற்றும் சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட 14 கோரிக்கைகளை முன்வைத்தே குறித்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஒன்றிணைந்த தபால் கூட்டுத்தொழிற்சங்க முன்னணியின் ஏற்பாட்டாளர் எச்.கே.காரியவசம் தெரிவித்தார். (இ-10)

## விண்ணப்பம் கோரல்

இலங்கை பொலிஸ் சேவையில் உப பொலிஸ் பரிசோதகர் பதவி - விசேட அதிரடிப்படை பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வயதெல்லை விண்ணப்ப முடிவுத் திகதியன்று (10.08.2016) 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். **கல்வித் தகைமைகள்-** க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேலதிக தகவல்களுக்கு 10.06.2016 ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானியைப் பார்வையிடவும். (இ)

## ஆட்டோ பதிவு கட்டாயம்

மேல் மாகாணத்தில்வாடகைக்கு அமர்த்தப்படும் அனைத்து ஆட்டோக்களையும் மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் பதிவு செய்ய வேண்டுமென மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் நுவன் வணிகரத்ன தெரிவித்துள்ளார். இவ்வருடம் ஒக்டோபர் மதத்துக்கு முன்னர் பதிவு செய்யப்பட வேண்டுமெனவும், பதிவு செய்யப்படாத ஆட்டோக்களை அடுத்த வருடம் வாடகைக்கு அமர்த்த அனுமதி வழங்கப்படமாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# தமிழ் சினிமா வரலாறு

## 183 அண்ணாவுடன் நாடகத்தில் நடித்தார்! பெரியாரிடம் 'சிவாஜி' பட்டம் பெற்றார்!

**சிவாஜிவாழ்க்கையில் திருப்புமுனை**

திராவிட நாடு அலுவலகத்தில் தங்கியிருந்த சிவாஜி கணேசன் இதற்குள் அண்ணாவுடன் நெருங்கி பழகியிருந்தார். சிவாஜியின் நடிப்பாற்றல் பற்றி அண்ணாவும் நன்கு அறிந்திருந்தார்.

எனவே சிவாஜியை அழைத்து கணேசா என் நாடகத்தில் சிவாஜி வேடத்தில் நடிக்கிறாயா என்று கேட்டார். இதைக்கேட்ட சிவாஜிக்கு இன்ப அதிர்ச்சி. தன் காதுகளையே நம்ப முடியவில்லை. என்ன அண்ணா சொல்கிறீர்கள்? உங்கள் நாடகத்தில் நான் நடிப்பதா? அதுவும் சிவாஜி வேடத்தில்! என்னால் முடியுமா என்றார். நீ முயற்சி செய்து பார் கணேசா. உன்னால் முடியுமென்றார் அண்ணா.



காகப்பட்டராக அண்ணாவும், சிவாஜியாக சிவாஜிகணேசனும் நாடகத்தில் நடித்த காட்சி

மேலும் அவர் 90 பக்க நாடக வசனங்களை சிவாஜியிடம் கொடுத்து நான் வீட்டிற்கு சென்று வருகிறேன். அதற்கு இதை நீ படித்து வைத்திரு. எப்படி பேசுகிறாய் பார்ப்போம் என்று கூறிவிட்டு, வீட்டிற்கு சென்று விட்டார்.

அவர் சிவாஜிடம் வசனத்தை கொடுத்த போது பகல் 11 மணி இருக்கும். அண்ணா வீட்டிற்கு சென்று மாலை 6 மணியளவில் திரும்பி அலுவலகத்திற்கு வந்தார். கணேசா வசனத்தை படித்தாயா? என்று கேட்டார்.

சிவாஜி அவரிடம் அண்ணா நீங்கள் இப்படி உட்காருங்கள் என்று கூறி அவர் எழுதிக்கொடுத்த வசனங்களை பேசி அதற்கு தகுந்தால் போல் நடித்துக் காண்பித்தார்.

அண்ணா சிவாஜியை கட்டித்தழுவி கணேசா நீ இதை ஏழே மணி நேரத்தில் மனப்பாடம் செய்து விட்டாயே! அரிய சாதனை என்றார்.

அண்ணா எழுதிய 90 பக்க வசனத்தை குறுகிய காலத்தில் படித்து நடித்துக் காட்டினார் என்றால் அதற்கு சிவாஜிடமிருந்த கலை ஆர்வமும் மனப்பாடம் செய்வதில் அவருக்கு இருந்த ஆற்றலும் தான் காரணம்.

திராவிடக் கழக மாநாட்டில் சிவாஜி கண்ட இந்து இராஜ்ஜியம் நாடகம் நடந்தது. இந்த நாடகத்தில் சிவாஜியாக சிவாஜி கணேசனும் காகப்பட்டர் வேடத்தில் அண்ணாவும் நடித்தனர்.

**பெரியார் பாராட்டு**

மூன்று மணி நேரம் நடந்த நர்டகத்தை கடைசி வரை இருந்து பார்த்தார் பெரியார். நான் 10 மாநாடுகளில் சொல்லக்கூடிய கருத்துக்களை இந்த ஒரே நாடகத்தில் சொல்லி விட்டார் அண்ணா என்று பாராட்டினார். அத்துடன் யாரோ ஒரு சின்னப்பையன் சிவாஜியாக நடித்தாரே அவன் யாரென்றான்.

சிவாஜி கணேசனை பெரியார் முன்கொண்டு போய் நிறுத்தி இந்த பையன் தான். பெயர் கணேசன் என்று அறிமுகம் செய்துவைத்தார்.

சிவாஜியாக ரொம்ப நன்றாக நடித்தாய்! இன்று முதல் நீ கணேசன் அல்ல. சிவாஜி என்று பெரியார் வாழ்த்தினார். பெரியாரின்



பெரியாருடன் சிவாஜிகணேசன்

இந்தவாழ்த்து பெரிய பட்டமாக அமைந்து விட்டது. அதுவரை வி.சி.கணேசன் என்று அழைக்கப்பட்டவர் அன்று முதல் சிவாஜி கணேசன் ஆனார்.

என்னுடைய வாழ்க்கையின் உயர்வுக்கு உறுதுணையாக இருந்தது சிவாஜி என்ற பெயர்! ஐயாவையும் அண்ணாவையும் அந்த மாநாட்டையும் நான் என்றுமே மறப்பதில்லை.

(தொடரும்)

# உபால், கீத் ஆகியோரை தாக்கிய இராணுவத்தினர் லசந்தவின் படுகொலையுடன் தொடர்பு

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களாக கருதப்படும் இராணுவத்தினர் சிலர் ரிவிர பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் உபாலி தென்னகோன் மற்றும் அவரது மனைவி மீதான தாக்குதல், நேஷன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் கீத் நொயர் மீதான தாக்குதல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸமா அதிபர் ரவி செனவிரத்ன, அதன் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சுதத் நாகஹமுல்ல ஆகியோரின் மேற்பார்வையில் உதவி பொலிஸ் அத்தியட்சர் திசேராவின் கீழ் பொலிஸ பரிசோதகர் நிஷாந்த டி சில்வா தலைமையிலான பொலிஸ் குழு முன்னெடுத்துள்ள லசந்த படுகொலை தொடர்பிலான சிறப்பு விசாரணைகளிலேயே இந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந் நிலையில் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ள லசந்த கொலை மற்றும் ஊடகவியலாளர்களான உபாலி மற்றும் கீத் ஆகியோர் மீதான தாக்குதல் சம்பவங்கள் உள்ளிட்ட சில சம்பவங்கள் மிகத் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது. அதில் தாக்குதலுக்கு அல்லது குற்றச் செயலை அரங்கேற்றுவதற்கு முன்னர் ஒரு தனிப்படை குறித்த இலக்கு வைக்கப்படும் நபரை வேவு பார்ப்பதும், தாக்குதலை மற்றொரு தனிப்படை நடத்துவதும் அதன பின்னர் பிறிதொரு குழு சாட்சியங்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் இதுவரையிலான விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளன.

இந் நிலையில் குறிப்பிட்ட இராணுவக் குழுவுக்கு வேறு ஏதும் குற்றச் செயல்களுடன் தொடர்புள்ளதா என்பதைக் கண்டறியவும் தற்போது மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறஅத்தியட்சர் திசேரா வின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ள லசந்த கொலை தொடர்பிலான விசாரணைகளில் தற்போது சந்தேக நபர்கள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் அந்த சந்தேக நபர்களைக் கைது செய்ய, குற்றப்புலனாய்வுப் பிரிவு நடவடிக்கைகளை முனனெடுக்க மேலும் சில தகவல்கள் அவசியமாவதாகவும் அந்த தகவல்களை வழங்க தொடர்ந்தும் இராணுவம் இழுத்தடிப்புச் செய்வதால் சந்தேக நபர்களைக் கைது செய்வதில் தற்போது சிக்கல் நிலவுவதாகவும் அறிய முடிகிறது.

ஏற்கனவே கல்கிசை நீதிவான் இராணுவ தளபதிக்கு குறித்த தகவல்களை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்க நேரடி உத்தரவொன்றினை பிறப்பித்துள்ள நிலையில் இராணுவமோ தொடர்ந்து தகவல்களை வழங்காது இழுத்தடித்து வருவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## அவுஸ். தேர்தலில் இலங்கையர் போட்டி

இலங்கையை பூர்வீகமாகக கொண்ட ஜகத் பண்டார, தமது கட்சியின் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய லேபர் கட்சி அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை 2ஆம் திகதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தான் அங்கு சென்ற நாள் முதல் பல்வேறு சமுகங்களைச் சேர்ந்த மக்களின் நலனுக்காகவும் அயராது உழைத்ததாக ஜகத் பண்டார சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி கவனமாகவும் அவுஸ்திரேலியா மற்றும் எமது மக்களுக்கு எது சிறந்தது என ஆராய்ந்தும் வாக்களிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-10)

## தாயும் மகனும் சடலமாக மீட்பு

காலி கரந்தெனிய பகுதியிலிருந்து தாய் மற்றும் மகன் ஆகியோரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சடலங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மட்கப்பட்டுள்ளதாக காலி பொலிஸார் தெரிவித்தனர்.

நீரில் மூழ்கி உயிரிழந்த மகனின் சடலம் ஏகொட வெல ஆற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதோடு, எரிந்த நிலையிலான தாயின் சடலம் ஆற்றுக்கு அருகில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

தாயின் வயது 60 எனவும் மகனின் வயது 29 எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் கடந்த சில நாட்களாக காணாமல் போயிருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். மேலும் இவர்களது மரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# சிறுமிகள் விற்பனை மோசடி அம்பலமானது

## பொலிஸார் அசமந்தம்

அநுராதபுரம் - எலயாபத்துவ பிரதேசத்தில் வசித்து வந்த 14 வயது சிறுமியை கடத்தி சென்று புத்தளம் பிரதேசத்தில் தடுத்து வைத்திருந்த சம்பவம் அண்மையில் தெரியவந்துள்ளது.

குழந்தைகளை கடத்தி சென்று விற்பனை செய்யும் மோசடி இதன் மூலம் தெரிவந்துள்ளதாக அந்த சிறுமியின் தாய் தெரிவித்துள்ளார்.

மே மாதம் 16 ஆம் திகதி தனது வீட்டின் அருகே உள்ள இடத்தில் மலர்களை பறிக்க சென்ற போது தான் கடத்தப்பட்டதாக குறித்த சிறுமி தெரிவித்துள்ளார். இந்த சம்வம் தொடர்பாக அந்த சிறுமி இவ்வாறு தெரிவித்தார்.

"நான் மலர்களை பறித்து கொண்டிருந்த போது ஆட்டோ ஒன்று வந்தது.

அதில் இருந்த பெண் ஒருவர், மழை வருகிறது வீட்டுக்கு அருகில் சென்று விடுகிறோம் என தெரிவித்தார். பின்பு எனக்கு இளநீர் ஒன்றை கொடுத்து பருக கூறினார். அந்த இளநீரை பருகிய பின்னர் எனக்கு சுய நினைவு இல்லை.

பின்னர் எனக்கு சுய நினைவு வரும் போது ஒரு அறையில் தான் இருந்தேன்.

என்னை சிறுவர்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு கொண்டு சென்றுள்ளமை இதன் போது எனக்கு தெரிய வந்தது. அங்கு சில சிறுமிகளும் இருந்தனர்.

இத்தாலியில் இருந்து வருபர்களுக்கே இவ்வாறு சிறுமிகள் விற்பனை செய்யப்படுகின்றனர். ஒரு மணித்தியாலத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் அல்லது 4 ஆயிரம் ரூபாய்க்கு சிறுமிகள் விற்பனை செய்யப்படுகிறார்கள்.

என்னை அங்கு 16 நாட்கள் தடுத்து வைத்திருந்தனர்.

சரியாக உணவுதரவில்லை. மேலும் அம்மாவிம் 20 லட்சம் ரூபாய் கப்பம் கோரினர்" என்றார்.

புத்தளம் - பாலாவி பிரதேசத்தில் உள்ள விடுதியொன்றில் இவ்வாறு சிறுமிகள் தடுத்த வைத்துள்ளமை தெரியவந்தளது.

இது தொடர்பாக காணாமல் போன சிறுமிகளின் பெற்றோர்கள், பொலிஸாரிடம் முறைப்பாடு செய்த பின்னர் பாலாவி பிரதேசத்தல் உள்ள குறித்த விடுதி சோதனையிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவிகளே இவ்வாறு கடத்தப்படுவதாக குறித்த சிறுமியின் தாய் தெரிவித்தார்.

அங்கு இருந்து எனது பிள்ளை காப்பாற்றப்பட்டாலும், இந்த மோசடியுடன் தொடர்புடையவர்களை பொலிஸார் கைது செய்யவில்லை என அந்த தாய் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எமது செய்தி பிரிவு புத்தளம் பொலிஸாரிடம் வினவ முற்பட்ட போதும், இது தொடர்பாக எவரும் கருத்து தெரிவிக்க வில்லை. (இ-10)

யாதும் ஊரே யாவரும் கேளிர்.
- கணியன் பூங்குன்றனார்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழர்களின் ஒற்றுமை ஊர்தோறும் பிரவாகிக்கட்டும்

ஒரு புத்த துறவியின் வழிப்படுத்தலுடன் சிங்கள கிராமத்து மக்கள் பஸ் வண்டிகளில் வடபகுதிக்கு சுற்றுலா வருகின்றனர்.

வருகின்ற சுற்றுலாப் பயணிகள் வெளியிடத்தில் சமைத்து ஒற்றுமையாக இருந்து உண்டு மிக்க மகிழ்வுடன் தமது சுற்றுலாப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்கின்றனர்.

ஒரு கிராமத்து சிங்கள மக்கள் தங்கள் உறவுகள், அயல்வீடுகள், சுற்றம் என ஒன்று சேர்ந்து சுற்றுலாப் பயணம் மேற்கொண்டு ஒரு இடத்தில் இருந்து சமைத்து எல்லோரும் ஒன்றாகக் கூடி உண்டு மகிழ்வது போல எங்களால் செய்ய முடியுமா?

அவ்வாறு ஊர் கூடி சுற்றுலாச் சென்றிருக்கிறோமா? இப்படி கேள்வி எழுப்பினார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்.

கிராம சேவையாளர் ஒருவரின் பிரியாவிடை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோது மேற்போந்த கருத்தைத் தெரிவித்த பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்,

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் இவ்வாறான ஒற்றுமை நிலவுமாக இருந்தால் எங்கள் கிராமத்து மக்களும் ஒன்றுகூடி ஒற்றுமையாக பயணிக்க முடியும் என்றார்.

இவ்வாறு அவர் கூறியபோது நம் இதயம் சற்றுக் கனத்துக் கொண்டது. எங்களிடம் ஏன் அப்படியொரு ஒற்றுமை இல்லாமல் போனது.

உண்மையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாங்கள் அல்லவா பலத்த ஒற்றுமை மிக்கவர்களாக இருக்க வேண்டும். இருந்தும் எங்களிடம் அந்த ஒற்றுமை இல்லாமல் போனமை மிகப்பெரும் துரதிர்ஷ்டம்.

எங்கள் பகுதிகளில் உள்ள சாதாரண சன சமூக நிலையம் முதல் ஆலயங்கள், பொது அமைப்புகள், அரச நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் என அனைத்துத் தரப்பிலும் கருத்து முரண்பாடுகளும் சச்சரவுகளுமே தலைவிரித்து ஆடுகின்றன.

எங்கள் மக்களை ஒற்றுமைப்படுத்தி ஊர்கூடி தேர் இழுக்க வைத்த ஆலயங்கள் இன்று பிணக்குற்று நீதிமன்றத்தில் தீர்ப்பு வேண்டி காத்திருக்கின்றன. இந்நிலைமையில் தமிழ் அரசியல்வாதிகள் தத்தம் தேவை கருதி கன்னை பிரிந்து தமக்குக் கிடைத்த பதவிகளை துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர்.

இதற்கு மேலாக கட்சித் தலைமைப் போட்டி என்பது இனப்பிரச்சினைகான தீர்வை விட மிக முக்கிய விடயமாயிற்று.

இந்நிலையில் தமிழ் மக்களை– ஊர் கிராமங்களை ஒன்று திரட்டி ஓரணியில் வழிப்படுத்த யார் உளர்?

அயலில் இருப்பவர் யார் என்று அறிவதைக் கூட வேலைப்பளு என்று நினைத்து முகநூலில் முகவரியைத் தேடுகின்ற எங்கள் இளம் சமூகத்தில் ஒற்றுமை என்பது இன்னமும் பலவீனமாகவே அமையப்போகிறது.

இத்தகையதோர் ஆபத்தான சூழ்நிலையில்தான் எங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய தேவை அவசியமாகிறது.

தமிழினம் என்ற அடையாளத்தின் ஊடாக நாம் ஒன்று சேர மறந்து மறுத்து விடுவோமாயின் எங்கள் எதிர்காலம் மிக மோசமானதாகவே அமையும்.

எனவே ஊர் ஒற்றுமை பற்றி சிந்தித்து செயல் ஆற்றுவோம்.

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை தின

# திருமுறை மனனப் போட்டியும் வினாவிடைப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை – சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம், சைவச் சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும் சைவ சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, மாணிக்க வாசகசுவாமிகள்குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியையும் வினாவிடைப்போட்டியையும்நடத்த வுள்ளது.

இப்போட்டிகள் தரம் 1, 2 பாலர் பிரிவிலும் தரம் 3, 4 கீழ்ப் பிரிவிலும் நடத்தப்பட வுள்ளது.

திருமுறைமனனப்போட்டி பாலர் பிரிவுக்கு "முத்திநெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனைப்", "பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்" ஆகிய இரு திருமுறைகளும்,

கீழ்ப் பிரிவுக்கு "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்" ,வான் ஆகி! மண் ஆகி! வளி ஆகி! ஒளி ஆகி! ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறைமனனப்போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வினாவிடைப் போட்டிக்குரிய வினாக்கொத்து படிவத்தை பெற்று பூர்த்தி செய்து மீள ஒப்படைக்கப்படல் வேண்டும்.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி யூன் 18ஆம் திகதியாகும். பரிசில்கள் யூலை 9ஆம் திகதி அன்று வழங்கப்படும்.

மேற்படிப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவ சமய அபிவிருத்திக் கழக அறிவகம், இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப 3.30 மணி முதல் 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக் கழக சமய பிரசாரகரும்பரீட்சைசெயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ

# 40ஆவது ஆண்டு நிறைவும் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் சங்கத் தலைவர் ஆ.உதயசங்கர் தலைமையில் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மாவை பாரதி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதமவிருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட், சிறப்பு விருந்தினர்களாக கே.கே.எஸ். பொலிஸ் அதிகாரி பி.அபயரத்ன, சுன்னாகம் பொலிஸ் அதிகாரி எச்.எல்.துஸ்மந்த, தெல்லிப்பழை பொலிஸ் அதிகாரி யு.எல்.டி.சுமித் பிரியந்த, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி ப.நந்தகுமார், வட மாகாண சம்மேளனத் தலைவர் க.நாகராசா, ஒன்றியத் தலைவர் ந.பிரபாகரன் எனப் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் கலை நிகழ்வும் கௌரவிப்பு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (இ-7)

# பயணப் பையை பரிமாற முடியும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 12.06.2016 ஆம் திகதி இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான NC 0994 இலக்க பேருந்தில் கொழும்பில் இருந்து பிற்பகல் 1.30 மணிக்கு புறப்பட்டு யாழ்.நோக்கி வந்த பேருந்தில் மீசாலை புத்தூர் சந்திப் பகுதியில் பயணத்தை முடித்துக்கொண்டு இறங்கிய ஒரு பயணி தவறுதலாக தனது பயணப்பை என நினைத்து வேறு ஒருவருடைய பயணப் பையுடன் இறங்கியுள்ளார். எனவே சம்பந்தப்பட்டவரது பயணப்பை இ.போ.ச. யாழ்.கோண்டாவில் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தயவு செய்து சம்பந்தப்பட்ட பயணி தவறுதலாக மாறி எடுக்கப்பட்ட பயணப் பொதியை பாரம் கொடுத்து தங்களது பயணப் பையை சரிபார்த்து பெற்றுக் கொள்ளுமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் அறிவித்துள்ளார். (இ

# மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல்மாலை 5.30 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** வெள்ளம்பொக்கட்டி, கச்சாய் தெற்கு, பாலாவி, கெற்பலி, அல்லாரை ஆகிய இடங் களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** உருத்திரபுரம், சிவன்நகர், ஜெயந்திநகர், கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், புதூர் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** குடசெட்வீதி, குருமன்காடு கிராமம், வவுனியா நகரம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** நானாட்டான் பிரதேசம், முருங்கன்பிட்டி, மாவிலங்கேணி, அச்சம் குளம், பூவரசங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (இ-9)

# ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



ஆறாம் நாள் (14.06.2016)

ஓங்கார ரூபனே! ஆனை முகத்தோனே!
ஆங்காரம் போக்கியே எமக்கு ஆறுதல் தந்திடுவாய்!
எங்களது நல்வாழ்வில் பல ஏற்றங்கள் தருபவனே!
சங்கரனின் திருமகனே! ஆறுமுகன் சோதரனே!
காலமெல்லாம் களிப்புடனே இவ்வுலகில் நாம் வாழ!
நீராவியடி உறையும் ஐங்கரனே போற்றி! போற்றி!

இராகுலன்

உடல்நலக்குறைவுக்குள்ளான நிலையில்

# காணாமல்போன மீனவர் கடற்படையினரால் மீட்பு

(கரணவாய்)

கடற்றொழிலுக்குச்சென்று காணாமல்போன மீனவர் கடற்படையினரால் மீட்கப்பட்டதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் கடற்றொழிலுக்குச் சென்ற பொலிகண்டியைச் சேர்ந்த அன்ரன் ரஜீவன் (வயது-26) என்பவர் தொழில் முடித்து கரை திரும்பவில்லை.

அவர் காணாமல் போயுள்ளமை தொடர்பில் அன்றைய தினமே வல்வெட்டித்துறை பொலிஸில் முறையிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு இலங்கை மீனவர் ஒருவர் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதாக இந்திய மீனவர்களால் இந்திய கடலோரப் படைக்கு அறிவிக்கப்பட்டது.

இத்தகவலை அவர்கள் இலங்கை கடற்படைக்கு அறிவித்ததையடுத்து அப்பகுதிக்கு சென்ற இலங்கை கடற்படையினர் அவரை பாதுகாப்பாக மீட்டு வந்தனர்.

மூன்று தினங்கள் உணவின்றி இருந்தமையால் உடல்நலக் குறைவுக்குள்ளான அவர் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-12)

# சிறைச்சாலைகளை காண்பித்து எம்மை அச்சுறுத்த முடியாது

## உதய கம்மன்பில தெரிவிப்பு

சிறைச்சாலைகளைக் காண்பித்து எம்மை அச்சுறுத்த முடியாது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள விசேட விசாரணைப் பிரிவில் முன்னிலையாகியபோது ஊடகங்களிடம் நேற்று அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்கூறுகையில்

நான் அரசியலில் சுமார் பதினாறு ஆண்டுகள் செயற்பட்டு வருகின்றேன். பொய் சொல்லி, களவாடி, ஊழல் மோசடிகளில்ஈடுபட்டதில்லை.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அமைச்சர் ஒருவர் சாக்கடையில் என்னை இழுத்துப் போட முயற்சிக்கின்றார்.

சிறைச்சாலைகளை காட்டி எம்மை அச்சுறுத்த இந்த அரசாங்கம் முயற்சித்தால் அது வெறும் கனவு என்பதனை புரிந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கம்மன்பில போலி ஆவணங்களைத தயாரித்து தனது பங்குகளை விற்பனை செய்தார் என அவுஸ்திரேலிய பிரஜையான பிரயன் ஜோன் என்பவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பிலேயே நேற்றைய தினம் உதய கம்மன்பிலவிடம்பொலிஸ விசேட விசாரணைப் பிரிவினர் நான்கு மணித்தியாலங்கள் விசாரணை நடத்தியிருந்தனர். (செ-12)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்





ஒருவேளை புகை குடிப்பதற்கு வேண்டிய புகையிலையைத் தயாரித்துக் கொடுத்தாவது ஒரு மனிதனுக்குப் பணிசெய்தல் இலட்சக் கணக்கான தியானங்களைவிட மிக மிக மேலானது என்பதை அறியும் காலமும் ஒருவருக்கு வரும்.

என்னைத் தொடாதே என்பது உனது கொள்கையாகவும் பொங்கல் பானை உனது தெய்வமாகவும் இருக்கும்வரை ஆன்மீக முன்னேற்றம் உனக்குக் கைகூடாது.

எந்தச் செயலின் பயனும் நன்மை, தீமைகளின் கலப்பாகும். தீமை கலவாத நற்செயல் எதுவும் இல்லை. தீயைச் சூழும் புகைபோல் சிறிதாவது தீமை எப்போதும் செயலை ஒட்டியிருக்கின்றது. மிகப் பெரு நன்மையையும் மிகக் குறைவான தீமையையும் தரும் செயல்களையே நாம் செய்யவேண்டும்.

# யாழின் கிரிக்கெட் கில்லாடியானது கொக்குவில் காமாட்சி வி. கழகம்





யாழின் கிரிக்கெட் கில்லாடிக்கான கிண்ணத்தை கைப்பற்றியது கொக்குவில் காமாட்சி விளையாட்டுக்கழகம். புலோலி இளைஞர்கள் விளையாட்டுக்கழகம பெருமையுடன் நடத்திய 40 இற்கு மேற்பட்ட அணிகள் பங்குபற்றிய கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய மல்லாகம் ஸ்ரீ முருகன விளையாட்டுக்கழகம்மற்றும்கொக்குவில்காமாட்சிஅணிகள் வடமராட்சி மண்ணில் புற்றளை மாவில் மைதானத்தில் இறுதிப் போட்டியில் சந்தித்து கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் காமாட்சி அணித் தலைவர் சிந்து துடுப்பெடுத்தா தீர மானித்தார். அந்த வகையில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 94 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு 95 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மல்லாகம் ஸ்ரீ முருகன் அணி காமாட்சி வீரர்கள் சிந்து மற்றும் அருணின் வேகத்தில் 9 ஓவர்களில் சகல விக்கெட்டுகளை இழந்து 31 ஓட்டங்களை பெற்று தோல்வியை தழுவியது. யாழின் கிரிக்கெட் கில்லாடிக்கான கிண்ணத்தையும் பணப்பரிசையும் தன்வசமாக்கியது கொக்குவல் காமாட்சி விளையாட்டுக் கழகம்.

ஆட்ட நாயகனாக 3 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுகளை கைப்பற்றிய காமாட்சி வீரர் அருண் தெரிவானார். தொடர் ஆட்ட நாயகனாக மல்லாகம் ஸ்ரீமுருகன் வீரர் மகிழன் 5 போட்டிகளில் 161 ஓட்டங்களையும் நான்கு விக்கெட்டுகளையும் கைப்பற்றி அக்கிண்ணத்தை தன்வசப்படுத்தினார். (க)

## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

நெல்லை சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் மென்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 8 பேர் 6 ஓவர்கள் கொண்ட மேற்படி போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் வீனஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வெற்றி பெறும் அணிக்கு பெறுமதியான வெற்றி கேடயம் வழங்கப்படும் .

அனுமதி கட்டணமாக ஆயிரத்து இருநூறு அறவிடப்படும்.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 076 643 0250, 077 526 9694, 077 408 2059, 077 393 5566 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (கு)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டி த்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வட மாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தீவகம் மெலிஞ்சிமுனை விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

◆◆◆◆◆◆◆◆◆

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வட மாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவாலி சென். பீற்றர் விளையாட்டுக்கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணியும் மோதவுள்ளது.(கு)

## ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் வெற்றி



ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் லீக்சுற்று ஆட்டங்கள் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து நாவாந்துறை சென்நீக்கிலஸ் அணி மோதியது.

காலிறுதிக்கு முன்னேற இரு அணிகளுக்கும் இப்போட்டி முக்கியமாகையால் போட்டி பரபரப்பாக இருந்தது.

கில்லறி அணி வெற்றிபெற்றால் மட்டுமே காலிறுதிக்குத் தகுதிபெற முடியும் என்பதனால் இப்போட்டியின் ஆரம்பம் முதல் கோல் போடும் முனைப்பில் ஆட்டத்தை மேற்கொண்டது. எனினும் ஆரம்பத்தில் கிடைத்த வாய்ப்பினை நிரஞ்சன் (றஞ்சா) தவறவிட்டார்.

இரண்டாவது பாதியாட்டம் முழுவதும் இரு அணிகளும் கடுமையாக மோதின. இந்நிலையில் சென்நீக்கிலஸ் வீரர் அமிலன் ஆரம்பத்தில் கிடைத்த இரு கோல் வாய்ப்புக்களை விரைவாக அடிக்காது தாமதமாக்கி அவற்றை வீணடித்தார். எனினும் அடுத்த சில நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி கோலடித்தார்.

ஆட்ட இறுதிப் பகுதியில் கிடைத்த பனால்டி வாய்ப்பை கில்லறி அணி கோலாக்க மேலும் இறுதி நிமிடங்கள் பரபரப்பை ஏற்படுத்தின.

கடைசிவரை கில்லறி அணி போராடிய போதும் போட்டியை வெற்றிகொள்ள முடியவில்லை. இதனால் 1:1 என்ற சமனிலை அடிப்படையில் ஏற்கனவே நடைபெற்ற (சென்நீக்கிலஸ் எதிர் பாடுமீன்) போட்டியிலும் சமனிலை ஆனதால் 2 புள்ளிகளுடன் D பிரிவில் இரண்டாவது அணியாக காலிறுதிக்கு முன்னேறியது சென். நீக்கிலஸ் அணி.

போட்டியின் ஆட்டநாயகனாக சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக வீரர் அமிலன் தெரிவானார். (க)

## கழுகுகளின் உதைபந்தாட்ட தொடர்; பொம்மர்ஸை வீழ்த்தியது கொலின்ஸ்




பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் 08.06.2016 நடைபெற்ற போட்டியில் கொலின்ஸ் வி.கழகத்தினை எதிர்த்து பொம்மர்ஸ் அணி மோதியது.

மிக மிக விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் போட்டி ஆரம் பமாகி முதல் பாதியின் 18 ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணியின் பா. விஷ்ணு காந்தால் (விஸ்ணு) மிகவும் அருமையான கோல் போடப்பட்டது. ஆட்டம் மேலும் சூடு பிடிக்க தனக்கு கிடைத்த பந்தினை பொம்மர்ஸ் அணியின் சாரங்கனால் கோலாக மாற்றப்பட்டது. இத்துடன் முதல் பாதியில் விறுவிறுப்பாக முடிவடைய இரண்டாம் பாதியாட்டம் ஆரம்பமாகியது. மேலும் விஷ்ணுகாந்தால் (விஷ்ணு) ஒரு கோல் போடப்பட்டு 2:1 என்ற கோல் கணக்கில் கொலின்ஸ் அணியினர் வெற் றியை தன்வசப்படுத்தினர்.

இந்த போட்டியின் ஆட்டநாய கனாக பா.விஷ்ணுகாந் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் வெற்றி பெற்ற கொலின்ஸ் அணியினருக்கு கழுகுகள் அணியின் மூத்த வீரர் அ.நிர்மலனால் ஆயிரம் ரூபா பணப்பரிசும் ஆட்ட நாயகனுக்கு பதக்கமும் வழங்கப்பட்டது. (கு)

## திருக்குமரன் உருத்திரபுரம் அடுத்த சுற்றுக்கு தகுதி

எவரெஸ்ட் வி.க நடத்தும் வட மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 11.06.2016 நடைபெற்ற முதலாவது போட்டியில் புத்தூர் விக்னேஸ்வரா எதிர் உரும்பிராய் திருக்குமரன் மோதியதில் திருக்குமரன் பனால்டி மூலம் வெற்றி பெற்றுள்ளது.

அடுத்த போட்டியில் உருத்திரபுரம் எதிர் கொக்குவில் பொற்பதி மோதியதில் உருத்திரபுரம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. (கு)

## நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்தமாக உதைபந்தாட்ட போட்டி- இளங்கதிர் வெற்றி

சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் மறைந்த உறுப்பினர் நடராசா வைத்திலிங்கம் (வைத்தியப்பா) ஞாபகார்த்தமாக 2 ஆவது வருடமாக நடத்தும் சுழல் கிண்ண உதைபந்தாட்ட தொடர் நடைபெற்று வருகின்றது.

நடைபெற்ற முதலாவது போட்டியிலே கடந்த வருடம் வைத்தியப்பா ஞாபகார்த்த சுழல் கிண்ணத்தை வென்ற நடப்புச் சம்பியன் இளங்கதிர் அணியுடன் சைனிங்ஸ் அணி மோதியது. அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இளங்கதிர் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு நுழைந்தது.

ஆட்டநாயகன் விருதினை இளங்கதிர் வீரன் பிரசாந் பெற்றார். அவருக்கான பதக்கத்தினை சைன்னிங்ஸ் முன்னாள் தலைவர் ரவிச்சந்திரன் வழங்கி கௌரவித்தார். (கு)

## சகல சுகாதார...

எச்.ஐ.வி தொற்றை தடுப்பதற்கான வேலைத் திட்டத்தில் அது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றைய தினம் யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்றது. அதன் போதுதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய எச்.ஐ.வி பரிசோதனை தினம் எதிர்வரும் யூன் மாதம் 28 ஆம் திகதி "இன்றே பரிசோதியுங்கள்" எனும் தொனிப் பொருளில அனுஷ்டிக்கப்படவுள்ளது. வட பகுதியில் எச்.ஐ.வி தொற்று ஏற்படக்கூடிய ஆபத்து அதிகளவில் காணப்படுவதனால் இப்பரிசோதனை செயற் திட்டத்தையும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

அந்த வகையில் யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் விசேடமாக பரிசோதனை முகாம் அமைத்துள்ளளோம். மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் அதிகளவான முகாம்கள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் 65 முகாம்கள் அமைக்கவுள்ளதுடன் மேலதிகமாக யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள பாலியல் தடுப்பு நோய் சிகிச்சைப் பிரிவிலும் மார்பு நோய் தடுப்பு பிரிவிலும் பரிசோதனை முகாம் அமைக்கப்படவுள்ளது.

இதில் பலரும் தன்னார்வத்துடன் வந்து பரிசோதித்து கொள்ளமுடியும். பயிற்றப்பட்ட அலுவலர்கள் மூலம் பரிசோதிக்க விரும்புவர்களுக்கு உடனடியாகவே இரத்தம் பரிசோதிக்கப்படும். இலகுவான முறையில் பரிசோதனை மேற்கொள்வுள்ளப்படவுள்ளது.

எனவே நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகத்துடன் இருப்பவர்கள் உறுதிப்படுத்தி கொள்ள முடியும். இதற்கென மருத்துவபீட மாணவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பூரணமாக இரகசியம் பேணப்படுவதுடன் நோயாளருக்கான சிகிச்சை மாதாந்தம் விசேட நிபுணரினால் வழங்கப்படுகிறது. மருந்து சிகிச்சையுடன் அவர்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான சில உதவிகளும் ஒழுங்கு படுத்தப்பட்டு வழங்கப்படுகிறது.

தேவையான போது நேரடியாக வந்து ஏச்.ஐ.வி பரிசோதனை செய்து முடிவுகளைப் பெற்றுக் கொள்ளும் வசதியுள்ளது. நோய் மற்றும் நோய் நிலைமை (Prevalence) தொடர்பான தகவல்களை எப்போதும் பெற்றுக் கொள்ள முடியும்.

ஏச்.ஐ.வி பரிசோதனை செய்து பார்ப்பதால் எது வித தீமையும் ஏற்படப் போவதில்லை. மாறாக நன்மையே கிடைக்கும். யாருக்காவது எப்போதாவது பாதுகாப்பற்ற உடலுறவோ, இரத்தப் பரிமாற்றமோ இருந்தால் ஏச்.ஐ.வி பரிசோதனை செய்து கொள்வது நல்லது. தொற்றுள்ளவர்கள் சரியான முறையில் சிகிச்சையை பெற்று சராசரி மனிதர்கள் போல வாழ்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்று தொடர்பாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.நந்தகுமார் கருத்து தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தை பொறுத்தவரையில் கடந்த காலங்களில் சரியான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை. கடந்த 2014 ஆம் ஆண்டு புதிதாக 12 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டு ஒரு நோயாளி இனங்காணப்பட்டுள்ளார். யாழ் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக பல மாவட்டங்களில் இருந்து வருகிறார்கள்

முக்கியமாக கர்ப்பிணித் தாய்மாருக்குரிய பரிசோதனை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். 2015 ஆம் ஆண்டு அனைத்து கர்ப்பிணித் தாய்மாரும் எச்.ஐ.வி பரிசோதனைக்கு உட்டபடுத்தப்பட்டனர் அதில் ஒருவர் கூட எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகவில்லை. காசநோய் தொற்றுக்குள்ளானவர்கள் ஊடாக எச்.ஐ.வி தொற்று ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளதனால் அவர்கள் அனைவரையும் நாம் பரிசோதனை செய்து வருகிறோம். இரத்த வங்கியில் கடந்த வருடம் 5 ஆயிரத்து 600 இரத்த கொடையாளிகளை எச்.ஐ.வி பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளோம்.

யாழ் மாவட்டத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு அண்ணளவாக 16 ஆயிரத்து 500 பேருக்கு எச்.ஐ.வி பரிசோதனை மேற்கொண்டுள்ளோம். அதில் ஒருவர் மட்டுமே எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானதாக இனங்காணப்பட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இதுவரை பதிவுசெய்யப்பட்டவர்களில் 25 பேர் எச்.ஐ.வி தொற்று இருப்பதாக பதிவு செய்யப்பட்டு அதில் 3 பேர் இறுதிக்கட்டத்தில் இனங்காணப்பட்ட காரணத்தினால் அவர்கள சிகிச்சை வழங்க முதலே இறந்துவிட்டனர். மற்றைய ஒருவர் வெளிநாட்டவர். ஆவர் தற்போது இங்கு இல்லை. மிகுதியாக உள்ள 21 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதில 14 பேர் ஆண்களும் 11 பேர் பெண்களாக உள்ளனர்.

இதில் கணவன் மனைவியாக இருந்த 9 பேருக்கும் பலருடன் உறவில் இருந்த 15 பேரும், வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் 9 பேரும் உள்ளூரில் இருந்து தொற்று இனங்காணப்பட்டவர்கள் 6 பேரும் உள்ளடங்குகின்றனர்.

20 தொடக்கம் 30 வயதுடையவர்கள் 4 பேரும் 30 தொடக்கம் 40 வயதினர் 8 பேரும், 40 தொடக்கம் 50 வயதுடையவர்கள் 9 பேரும் 50 தொடக்கம் 60 வயதுடையவர்கள் 4 பேரும் உள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் கல்வியறிவு அதிகளவில் உள்ளவர்களே ஆவர். இவை எமக்கு கிடைத்த தரவுகள் மாத்திரமே. ஆனால் இதைவிட பன்மடங்கானவர்கள் தொற்றுக்குள்ளாகி இருக்கலாம் பரிசோதனை செய்வதன் மூலம் தொற்று ஏற்பட்டுள்ளதா இல்லையா என்பதை உறுதி செய்து கொள்ள முடியும் எனஅவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வட மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி யூட், யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.நந்தகுமார், பாலியல் தடுப்பு பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் சத்தியாகேரத், யாழ் போதனா வைத்தியசாலை பாலியல் தொற்றுநோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி தாரணி குருபரன், சுகாதார வைத்திய அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (செ-9)

## சர்வதேச நீதிபதி...

யுத்தக் குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை என்பதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தெளிவான நிலைப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்புடன் இலங்கையில் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணை நடத்தப்படும் என சில தரப்பினர் போலியான பிரசாரம் வருகின்றனர்.

ஆனால் சர்வதேச நீதிபதிகள் அழைக்கப்படமாட்டார்கள் எனவும் தொழில்நுட்ப உதவி பெற்றுக்கொள்ளப்படும் எனவும் ஜனாதிபதி ஏற்கெனவே அறிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே உள்ளக விசாரணை தலையீடு இன்றி நடைபெறும் . மேலும் வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்படுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இராணுவத்தினரை எவரும் தங்களுடைய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. படையினர் நாட்டை பாதுகாப்பதில் பங்களிப்பினை வழங்குவர் என அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## இலங்கையர்...

இவ்வாறு ஜெனிவாவில் நேற்று திங்கட் கிழமை ஆரம்பமான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 32ஆவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன்தனதுரையில் குறிப்பிடுகையில்,

"நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் கடப்பாட்டை நிறைவேற்றும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒரு விரிவான மூலோபாயம் தேவை.

ஒருங்கிசைந்த மற்றும் வரிசை முறைப்படி பல்வேறு செயல்முறைகளைக் கொண்டதாக இந்த மூலோபாயம் செயற்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பான தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் போது அனைத்து இலங்கையர்களினதும் பங்களிப்பு அவசியமானது.

ஐ.நா தீர்மானம் மற்றும் தமது பணியகத்தின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். சர்வதேச மனித வுரிமை சட்டங்களுக்கு எல்லா அரசாங்கங்களும் முழுமையான மதிப்பை அளிக்க வேண்டும்" என அவர் தனதுரையில் மேலும குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தக் கூட்டத் தொடரில் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பான வாய்மூல அறிக்கையை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் எதிர்வரும் 29ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார்.

இதன்போது இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பாக தான் மேற்கொண்ட மதிப்பீடு மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகள் குறித்து அவர் விளக்கம் அளிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## ஐ.நா ஆணையாளரி...

நல்லிணக்கத்துக்கும் அரசியல் தீர்வுக்கும் அடித்தளமிட முடியாத சூழலே இலங்கையில் காணப்படுகிறது. இந்நிலையில், இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்திற்குப் பின்னர் மீண்டும் சிங்கள கடும்போக்குவாதிகள் ஆட்சிப் பொறுப்பேற்றால் நல்லிணக்கம் உருவாவது இன்னும் பலவருடங்களுக்குத் தள்ளிப் போகும். தமிழர்கள் இன்னும் பல அடக்கு முறைகளை எதிர்கொள்ள நேரிடும். வெளிப் படைக்கு நல்லாட்சி அரசு நிலைமாறுகால நீதிக்காக பலதிட்டங்களை முன்னெடுப்பது போல் தோன்றினாலும் அடிப்படையில் ஐ.நா.வினதும் மனித உரிமை ஆர்வமுள்ள சர்வதேச நாடுகளினதும் நேரடிப் பங்களிப்பின்றி அதனால் முன்னேற முடியாத நிலைமையே உள்ளது.

மறுபுறம், தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்துடனோ அல்லது எதிர்காலத்தில் அமையக் கூடிய அரசாங்கங்களுடனோ வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் உரிமை சார்ந்து பேரம் பேசக் கூடிய அரசியல் அதிகாரமிக்க சக்தி தமிழர் தரப்பில் கிடையாது. மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படாத நிலையில் இன்றைய வடமாகாண சபையாலும் பெயருக்குத் தான் மாகாண சபை பிரதிநிதித்துவத்தை வகிக்க முடிகிறது. மாகாண சபைக்குரிய உரிமைகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைமைத்துவத்தை வகித்தாலும் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் அவர்களுக்குக் கிடையாது.

அடிப்படையில் வடக்கு கிழக்கு தமிழர்கள் தமக்கான உரிமைகளை உத்தரவாதப்படுத்துவற்கான காத்திரமான அரசியல் பிரதிநிதித்துவம் அற்றவர்களாக உள்ளனர். இந்நிலையில், நிலைமாறுகால நீதி முன்னெடுப்புகளில் தமிழர் சார்ந்து அதிகாரபூர்வமாக கேள்வி எழுப்பக்கூடிய தரப்பொன்று இல்லை.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, வடக்கு கிழக்கு தமிழர் சார்ந்து ஒரு பிரதிநிதித்துவ ஒத்துழைப்பாளராக இலங்கையின் நிலைமாறுகால நீதி முன்னெடுப்புகளில் பங்கேற்க ஐ.நா. முன்வர வேண்டுமெனக் கோருகிறோம். ஐ.நா.வுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள இலங்கை அரசாங்கத்துக்கு ஐ.நா. அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

இலங்கையில் நிலைமாறுகால நீதிக்கான ஐ.நா - இலங்கை கூட்டுப்பொறிமுறையாக இது அமைய வேண்டும். ஐ.நா.வினால் நியமிக்கப்படும் சட்ட-அரசியல் நிபுணர் குழுவின் தலைமைத்துவத்தில் இலங்கை நிபுணர்களும் அடங்கிய கட்டமைப்பாக இது அமைய வேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கை என்பது சட்ட ரீதியாக கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருப்பதாலேயே நாம் புரிந்துணர்வு உடன்படிக்கையை வலியுறுத்துகிறோம்.

இத்தகைய ஒரு பொறிமுறையால் மாத்திரமே இலங்கையில் உண்மையான அர்த்தத்தில் நிலைமாறுகால நீதியை முன்னெடுக்கவும் நல்லிணக்கத்தையும், நிலையான சமாதானத்தையும், தமிழர்களுக்கு உரிய அரசியல் தீர்வையும் ஏற்படுத்த ஒத்துழைக்கவும் முடியும் எனக்காண்கிறோம்.

ஐ.நா.வினால் இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளுக்காக வழங்கப்படவுள்ள 10-15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையான ஐ.நா. சமாதான நிதிக்கு (UN Peace Fund)பொறுப்புக்கூறும் கடப்பாடு அதை அங்கீகரிக்கும் ஐ.நா செயலாளர் நாயகம் அவர்களுக்கும் உண்டு. எனவே நிலையான சமாதானத்துக்கான நிலைமாறுகால நீதி முன்னெடுப்புகளை உரிய முறையில் அமுல் படுத்த ஐ.நா.வும் பங்குதாரரான பின் நிதி வழங்க அங்கீகரிக்க வேண்டும்.

ஐ.நா. - இலங்கை கூட்டுப் பொறிமுறைக்கு உட்பட்டதாக பின்வரும் கட்டமைப்புகள் அடங்க வேண்டும். இவ் ஒவ்வொரு கட்டமைப்பும் சர்வதேச நிபுணர்களை தலைமைத்துவமாகக் கொண்டு இலங்கை நிபுணர்களையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

வடக்கு கிழக்கு தமிழர் அரசியல் உரிமை மற்றும் அரசியல் அதிகாரம் குறித்து தீர்வுத் திட்டத்தை முன்னெடுக்கும் குழு, போர்க் குற்ற விசாரணைக்கான கலப்பு நீதிமன்றம், பயங்கரவாத தடைச் சட்டத்தின் காரணமாக காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த விசேட அலுவலகம், வடக்கு கிழக்கில் இயல்புநிலையை ஏற்படுத்துவதற்கான கண்காணிப்பகம், மீள் குடியேற்றமும் காணி உத்தரவாதமும்

மக்கள் பாதுகாப்பு, படை விலகல், ஒட்டுக் குழுக்களின் செயற்பாடுகளை முற்றாகத் தடுத்தல், சீரான பொலிஸ் மற்றும் சிவில் நிர்வாகம், சிங்கள பௌத்த விஸ்தரிப்பையும் அத்துமீறிய காணி சுவீகரிப்பையும் தடுத் தல், வடக்கு கிழக்கு பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான அலுவலகம்.

போரினால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்கள் பெற்ற கடன்களை (அரச நிறுவனங்களிடம், அரச சார்பற்ற நிறுவனங்களிடம் மற்றும் வட்டிக்கு வழங்கும் தனியார் நிறுவனங்களிடம்) ரத்து செய்து அவர்களை கடன் சுமையிலிருந்தும் தொடர்ச்சியாக கடனாளியாவதிலிருந்தும் விடுவித்தல்

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் உள்நாட்டு வெளிநாட்டு வளச் சுரண்டலை தடுத்தல், வடக்கு கிழக்கு வாழ் மக்களில் அதிபெரும்பான்மையானோர் கிராமிய மக்களாவர். தீவிர நகரமயமாக்கல் திட்டங்களும் நகரமயப்பட்ட பொருளாதார முன்னெடுப்புகளும் கிராமிய மக்களின் வாழ்வை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும். எனவே, சூழலியல் நியாயங்களையும் கருத்திற்கொண்டு கிராமிய பொருளாதார முறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் நிலையான பொருளாதார அபிவிருத்திக்கு அடித்தளமிடல்.

முன்னாள் போராளிகள் மீதான நெருக்கடிகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. கைதுகள், தொடர்கண்காணிப்புகளுக்கு உள்ளாகின்றனர். அவர்கள் வெளிமாவட்டங்களுக்கு சென்று வந்தால் விசாரிக்கப்படுகின்றனர். இவர்களின் வங்கிக் கணக்குகளும கண்காணிக்கப்படுகின்றன. குறிப்பாக முன்னாள் பெண் போராளிகளின் வீடுகளுக்கு புலனாய்வாளர்கள் அடிக்கடி செல்வது கப்பம் கேட்டு நிர்ப்பந்திப்பது நடைபெறுகிறது.

கிராம மட்டங்களில் சிவில் சமூக செயற்பாடுகள் தொடர்ந்தும் புலனாய்வாளர்களாலும இராணுவத்தினராலும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது ஊழியர் விபரங்களையும் வேலைத்திட்டங்களையும் நிதி வழங்குநர்கள் பற்றிய விபரங்களையும் புலனாய்வாளர்களுக்கு வழங்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கூட்டங்கள் நடைபெறும்போது புலனாய்வாளர்கள் உள்ளிடுவதும் விசாரிப்பதும் இன்றுவரை தொடர்கிறது.

போர் முடிந்து 07 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. இன்று வரையில் இராணுவமயமாக்கமும் சிங்கள பௌத்த விஸ்தரிப்புகளும் சிறிதேனும் மாற்றமடையவில்லை. சிவில் நிர்வாகத்திலும் பொருளாதாரத்திலும் இராணுவத்தின் தலையீடும் ஆதிக்கமும் இன்றுவரையிலும் தொடர்கிறது. என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-4)

## அனர்த்தநிலை...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவின் பேரில் அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையின் மேல், மத்திய, வடமேல், சப்ரகமுவ, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்கள் அனர்த்த நிலைமை பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயலாளர் பீ.பீ.அபேயகோன் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாகாணங்களில் இயற்கை அனர்த்தங்களால் பேரிழிவுகள் ஏற்படும் போது மக்களின் பாதுகாப்பு, மீட்புப் பணிகள் மற்றும் அவசர நிவாரணப் பொருட்களை வழங்குதல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற அனர்த்தங்களினால் இந்த மாகாணங்களில் 70 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டு தமது வாழ்விடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

இக்குடும்பங்களில் சுமார் 2500 குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்த நிலையிலும், இருப்பிடங்களுக்கு திரும்ப முடியாத நிலையிலும் தற்காலிக இடங்களிலே தங்கியுள்ளன.

இந்த இயற்கை அனர்த்தத்தில் சிக்கி 89 பேர் உயிரிழந்துள்ளதாகவும், நிலச்சரிவுகளில் புதையுண்டவர்களில் 102 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## சிறுவர் விடயங்களில்...

செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் பொலநறுவை றோயல் கல்லூரியில் இடம்பெற்ற தேசிய சிறுவர் சபையை ஸ்தாபித்தல் மற்றும் தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் சிறுவர்கள் குறித்த சமூகத்தின் கரிசனை பெருமளவு குறைவடைந்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, சிறுவர்களைப் பாதுகாப்பது எல்லோருடையதும் பொறுப்பாகும் என்றும் குறிப்பிட்டார்.

தனது பிள்ளை மீது காட்டும் கரிசனையை ஏனைய பிள்ளைகள் மீதும் காட்டுவது முழு சிறுவர் தலைமுறையினதும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதாக அமையும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சமூகத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள், சவால்களுக்கு முகம்கொடுத்து வாழ்க்கையை வெற்றிகொள்ளும் விதம் தொடர்பாக ஜனாதிபதி பிள்ளைகளுக்கு இதன்போது விளக்கினார்.

இந்த நிகழ்வின் போது தேசிய சிறுவர் சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தையும் ஜனாதிபதி அங்குரார்ப்பணம் செய்து வைத்ததுடன், அச்சபையின் தற்போதைய தலைமைப் பதவியை வகிக்கும் மாணவரினால் சிறுவர் சபை அமைக்கப்பட்டதனை குறிக்கும் சன்னஸ் பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அமைச்சர் சந்திராணி பண்டார, வடமத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன, வடமத்திய மாகாண ஆளுநர் பீ.பீ. திசாநாயக ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-12)

## என்னை...

கோரிக்கை விடுத்து வருவதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் வாழும் மக்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் என்னை போட்டியிடுமாறு கோருகின்றனர். நாடு தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ளது. நான் ஜனாதிபதியாக வந்தால், தற்போதைய சிக்கலை சரியான வழிக்கு கொண்டு வருவேன். நாங்கள் தற்போது பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் பின்நோக்கி சென்று கொண்டிருக்கின்றோம். அனைத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. மக்கள் என்னை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு கோரியிருந்தாலும் நான் இன்னும் தீர்மானிக்கவில்லை.

எனினும் அது சந்தர்ப்ப சூழ்நிலைகளை பொறுத்தது. ஆனால், என்னிடம் தற்போது அப்படியான திட்டங்கள் எதுமில்லை. நான் அரசியல்வாதி அல்ல. நாட்டுக்கு தற்போது சரியான தலைமைத்துவம் இல்லை என மக்கள் கருதுகின்றனர். அது அவர்களின் நம்பிக்கை. இது என்னுடைய கருத்து அல்ல. மக்களுக்கு தலைமை வழங்க தற்போது எவரும் இல்லை. நாட்டுக்கு என்ன நடக்கிறது என்பது தமக்கு தெரியவில்லை என மக்கள் கூறுகின்றனர். சில ஜனாதிபதிகள் தற்போது யாழ்ப்பாணத்திற்கு சென்று மக்கள் கூட்டங்களில் உரையாற்றுகின்றனர். நாங்களே அதற்கான வழியை ஏற்படுத்திக்கொடுத்தோம் ஆனால் அவர்கள் அதை மறந்து பேசுகின்றனர் என கோத்தபாய தெரிவித்துள்ளார். (செ-12)

## வடக்கில் இராணுவம்...

க்கவை சந்திக்கும் போது இதனை வலியுறுத்தவுள்ளதாக முதலமைச்சர் நேற்று ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும் வடக்கில் உள்ளவர்கள் மீண்டும் போரொன்றை ஆரம்பிப்பார்கள் என்ற சந்தேகத்திலேயே, படைதரப்பை மத்திய அரசாங்கம் வடக்கில் நிலைக்கொள்ளச் செய்துள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார். (செ-9)

## மத்திய வங்கி...

அர்ஜுன் மகேந்திரன் குற்றமற்றவர் என உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. உச்ச நீதிமன்றில் சில தரப்பினர் மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக குற்றம் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

உச்ச நீதி மன்றம் ஏற்கெனவே மத்திய வங்கி ஆளுநர் குற்ற மற்றவர் என கூறியிருந்தது.

அவ்வாறான ஓர் பின்னணியில், மத்திய வங்கியின் ஆளுநருக்கு அடிக்கடி குற்றம் சுமத்துவது பாரிய குற்றமாகும்.

எனக்கு தெரிந்த வகையில் மத்திய வங்கியின் ஆளுநர் தொடர்ந்தும் பதவி வகிப்பார் என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். (செ-12)

## ஐ.நா...

ஒத்துழைப்பாளராக இலங்கையின் நிலைமாறுகால நீதி முன்னெடுப்புகளில் பங்கேற்க ஐ.நா. முன்வர வேண்டுமெனக் கோரி ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசைனுக்கு அறிக்கை ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைத் தமிழர்கள் குறித்த ஐ.நாவின் நிலைப்பாடானது போர்க்குற்ற விசாரணை என்பதற்குள் மாத்திரம் மட்டுப்பட்டுள்ளது. இது ஐ.நா. தனது அனைத்துலக மனித உரிமைக் கோட்பாடுகளையும் மனித உரிமைச் சட்டங்களையும் முழுமையாக தனது அங்கத்துவ நாட்டு மக்கள் சார்ந்து முன்னேற்றுவதற்கு தடையாக உள்ளது. அவ்வகையில்,

இலங்கைத்தமிழ மக்கள் எதிர்நோக்கி வரும் அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் ஐ.நா. இலங்கையின நிலைமாறு கால நீதி முன்னெடுப்புகளில் நேரடி பங்குதாரராக வேண்டும். நிலைமாறுகால நீதிக்கான முன்னெடுப்புகளை முன்னெடுக்க முடியாத அரசியல் தடுமாற்றமும் வெளிப்படைத்தன்மையும் அற்றதாக தற்போதைய இலங்கை அரசாங்கம் உள்ளது.

அதனால்

23ஆம் பக்கம் பார்க்க....


வாகனம் வாடகைக்கு



அனைத்து வைபவங்களுக்கும் அழையுங்கள்

(C-4777)

07 66 88 99 06

தேவை

பேக்கரி நடமாடும் வாகனம் செலுத்துவதற்கு நன்கு அனுபவமுள்ள சாரதி தேவை.

வாகன அனுமதிப்பத்திரத்துடன் நேரில் சமுகமளிக்கவும்.

புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி வீதி
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(4941)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழி

- பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
- எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
- இலவசம்: படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
- யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்

ஆரம்பம் விரைவில், உடன் அழைத்துப் பதியவும்.
021 222 8093 6, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(4826)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையமும் ஜெற்லைனேஸ் விளையாட்டுக் கழகமும்

42 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர்கள் பரராஜசிங்கம் மகேஸ்வரி அவர்களது ஞாபகார்த்தமாக 9 பேர் கொண்ட 8 ஓவர் கிரிக்கெற் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத்திகதி 19.06.2016

- முதலாம் பரிசு - ரூபா 10000 + வெற்றிக்கிண்ணம் (Champions)
- இரண்டாம் பரிசு - ரூபா 5000 + வெற்றிக்கிண்ணம் (runner up)
- சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படும்.

அனுமதிக்கட்டணம் ரூபா 1000 மட்டுமே.

செயலாளர் : கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையமும் ஜெற்லைனேஸ் விளையாட்டுக் கழகமும். (4936)

தொடர்புகளுக்கு
தர்ஷன் - 077 074 7700
விஷ்ணு - 077474 7488

யாழில் புதிய பிரிவு
கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course

June 20
காலை 9.00 மணி முதல் 20, 21, 22, 23 ஆகிய நான்கு தினங்களில்

Smart Phone கள் உட்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்

10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால், ஆசன முன்பதிவு செய்யவும்.

2000 மாணவர்களுக்கு மேல் பயிற்சியளித்த முதல்தர ஆசிரியர்
Ganesh Sir

பெறுமதியான CERTIFICATE வழங்கப்படும்

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக இரகசியங்கள் அடங்கிய CD கையேடு வழங்கப்படும்.

ஆண் பெண் இருபாலாருக்கும் வயதெல்லை இல்லை ஆரம்ப அறிவு ஆங்கிலம் தேவையற்றது

ஆசன முன் பதிவுக் கட்டணம் 1000/-
பாடநெறி கட்டணம் 11,500/-

குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்கும் தேவையான அனைத்து தகவல்களும்.

iCS Education
77, Clock Tower Road, Jaffna
077-6131358 / 077 -3013060
(சி-4876)

British College of Higher Studies
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS Life Skills
வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.
100% பயிற்சி → 100% வெற்றி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935,0770365728
(சி-4875)

DIPLOMA IN SPOKEN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம்
18.06.2016 மாலை 3 மணி
(சனி,ஞாயிறு தினங்களில்
மாலை 3.00 - 5.30 வரை இடம்பெறும்)
(சி-4877)

வடமாகாணத்தின் தலைசிறந்த ஆங்கிலக் கல்லூரி
(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

E-CITY
College of English
City & Guilds
இல-372D, முதலாவது மாடி, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212217106, 0773400418, 0774924166, 0770610271


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.